கல்கி

KALKI 4.1.2004
ரூ.6.00





வளர்ச்சியால் வீழ்ச்சியா?

-தனுஷ் பேட்டி



புத்தாண்டு சிறப்பு தள்ளுபடி
கண்களே நம்ப மறுக்கும் விலைகள்!
ஸ்டீல்/உட் அலமாரிகள்
சோஃபா செட்ஸ்
டைனிங் செட்ஸ்
பெட்ரூம் ஃபர்னிச்சர்
சோஃபா-கம்-பெட்
வார்ட்ரோப்ஸ்
கிச்சன் கேபினட்ஸ்
என்டர்டெயின்மென்ட் செட்ஸ்
புத்தக அலமாரிகள்
டீக் உட் /
ரோஸ் உட் ஃபர்னிச்சர்
50% வரை தள்ளுபடி
Sathya
Furniture World
Since 1968
28.12.2003 - 18.01.2004
ஞாயிறு விற்பனை உண்டு
இந்தியாவின் மாபெரும் ஃபர்னிச்சர் கலைக்கூடங்கள் (20,000 ச.அடி)
மயிலாப்பூர் : பு. எண்: 139, இராயப்பேட்டை ஹை ரோடு, (சமஸ்கிருதக் கல்லூரி அருகில்) ✆: 2498 2930 / 31
பாடி : டி.ஏ.பி.சி. பில்டிங், 6 எம்.டி.எச். ரோடு, (டி.வி.எஸ். எதிரில்) ✆: 2654 4929
வேளச்சேரி : பாராமவுண்ட் பார்க், விஜயநகர் பஸ் நிலையம் அருகில், ✆: 2255 1129

உள்ளே...



நானும் என் ஊரும்! 21

-இயக்குனர் அழகம் பெருமாள்



“சிறை எனக்கு; தண்டனை உங்களுக்கு!” 36

குமரிச் சிறப்பிதழ் :
கட்டுரை, படங்கள் :
ஆர்.சி.ஜெயந்தன்

கல்கி
4.1.2004




கொச்சின் போனால் கும்மாங்குத்து! 24



“எங்க மாவட்ட மக்களை ஏமாற்ற முடியாது!” 4



அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



“தே.ஜ.கூ.யில் இருந்து வெளியேறுவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவு. தற்போதைய சூழலில் நிச்சயமாய் வெளியே வரமாட்டோம்”.

மத்திய அமைச்சரவையிலிருந்து வெளியேறுவதாக முடிவெடுத்ததற்கு முதல் நாள் இரவு, ஒரு முக்கிய தி.மு.க. பிரமுகர் சொன்னது இது. ஆனால் அதிரடியாக் மறுநாளே அமைச்சரவையிலிருந்து வெளியேறுவதாக அறிவித்துவிட்டார் கலைஞர்.



காத்திருக்கும் சோதனை!

மாறன் உடல் நலம் விஷயத்தில், பிரதமரைத் தவிர, அத்வானி உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்கள் குறைந்த பட்ச மனித உணர்வுகளைக் கூடக் காட்டாமல் போனதுதான் கலைஞரை மிகவும் வருத்தியதாம். இது மட்டுமல்லாமல், தி.மு.க.வை நோகடிக்கும் விதமாக ஜெயலலிதாவுக்கு ஆதரவாகச் செயல்பட்ட தமிழக பா.ஜ.க. தலைவர்களும், தி.மு.க. இப்படி முடிவெடுக்க, காரணமாக அமைந்துவிட்டனரென்று கூறுகிறார்கள்.

“மாறனின் உடல் நிலையால் இதுபோன்ற முடிவெடுக்கத் தாமதம் ஆனது” என்று கலைஞர் சொல்லியிருப்பதைக் குறிப்பிட்டுப் பேசிய ஒரு மூத்த திமுக. பிரமுகர், “மாறன் ஒன்றரை வருடத்திற்கு முன்பே விலகி விடுகிறேன்' என்றார். அதற்கு அவர் சொன்ன காரணம், பா.ஜ.க.வின் மறைமுகமான செயல்பாடுகள் தி.மு.க.வுக்கு எதிராக இருந்ததுதான். அப்போது வேண்டாம் என்று அவரை வற்புறுத்தி தொடரச் செய்தோம். இதுபோன்ற முக்கிய முடிவெடுக்கப் போகிறோம் என்று தெரிந்தும், அதைப் பற்றிக் கொஞ்சம்கூட கவலைப்படாமல், விமர்சனம் செய்யவும் துவங்கிவிட்டனர் பா.ஜ.க. தலைவர்கள்.

“மாறன் உடல்நிலையோடு தொடர்பு படுத்தாமல், அரசியல் ரீதியாகவே இந்த நடவடிக்கையைப் பற்றி மக்களிடம் விளக்க விரும்புகிறோம்” என்றார்.

அமைச்சரவையில் பா.ம.க. தொடர முடிவு செய்துவிட்டது. தி.மு.க.வைப் போல பா.ம.க.வுக்கு விலக வேண்டிய நிர்பந்தம் ஏதுமில்லை. அமைச்சர் வாய்ப்பு கிடைத்திருக்கும்போது, அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு செயல்பட விரும்புகிறது. மத்திய அரசின்மீது குற்றப் பத்திரிகை வாசித்துவிட்டு, தே.ஜ.கூ. அமைச்சரவையில் தொடருவதாக டாக்டர் ராமதாஸிடம் பேசினோம்.

"கூட்டணிக் கட்சிகளின் மத்தியிலும் பத்திரிகைகளிலும், பொதுவாக பா.ம.க.வின் நம்பகத் தன்மை பற்றி சந்தேகம் வந்து கொண்டே இருக்கிறதே?" என்றோம்.

ஏதோ நாங்கள் மட்டும்தான் தேர்தலுக்குத் தேர்தல் கூட்டணி மாறுவது போலச் சொல்கிறீர்கள். தமிழகத்தின் பிற கட்சிகளின் வரலாற்றை எடுத்துப் பாருங்கள். ஏதாவது காரணம் சொல்லிக் கொண்டு எப்படியெல்லாம் மாறியிருக்கிறார்கள் என்பது தெரிய வரும். பா.ம.க.வுக்கு இது போன்ற இமேஜை உண்டாக்கியிருப்பது பத்திரிகைகள் தான்.

ம.தி.மு.க.வுக்குப் பெரிய சங்கடம் வை.கோ 'உள்ளே' இருப்பது. தி.மு.க.வைப் போலவே கூட்டணியிலிருந்து வெளியே வந்தால், வை.கோ ரிலீஸாவதில் மத்திய அரசு 'கட்டை' போட்டுவிடப் போகிறதே என்ற தயக்கமும்தான். இதுதவிர, வை.கோ தி.மு.க.வுடன் அனுசரித்துப் போக விரும்பினாலும் ம.தி.மு.க.வில் 'தி.மு.க. எதிர்ப்பு என்பது உறுதியான நீரோட்டமாக, ஓடிக் கொண்டிருக்கிறது.

"எங்கள் எதிர்காலத்தையும் மனத்தில் வைத்துத்தான் முடிவு செய்வோம்" என்று நம்மிடம் ம.தி.மு.க. மூத்த தலைவர் சொன்னதில் நிறைய அர்த்தம் இருக்கிறது. அதே சமயம், வரும் பாராளுமன்றத் தேர்தலில் வென்ற இடங்களைத் தக்க வைத்துக் கொள்ள, தி.மு.க. அணியில் நீடிப்பதுதான் சிறந்தது என்பதையும் ம.தி.மு.க. தலைவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். இந்த இதழ் வெளிவரும்போது ம.தி.மு.க.வின் முடிவும் தெரிந்திருக்கும்.

தமிழகத்தின் தே.ஜ.கூட்டணியின் தலைவராக இருந்த கலைஞர், அதிரடி முடிவை எடுப்பதற்கு முன்பு, மற்ற தமிழக தே.ஜ.கூ. கட்சிகளான ம.தி.மு.க., பா.ம.க. ஆகியவற்றோடு கலந்து ஒருமனதாக முடிவெடுத்திருக்கலாம் என்னும் இப்படி தன்னிச்சையாக எடுத்த முடிவால் பா.ம.க.வும் ம.தி.மு.க.வும் கொஞ்சம் வருத்தத்தில் இருப்பதாகவும் சொல்கிறார்கள். "நாங்கள் போனாலும் பரவாயில்லை. காங்கிரஸ், கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து வெற்றிக் கனியைப் பறித்துவிடலாம் என்று கலைஞர் கருதுகிறார். காங்கிரஸ் கழுத்தை அறுக்கும் கட்சி என்பதை கலைஞர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்கிறார் ம.தி.மு.க. பிரமுகர் ஒருவர்.



பாராளுமன்றத் தேர்தலில் எப்படியாவது மூன்றாவது அணி அமைய வேண்டும் என்றும் 'நாற்பதும் நமக்கே' என்ற கோஷத்துடனும் திரைமறைவு வேலைகளில் அ.தி.மு.க. இறங்கியிருக்கிறதாகச் சொல்கிறார்கள். கலைஞருக்கு சோதனை காத்திருப்பதாகவும் சொல்கிறார்கள்.

- சஞ்சயன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

"எங்க மாவட்ட மக்களை ஏமாற்ற முடியாது!"



"தமிழ்நாட்டிலேயே அதிக கல்வியறிவு பெற்றவர்கள் எங்கள் மாவட்ட மக்கள்தான். ஆதலால் அவர்களை யாரும் சுலபமாக ஏமாற்றி விட முடியாது" என்கிறார் அமைச்சர் தளவாய் சுந்தரம்.

சரி, குமரி மாவட்ட மக்கள் பிரச்னைகளுக்கு என்ன தீர்வு கண்டிருக்கிறார் இவர்? கேட்டோம்.

"திமுக ஆட்சியில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எதுவுமே செய்யவில்லை. மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு வெறும் அரசாணை மட்டும் போட்டது தி.மு.க ஆட்சி. ஆனால் அம்மா வந்த பிறகுதான் இருபது கோடி நிதி ஒதுக்கினோம். வரும் கல்வியாண்டில் வகுப்புகள் துவங்கவிருக்கின்றன.

திருவள்ளுவர் சிலையை நிறுவி விட்டார்களே தவிர, அதை எந்தத் துறை பராமரிப்பது என்று தி.மு.க ஆட்சி தீர்மானிக்கவில்லை. செய்தித் துறை, பொதுப்பணித் துறை என்று சுற்றியடித்த விவகாரத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து, சுற்றுலாத் துறை பராமரிக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். உப்புக் காற்றில் சிலை பாதிக்கப்படாமல் இருக்க, ரசாயனக் கலவை பூசும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது தவிர, அந்தப் பகுதியையே ஒளி வெள்ளமாக்கும் அளவுக்கு பிளாஸ்டிக் மோல்டு பாதுகாப்புடன் விளக்குகள் பொருத்தியிருக்கிறோம்.

குமரி மாவட்டத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் மீனவர்கள்தான். அவர்களது நாற்பது வருட கோரிக்கை, தூண்டில் வளைவு அமைக்க வேண்டுமென்பது. சுமார் முப்பத்தியேழு கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவு, கடற்கரையோரமாக கிராமங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் மிகச் சுலபமாக தங்கள் படகுகளைக் கடலுக்குள் கொண்டு செல்லலாம். தேங்காய்ப் பட்டினம் மற்றும் குளைச்சலில் மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்த ஆய்வு நடக்கிறது. இதற்காக ஐந்து லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

குமரி மாவட்ட மக்களின் பெரிய பிரச்னையாக விளங்கிய மற்றொன்று, பதிவுத் துறை தொடர்பானது. அங்கே வீட்டைச் சுற்றி பெரிய அளவு தோட்டங்கள் உண்டு. சொத்துக்களை விற்கும்போது, தோட்டத்திற்கான நிலத்தின் மதிப்பை மூன்று மடங்கு அதிகப்படுத்தி கணக்கெடுத்து, பத்திரங்கள் (ஸ்டாம்பு கட்டணம்) வாங்க வேண்டுமென்ற நிலை இருந்தது. "ஆனால் அது போலத் தேவையில்லை. நிலத்தின் மதிப்பு என்னவோ, அதற்குப் பத்திரங்கள் வாங்கினால் போதும்" என்று அம்மா அரசு உத்தரவு போட்டிருக்கிறது. இது குமரி மாவட்ட மக்களுக்குச் செய்த பெரிய உதவியாகும்.

அமைச்சர் தளவாய் சுந்தரம் பேட்டி

முந்தைய அரசு ரப்பர் விவசாயிகளுக்குப் பணம் பாக்கி வைத்திருந்தது. இப்போது அந்தப் பாக்கியை பட்டுவாடா செய்து விட்டோம். ரப்பர் கழகம் லாபத்தில் இயங்கத் துவங்கியிருக்கிறது.

இங்குள்ள நான்கு அணைகளில் குறிப்பிட்ட அளவு தண்ணீர் இருந்தால் மட்டுமே, நெல்லை மாவட்டம் ராதாபுரம் பகுதிக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் விடப்படும். ஆனால் இந்த வருடம் தண்ணீர்

> **ஆக்கபூர்வமான பணிகள் நடப்பதைப் பார்த்து கடுப்படைந்து போயிருக்கும் எதிர்க்கட்சிகள், ஆறுகள் தூர்வாருவதில் ஊழல் என்று மேடைகளில் பேசுகின்றனர்.**



குறைவாக இருப்பதால் ராதாபுரத்திற்குத் தண்ணீர் விடப்படவில்லை. குமரி மாவட்ட விவசாயிகளின் தேவையும், குடிதண்ணீர் விநியோகத்தையும் இந்த விஷயத்தில் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் அரசு செயல்படும்.

தோவாளை மலர் மையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படுகிறது. முன்பிருந்ததைப் போல இப்போதும் விற்பனை நடைபெறுகிறதா என்பதும், மையத்திற்குத் தேவையான இடம் பற்றியும் ஆய்வு செய்து வருகிறோம். தோவாளை எனது சொந்த ஊர்... அங்குள்ள நிலை எனக்கு நன்றாகவே தெரியும்.

இப் பகுதி மக்கள் பெரும்பாலும் சாலைகள் போட வேண்டுமென்றும், குடிதண்ணீர் பற்றியும்தான் மனு கொடுக்கிறார்கள். அவர்களது கோரிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறேன். ஆக்கபூர்வமான பணிகள் நடப்பதைப் பார்த்து கடுப்படைந்து போயிருக்கும் எதிர்க்கட்சிகள், ஆறுகள் தூர் வாருவதில் ஊழல் என்று மேடைகளில் பேசுகின்றனர். தூர் வாரும் திட்டம் மத்திய அரசு நிதியில் நடக்கிறது. மாவட்ட ஆட்சியர் மூலம் நடத்தும் இந்தப் பணிகளில், எங்களது தலையீடு கிடையவே கிடையாது. திமுக ஒப்பந்தக்காரர்கள் கிளப்பிவிட்டிருக்கும் வதந்தி இது.

தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளைப் போல, குமரி மாவட்டத்திலும் பல வளர்ச்சிப் பணிகள் அம்மா ஆட்சியில் நடைபெற்று வருகின்றன. அந்தப் பகுதி மக்கள் இவற்றை நன்கு அறிவார்கள்" என்கிறார் சுகாதார அமைச்சர் தளவாய் சுந்தரம்.

சந்திப்பு: ப்ரியன்

படம்: ராஜன்

மண்ணுக்கு கிடைத்த கௌரவம்!



• வைரமுத்து



• கு. ஞானசம்பந்தம்

கவிப்பேரரசு வைரமுத்துவின் 'கள்ளிக் காட்டு இதிகாசம்' புத்தகத்துக்கு சாகித்திய அகாடமி விருது கிடைத்திருக்கிறது.

"இது வைரமுத்து என்கிற தனி மனிதருக்குக் கிடைத்த விருதில்லை. மதுரை மண்ணுக்குக் கிடைத்த பெரிய கௌரவம்" என்று பூரிப்படைகிறார் பேராசிரியர் கு. ஞானசம்பந்தம்!

"கவிஞருக்கு, ஒரு பாடலாசிரியர் என்கிற முறையில் பல தடவை தேசிய விருது கிடைச்சிருக்கு. ஒரு கவிஞர் என்கிற முறையில அவருக்குப் பல கௌரவங்கள் கிடைச்சிருக்கு. ஆனா, அவர் தன் வட்டத்துக்குள்ளே இருந்து வெளியில வந்து, தான் சுவாசித்த மண்ணுக்குரிய மக்களைப் பற்றி எழுதிய நாவல் இது. எங்க மண்ணுல வாழ்ந்து, மண்ணோடு மண்ணாகிப் போன மக்களோட வாழ்க்கையை, அற்புதமான நடையில் பதிவு செஞ்ச ஓர் ஆவணம்னு சொன்னா மிகையில்லை."

"ஒரு காலத்துல நடந்த ராமாயணத்தையும், மகாபாரதத்தையும் பிற்காலத்துல வந்தவங்க காப்பியங்களா எழுதி வெச்சாங்க. அதை நாம இதிகாசங்களாய் போற்றறோம். அதுபோலவே, இந்த மண்ணின் மைந்தர்களோட கதையும் காலம் கடந்து நிற்கும் என்பதால்தான் கவிஞர் இதற்கு 'கள்ளிக் காட்டு இதிகாசம்'னு பெயர் வைச்சிருக்கார்.

இந்த நாவல்ல வருகிற பேயத்தேவர், மொக்கராசு, சின்னத்தேவர், வள்ளி நாயக்கர், செல்லத் தாயி, அன்னக் கொடி. எல்லாம் கற்பனைப் பாத்திரங்களில்லை. வாழ்ந்த, வாழுகிற நிஜங்கள். அறுபது வயது பேயத்தேவர்தான் கதாநாயகர். அந்தக் கிழவனார் மனிதர்களோடும் இயற்கையோடும் போராடுறாரு... பல சமயங்களில் மனிதர்கள் அவரைக் கைவிட்டாலும், இயற்கை அவரைக் காப்பாத்துது. அவரோட நம்பிக்கை அவர் வாழ்ந்த மண்தான். கடைசியில் அந்த மண்ணே அவரை ஏற்றுக் கொள்ளுது.

"நாவலில் உணவு முறைகளைப் பற்றி ரொம்ப வெவரமா சொல்லி இருப்பாரு. ஓர் இடத்துல கோழிக்குழம்பு வைக்கிறது எப்படின்னு செய்முறை விளக்கம் கொடுத்திருப்பாரு. என் மக ஒரு தடவை, அந்த நாவலை வெச்சுக்கிட்டே ருசியா கோழிக்குழம்பு செஞ்சான்னா பார்த்துக்கங்களேன். இன்னோர் இடத்துல. கிராமத்துல மாடு, கன்னு போட சிரமப்படுவதை விவரிச்சிருப்பாரு. அப்போது ஏற்படற சிக்கலை, ஹீரோ கிழவனார் அங்கேபோய், தன் அனுபவத்தால எப்படித் தீர்த்து வைக்கறாருன்னு சொல்லறதை படிக்கிறப்போ, ஒரு சஸ்பென்ஸ் கதை படிக்கிற திரில் கிடைக்கும். இதேபோல நிறைய உதாரணம் சொல்லலாம்.

கிராமத்து செண்டிமென்ட் சமாசாரங்களையும் கவிஞர் விட்டு வைக்கலை. எங்க மண்ணுக்குரிய விஷயங்களை, எங்கயும் சின்ன நெருடல் இல்லாம, திணிப்புங்கிற உணர்வை ஏற்படுத்தாத வகையில், சலசலத்து ஓடுற வைகை ஆறு மாதிரியான நடையில சொல்லியிருக்காரு. முதல் மரியாதை ஸ்டைலில், கிழவனாருக்கு இருந்த 'லவ்' பத்தியும்கூட கதையில வரும்.

மதுரைக்குப் பெருமை சேர்க்கிற மீனாட்சி அம்மன் கோவில், நாயக்கர் மகால், கோபுரம் மல்லிகைப்பூ, சிலம்புச் சண்டை, இது கூட இனி கள்ளிக்காட்டு இதிகாசத்தையும் சேர்த்துக்கலாம்."

- மானஸா



3 - 1 - 2004 வரை

- வைரம் விலையில் ஒரு காரட்டுக்கு ரூ 2000/- தள்ளுபடி
- தங்க நகைகளுக்கு கூலி இல்லை
- வெள்ளி சாமான்களுக்கு கூலி இல்லை
- ரூபி, எமரால்டு நகைகளுக்கு கூலி இல்லை
- வைர நகைகளுக்கு கூலி இல்லை
- குறைந்த சேதாரம்
- படங்கள், பரிசுப் பொருள்களுக்கு 10% தள்ளுபடி
- ரூபி, எமரால்டு போன்ற கற்களுக்கு 10% தள்ளுபடி
- சான் கோல்டு நகைகளுக்கு 20% தள்ளுபடி

(இச்சலுகைகள் ரெடி நகைகளுக்கு மட்டும். ஆர்டர்களுக்கும் ஒரு சில ஸ்பெஷல் டிசைன்களுக்கும் பொருந்தாது)

SWARNALAYA
Jewellery

Gold, Diamond, Ruby, Emerald and Blue Safire Jewellery Collections

5, Venkatnarayana Road, T.Nagar, Chennai - 600 017. Tel : 52125353, 52125454



“காற்று உள்ள வரை நிலைக்கணும்!”

ராணி மைந்தன் எழுதிய தமது வாழ்க்கை வரலாற்று நூலை, பழம்பெரும் இசையமைப்பாளர் நௌஷத் அலி கையால் வெளியிட்ட சந்தோஷத்தில் இருக்கிறார் எம்.எஸ்.வி. கூடவே தமிழிசைச் சங்கத்தின் இசைப் பேரறிஞர் விருதும் கிடைத்திருக்கிறது. சந்தோஷத்துக்குக் கேட்க வேண்டுமா என்ன? தமிழிசை வித்வான்களுக்கும், வேறு வாத்திய இசை விற்பன்னர்களுக்கும் இதுவரை அளிக்கப்பட்டு வந்த இசைப் பேரறிஞர் விருது, ஒரு மெல்லிசைக் கலைஞருக்கு வழங்கப்பட்டிருப்பதை பற்றி என்ன நினைக்கிறார்?

“மெல்லிசையும் ஒரு பண்ணிசைதான். கர்நாடக இசையின் புனிதத்தை, பாரம்பரியத்தைக் கெடுத்து பிறப்பதல்ல மெல்லிசை. கர்நாடக இசை என்கிற அஸ்திவாரத்தின் மீது எழுப்பப்படும் நவீனக் கட்டடம்தான் மெல்லிசை. கிளாசிகல் பேஸ் இல்லாத மெல்லிசை நிலைத்து நிற்காது. கர்நாடக இசைக்கும், மெல்லிசைக்கும் பாலமாக நான் நினைப்பது, திரைப்படங்களில் பாடல்களுக்கான சரியான சிச்சுவேஷன்களும், அந்த சிச்சுவேஷன்களுக்கு ஏற்ற வார்த்தைகளைக் கொண்டு எழுதப்பட்ட பாடல் வரிகளையும் தான்.



‘இன்றளவும், என் மெல்லிசை மெட்டுகள் மக்கள் மனங்களில் நிலைத்து நிற்கக் காரணம், நான் வந்த பாரம்பரியம். எஸ்.வி. வெங்கட்ராமன், ஜி. ராமநாதன், டி.ஆர். பாப்பா, எஸ்.எம். சுப்பையா நாயுடு, சி.ஆர். சுப்பராமன், டி.கே. ராமமூர்த்தி என்று நான் போற்றி வணங்கும் அனைவருமே, பலமான கர்நாடக சங்கீத அஸ்திவாரத்தின் அவசியத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தவர்கள்.

நீங்கள் முறைப்படி கர்நாடக சங்கீதம் படித்தவரா?

கேரளாவில், கண்ணனூரில் நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தபோது, பக்கத்தில் ஓர் இசைப் பள்ளிக்கூடம் இருந்தது. உள்ளே சொல்லித் தருவதை வெளியில் நின்று கேட்டுக் கொண்டிருப்பேன். (உள்ளே போய்ப் படிக்க மாதம் மூன்று ரூபாய் கட்ட முடியாத நிலைமை) இசை ஆர்வம் காரணமாக, வீட்டுக்குத் தெரியாமல் ஒரு டூரிங் டாக்கீஸினுள் இடைவேளையில் சினிமாப் பாட்டுப் போடுகிறபோது, வடை, முறுக்கு விற்றேன். ஒருநாள் அங்கே இசைப் பள்ளிக்கூட ஆசிரியர் நீலகண்ட பாகவதரிடம் மாட்டிக் கொண்டேன். என் இசை ஆர்வத்தைத் தெரிந்து கொண்ட அவர், பணம் வாங்காமல் பாட்டுச் சொல்லிக் கொடுக்க முன் வந்தார். குருநாதருக்கு முகம் சுளிக்காமல் பணிவிடைகள் செய்துகொண்டு, இசை பயின்றேன்.

அந்த வருஷம் விஜயதசமியன்று அதிகாலையில் எழுந்து, எல்லா இசைக் கருவிகளுக்கும் குங்குமம், சந்தனம் இட்டு பூஜைக்குத் தயார் செய்து முடித்தபோது மணி நாலரை. வேறு யாருமில்லாத சூழ்நிலையில், ஹார்மோனியத்தை எடுத்து வைத்துக் கொண்டு, பைரவி ராகத்தில் பாடிக் கொண்டிருக்க, அமைதியான அதிகாலைப் பொழுதில் யாரோ பாடுவதைக் கேட்டு எழுந்து வந்த நீலகண்ட பாகவதருக்கு மெய் சிலிர்த்துப் போனது. பாகவதர் அப்படியே என்னைக் கட்டித் தழுவி, ஆசிர்வதித்தார். நாலு வருஷம் அகர சாதகம்.

கண்ணனூர் டவுன்ஹாலில் மேடை ஏறினேன். மூனு மணி நேரக் கச்சேரி. ஹிந்து, மாத்ருபூமி ஆகிய பத்திரிகைகள், இந்தச் சிறுவனுக்கு இசை உலகில் தனி இடம் உண்டு என்று பாராட்டி எழுதின. ஆக, நானும் முறைப்படி கர்நாடக இசை பயின்றவன். அதுதான் எனக்கு அஸ்திவாரம்.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

பாரதியார் நூல்கள்

• கவிதைகள் • கட்டுரைகள் • கதைகள் • பாரதியார் வாழ்க்கை வரலாறு

இவையனைத்தும் கையடக்கப்பதிப்பாக நான்கு நூல்களாக 1700 பக்கங்களில்!

விலை ரூ.200. சலுகை விலை ரூ.150!

"புவியனைத்தும் போற்றிட வான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழிலேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசை யென்னாற் கழிந்ததன்றே.

எனத் தம்மைப்பற்றிப் பெருமிதம் தோன்றக் குறிப்பிடுகிறார் மகாகவி. இது தற்புகழ்ச்சியன்று. துல்லியமான சுயமதிப்பீடு! மகாகவியின் கவிதைகளைப் போலக் கட்டுரைகளும் மிகச் சிறந்தவையே. தத்துவம், மாதர், கலைகள், சமூகம் என்னும் தலைப்புக்களில் பல கட்டுரைகள் வரைந்துள்ளார். இந்து சமயத்தைப் பற்றி அறிய விரும்புவோர் அவரது தத்துவக் கட்டுரைகளைப் படித்தால் போதும். மேலும் கவிதைகளில் சுருக்கமாகக் கூறப்பட்ட செய்திகளைக் கட்டுரைகளில் விரிவாக கூறியுள்ளார். 'பகவத் கீதை'க்குப் பலர் விளக்கம் அளித்துள்ளார்கள். ஆயினும் பாரதியாரின் விளக்கம் தனித்தன்மை வாய்ந்தது; திருக்குறள் போல் செறிவாக அமைந்துள்ளது.

"சக்திதாசன்", "காளிதாசன்", "ஷெல்லிதாசன்", "சாவித்திரி", "உத்தம தேசாபிமானி", "நித்திய தீரர்", "நிருபநேயர்., என்னும் பல்வேறு புனைபெயர்களில் தம் கருத்துக்களைப் புலப்படுத்தியுள்ள பாரதியார், பல கதைகளைக் கூறியுள்ளார்.

இவ்வளவு சிறப்புக்களும் உடைய பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை நாம் அறிந்து கொள்ள வேண்டாமா? வ.ரா, அவர்களின் "மகாகவி பாரதியார்" என்னும் நூல் வரகவியின் வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டுகிறது.

வெளியீட்டு விழா!

இந்நூல்கள் 4.1.2004 – ஞாயிறு
காலை 10.00 மணியளவில்
சென்னை தியாகராய நகர்,
சர்.பிட்டி தியாகராயர் அரங்கில்
வெளியிடப்படுகின்றன.
மாண்புமிகு நீதியரசர்
எம். கற்பக விநாயகம் தலைமையேற்க,
திரு. ஜெயகாந்தன், டாக்டர் சுதா சேஷய்யன்,
தமிழ்ப்பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன்
அவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்கள்
பங்கேற்கும் இவ்விழாவினில் அனைவரும்
கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அரங்கினில் சிறப்புச் சலுகை விலையாக நான்கு நூல்களும் ரூ. 100க்கே தரப்படும்!

தபாலில் பெற கடிதம் எழுதுக. நான்கு நூல்களும் வி.பி.பி.யில் அனுப்பி வைக்கப்படும். சலுகை விலை ரூ.150+ தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.40 சேர்த்து ரூ.190 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெறலாம்.

முகவரி : **வர்த்தமானன் பதிப்பகம்**
40, சரோஜினி தெரு, தி. நகர், சென்னை - 17.
(உஸ்மான் ரோடு கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்)

நேரில், **5.1.2004 முதல்**
சென்னை வர்த்தமானன் (✆ : 24350561) ;
கோவை விஜயா (✆ : 2382614 / 2394614);
சேலம் சந்திரா (✆ : 2265635); தருமபுரி திருவள்ளுவர் (✆ : 268769); திருச்சி திருச்சி புக் ஹவுஸ் (✆ : 2705098 /2764198); மதுரை செல்வி (✆ : 2343510 / 2345169); நெல்லை அருள் நந்தி சிவம் (✆ : 2339692 / 3100710) ஆகிய இடங்களில் சலுகை விலையினை மட்டும் ரொக்கமாகச் செலுத்தி உடனே பெற்றுக் கொள்ளலாம்.

நேரம் காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை (உணவு இடைவேளையின்றி) ஞாயிறு விடுமுறை





வாங்க சிங்கப்பூர்ல படிக்கலாம்!

பிளஸ் டூ படித்துவிட்டு மேற்கொண்டு என்ன படிக்கலாம் என்று தலையைப் பிய்த்துக் கொள்ளுபவர்களுக்கு சிங்கப்பூர் ஸ்டடி சென்டர், ஒரு வழியைத் திறந்து வைத்திருக்கிறது.

இப்போது பட்டப் படிப்பிலும், பட்ட மேற்படிப்பிலும் யுஎஸ்., யு.கே., ஆஸ்திரேலியா எல்லா நாடுகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு அந்த இடத்தை சிங்கப்பூர் பிடித்துவிட்டது. காரணம், அங்கே உள்ள பிஸினஸ் பள்ளிகளில் சர்வதேசத் தரம் கிடைத்து விடுகிறது!

டிப்ளமா படிப்பிலிருந்து தொடங்கி, டாக்டரேட் பட்டம் வாங்குவது வரை எக்கச்சக்க கல்வி அமைப்புகள்! பல தனியார் கல்வி மையங்களுக்கும், சிங்கப்பூர் அரசு அங்கீகாரம் கொடுத்திருக்கிறது. இதற்கெல்லாம் 'சிங்கப்பூர் குவாலிடி' என்று தனி முத்திரை வேறு குத்தியிருக்கிறது!

சரி, டிப்ளமா, அட்வான்ஸ் டிப்ளமா அளவில் படித்துவிட்டால் மட்டும் போதாதே என்று நினைப்பவர்களுக்கு, அவற்றை வைத்துக் கொண்டு மேலும் படிக்க, யு.எஸ். என்ன, யு.கே. என்ன, ஆஸ்திரேலியா என்ன -எங்கே வேண்டுமானாலும் போய்விடலாம். புகழ் பெற்ற க்யுட்டின், சார்ல்ஸ் ஸ்டர்ட், மூர்டோம் என்று அசத்தலான யுனிவர்சிடிகளில் சேரத் தகுதி உண்டாகிவிடும்.

ஏ இஸி பிஸினஸ் ஸ்கூல் சென்னையில் இப்போது துவங்கியிருக்கும் சிங்கப்பூர் ஸ்டடி சென்டரில் இதற்கு வழி செய்திருக்கிறது. சென்னை ஸ்ரீராம் குருப், சிங்கப்பூர் மெலேவார் குருப், ஸ்ரீலங்காவின் எஸ்லின்கோ ஆகிய மூன்று அமைப்புக்கள் சேர்ந்து உருவாக்கியதுதான் சிங்கப்பூர் ஸ்டடி சென்டர். இது சிங்கப்பூரிலுள்ள பதினான்கு கல்வி நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது.

சிங்கப்பூரில் படிப்பு என்றால் நிறையச் செலவாகுமே?' ஆகும்தான். ஆனால் பயப் படத் தேவையில்லை என்கிறது ஏஇஸி. எண்பது சதவிகிதம் கல்வி மான்யம், கிடைத்து விடுகிறதாம்! மீதிதான் செலவு என்றாலும், (அதற்கு வங்கிக்கடன் வாங்கினாலும்) சுலபமாகச் சமாளித்து விடலாம். அதற்காக சிங்கப்பூரிலேயே மூன்று வருடங்கள் வேலை பார்த்துக் கை நிறையச் சம்பாதிக்கவும் வகை செய்து விடுகிறார்கள்!

\- சாருகேசி

சிறப்புத் தள்ளுபடி 10%

மாபெரும்

BAPASI

27ஆவது சென்னை

புத்தகக் கண்காட்சி

சனவரி 9ஆம் தேதி முதல் 19 வரை

இடம்: காயிதே மில்லத்து அரசினர் மகளிர் கல்லூரி, சென்னை - 2.

வேலை நாட்களில் :
மாலை 2.00 முதல் இரவு 9.00 வரை
10.1.2004, 12.1.2004, 13.1.2004, 19.1.2004 தேதிகளில்
விடுமுறை நாட்களில் :
காலை 10.00 மணி முதல் இரவு 9.00 வரை
11. 14. 15. 16. 17. 18 தேதிகளில்

குழந்தைகளுக்கு அனுமதி இலவசம்

தினமும் மாலை 6.30 முதல் 8.00 வரை - சிறப்புப் பேச்சாளர்கள்.


தேதி	பேச்சாளர்கள்
10.1.2004	சுகிசிவம்
11.1.2004	கவிக்கோ அப்துல் இரகுமான் தலைமையில் கவியரங்கம்
12.1.2004	டாக்டர் சேயோன் 'வானொலி'
13.1.2004	மெர்வின்
14.1.2004	புஷ்பவனம் குப்புசாமி
15.1.2004	சாரதா நம்பியாரூரன்
16.1.2004	தா. பாண்டியன்
17.1.2004	பேரா. கு. ஞானசம்பந்தன் தலைமையில் பட்டிமன்றம்
18.1.2004	டாக்டர். அ. அறிவொளி
19.1.2004	வில்லிசைக் கவிஞர் சுப்பு ஆறுமுகம்

Programmes Sponsored by - **EAGLE DIARIES**

வாகன நிறுத்தும் வசதி: மதராஸ் - இ - அசாம் பள்ளி

THE BOOKSELLERS' AND PUBLISHERS' ASSOCIATION OF SOUTH INDIA


கல்கி
11.1.2004
பொங்கல் சிறப்பிதழ்
உற்சாக ஸ்பெஷலாக மலர்கிறது...
'மார்க்கு வாங்கலாம் வாங்க!'
-பயனுள்ள தொடர் ஆரம்பம்
ஹலோ, நீங்க சுகமா?
-டாக்டர் வஸந்த் செந்தில் எழுதும் மருத்துவத் தொடர்
புதுமையும் மகிழ்ச்சியும் தெளிக்கும்
2 புத்தகங்கள்



மூடித் திறக்கும் கூட்டணிக் கதவுகள்!

மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க. விலகிக் கொண்டது ஆச்சர்யமல்ல. இந்த நடவடிக்கையின் காரணமாக மத்திய அரசு ஆட்டம் கண்டிருக்கிறது என்று சொல்வதும் சரியல்ல. அமைச்சரவையிலிருந்துதான் விலகியிருக்கிறோமேயொழிய, ஆதரவை விலக்கிக் கொள்ளவில்லை என்பதை தி.மு.க. தலைவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

எனினும் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இதே கூட்டணி தொடராது என்பது மட்டும் தெளிவாகிவிட்டது. ம.தி.மு.க.வும் விரைவிலேயே தி.மு.க. வழியில் செயல்படும் என எதிர்பார்க்கலாம்.

கொள்கைகளில் முரண்பட்ட தி.மு.க.வும், பா.ஜ.க.வும் இத்தனைக் காலம் ஒரே கூட்டணியில் நீடித்ததே ஆச்சர்யம்தான். இதற்கான காரணம், முரசொலி மாறனின் முனைப்புதான் என்பதையும் தி.மு.க. தலைமை வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்கிறது.

கூட்டணிக் கட்சியாக மத்திய அரசுக்கு வலுவான ஆதரவு தந்த தி.மு.க., மாநில அரசியலில் பா.ஜ.க. தன்னை ஓரளவேனும் ஆதரிக்கும் என எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தது. தமிழக பா.ஜ.க. - தி.மு.க. தலைவர்களிடையே கருத்து வேற்றுமை நிரந்தரமாக இருந்து வருகிறது. இது மட்டுமல்ல, எதிர்க் கட்சி என்கிற முறையில், தமிழக ஆளுங்கட்சியாலும் ஆட்சியாளர்களாலும் தி.மு.க.




கல்கி



2004 ஜனவரி 4
சுபானு மார்கழி 20
மலர் : 62
இதழ் : 23

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பந்தாடப்பட்டபோது, மத்திய அரசு தலையிட்டுத் தடுக்காமல் கைகட்டிக் கொண்டிருந்தது.

மத்திய அரசு, மாநில அரசின் செயல்பாடுகளில் தலையிடக் கூடாது என்பது உண்மைதான். ஆனால் மாநில அரசுகள் தவறு செய்யும்போதோ, அராஜகம் இழைக்கும் போதோ, மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டாலும் தட்டிக் கேட்கலாம் ; எச்சரிக்கை செய்யலாம், அல்லது தனது பிரதிநிதியை அனுப்பி நிலைமையை ஆராயப் பணிக்கலாம் ; அந்த அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாம்.

மத்திய அரசு இவற்றுள் எதையுமே செய்யவில்லை. குறைந்தபட்சம், 'தமிழகத்தில் நடப்பவை கவலை தருகின்றன' என்று ஓர் அறிக்கைகூட விடவில்லை.


இதற்குப் பிறகும் தி.மு.க.வுக்கும், பா.ஜ.க.வுக்கும் உறவு சுமுகமாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது யதார்த்தமல்ல.

அரசியல் கூட்டணிகள் மாற்றத்தில், பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் ஓர் அணியில் கூடும் என்று இனி எதிர்பார்க்கலாம். தேர்தல் எப்போது அறிவிக்கப்படும் என்பதைப் பொறுத்தே இந்த முடிவும் எடுக்கப்படும்.

ஜெயலலிதா அரசின் மதமாற்றத் தடைச் சட்டம், ராமஜன்மபூமிக்கு அவர் அளித்துள்ள ஆதரவுக் குரல். காங்கிரஸ் தலைமையிடம் அவர் கொண்டுள்ள ஒளிவுமறைவற்ற விரோத பாவம், இவை யாவுமே பா.ஜ.க.வுடனான கூட்டணிக்கு அவர் கதவுகளைத் திறந்து வைத்துள்ளதற்கான அறிகுறிகள்தாம்.

பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வின் ஹிந்து ஆதரவு நிலை கண்டு எதிர்பார்ப்புகளை வளர்த்துக் கொண்டிருக்கிறது. தமிழக பா.ஜ.க. தலைவர்களின் பேச்சுகள் இதற்குச் சான்று.

வரவிருக்கும் தேர்தலில் ஹிந்துத்வா பிரசாரத்தின் சுருதியைக் குறைத்துக் கொண்டு, அ.தி.மு.க.வுடன் கூட்டணியும் வைத்துக்கொண்டு, மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட்டால், பா.ஜ.க. தனது ஹிந்துத்வா செயல்திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த வசதியாகிவிடும். தி.மு.க.வும், ம.தி.மு.க.வும், கூட்டணியில் இருந்தால், ஹிந்துத்வா செயல்திட்டங்களை நிறைவேற்றுவது கடினம். எனவேதான், தற்போது தி.மு.க. எடுத்துள்ள முடிவை



பா.ஜ.க.வும் ஆட்சேபணையோ, வருத்தமோ, சிறு கேள்வியோ கூட இன்றி ஏற்றுக் கொண்டுவிட்டது!

காங்கிரஸுடன் கூட்டணி வைத்துக் கொள்ளும் வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளவே தி.மு.க. முன்கூட்டியே இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் நாம் கருதலாம்.

ஆனால், தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக்கொள்ள காங்கிரஸ் விரும்ப வேண்டுமே; அதற்குக் காங்கிரஸ் தலைமை சம்மதிக்க வேண்டுமே!

தமிழக காங்கிரஸின் தலைமையே சோனியாவின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது என்னும்போது, காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி வாய்ப்புகள் குறித்துப் பிரகாசமான நம்பிக்கை தற்போது நமக்கு ஏற்படவில்லை. போதும் போதாதற்கு, ப. சிதம்பரமும் இன்னும் ஓரிருவரும் மூன்றாவது அணி குறித்துப் பேசி வருகிறார்கள்!

இந்தச் சூழலில் யாரையும்விட அதிக பலம் பெற்றிருப்பது அ.தி.மு.க.தான். அதன் மாநில எதிர்க்கட்சியான தி.மு.க.வுக்கு இனி மத்திய அரசில் பிடிமானம் இல்லை. பா.ஜ.க.வுடனான எதிர்காலக் கூட்டணிக்கும், மத்திய அரசில் இடம் பெறுவதற்கும், எந்த முயற்சியும் இன்றி அ.தி.மு.க.வுக்குக் கதவுகள் திறந்திருக்கின்றன.

மத்தியில் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை பலத்தை நிர்ணயிக்கும் எண்ணிக்கையில் அ.தி.மு.க.வுக்குத் தேர்தல் முடிவுகள் வாய்ப்பளித்துவிட்டால், அக்கட்சித் தலைமைதான் கூட்டணியையே ஆட்டி வைக்கும். அதாவது, ஜெயலலிதாதான் மத்திய அரசையும், நாட்டையும்கூட ஆட்டி வைப்பார்!


தமிழக அரசியல் கட்சிகளின் அணிவகுப்பு, மேற்படிச் சூழலுக்கு வழிவகுத்துத் தரப் போகிறதா அல்லது, அ.தி.மு.க.வுக்கு எதிராக ஒரே கூட்டணியாக இணையப் போகிறதா என்பதைப் பொறுத்துத்தான், தமிழர்களின் எதிர்காலம் மட்டுமின்றி, நாட்டின் எதிர்காலமும் அமையும். ●



• கனிகா



• சூராஜ்



• 'அருள்' -விக்ரம்

படிப்பும் நடிப்பும்!

'கோயில்' படத்தை முடித்த சூட்டோடு 'அருளை' இயக்க ஆரம்பித்துவிட்டார் ஹரி.

'சாமி'க்குப் பிறகு விக்ரமும் ஹரியும் கைகோத்திருக்கும் படமென்பதால், எதிர்பார்ப்பு எகிறியிருக்கிறது.

"சாதாரண ஒரு மனிதன், தனக்கு நேர்கிற அவலங்களால் எப்படி மாறுகிறான்ங்கறதுதான் கதை. அருள் குமரன்ங்கற கேரக்டரோட பெயரைத்தான் 'அருள்'னு தலைப்பா வச்சிருக்கோம்" என்கிறார் ஹரி.

வழக்கமாக ஒவ்வொரு படத்துக்கும் ஒவ்வொரு நகரத்துப் பின்னணியைக் கையிலெடுக்கும் ஹரி, இந்தப் படத்துக்கு கோவையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

'முள்ளில் ரோஜா'வில் இரண்டு ஹீரோக்களில் ஒருவராக நடித்திருக்கும் சூராஜ், கோவைக்காரர். சென்னைக்குப் பிஸினஸ் பண்ண வந்தவரை, சினிமா ஆசை அள்ளிக் கொள்ள, கோடம்பாக்கமே கதியென அலைந்திருக்கிறார்.

"'இமேஜ்'ங்கற படத்தில் வாய்ப்புக் கிடைச்சது. அதுல நடிச்சிட்டிருந்தபோது தான் கேமராமேன் ராஜராஜன், டைரக்டர் கஸ்தூரி பாண்டியன் பற்றிச் சொன்னார். போய்ப் பார்த்ததும், 'முள்ளில் ரோஜா'வில் வாய்ப்புக் கொடுத்தார். அவர் ராசியோ என்னவோ, நிறைய வாய்ப்புகள் தேடி வருது" என்கிறார் சூராஜ்.

பிலானி இன்ஸ்டிடியூட்டில் பி.இ. படித்துக்கொண்டிருந்த கனிகாவுக்கு, 'பைவ் ஸ்டார்' படத்தில் நாயகி வாய்ப்புக் கிடைத்தது. படம் முடிந்ததும் படிப்பைவிட மனமில்லாமல், மீண்டும் படிக்கச் சென்றுவிட்டார். படிப்பு முடிந்ததும் இப்போது மீண்டும் களமிறங்கி விட்டார். 'டான்ஸர்' படத்தில் இவர்தான் நாயகியாம்! 'படிப்பும் முக்கியம். நடிப்பும் முக்கியம். சரிதானே' என்று டயலாக் அடிக்கிறார். தேவதைகள் சொன்னால் எல்லாமே சரிதானே!

- ரவுண்ட்ஸ்பாய்

இருநூற்றில் ஒருவரா நீங்கள்...?



அழகான, அளவான, ஈகிள் டைரி ஒன்று இலவசமாகப் பெற வேண்டுமா?

இன்றே உங்கள் கல்கி சந்தாவை ஓராண்டுக் காலத்துக்குப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்;

அல்லது

உங்கள் நண்பருக்காக, உறவினருக்காக ஓராண்டுச் சந்தா செலுத்தி, டைரியை நீங்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்;

அல்லது

ஓராண்டுக் கல்கியுடன் டைரியையும் உங்கள் அபிமான நண்பருக்கோ, உறவினருக்கோ கிடைக்கச் செய்யுங்கள்.

ஓராண்டுச் சந்தா ரூ.330/- செலுத்தும் முதல் இருநூறு பேருக்கு மட்டுமே, ஈகிள் டைரி இலவசம்!

முந்துங்கள்! உடனடியாக...!

கடைசித் தேதி : 10.01.2004

இந்த அறிவிப்புக்குப் பிறகு அனுப்பப்படும் ஓராண்டுச் சந்தாக்களுக்கு மட்டுமே இந்தச் சலுகை. உங்கள் முழு விலாசம்; நண்பர், உறவினரின் விலாசம்; புதுப்பிப்பதாக இருந்தால் தற்போதைய சந்தா எண் முதலியன குறிப்பிட மறவாதீர்கள்.

சந்தாத் தொகையை டி.டி., எம்.ஓ., செக் மூலமாக அனுப்பலாம். (வெளியூர் செக் ஏற்கப்படமாட்டாது)

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர்,
கல்கி,
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097



ப்ளாக் மெயில்



"என்ன அகில்... புது வீடு... புது கணவன்... புது..."

இந்த ஃபோன்காலைக் கேட்டதும் அகிலா ஆடித்தான் போனாள்...!

கல்யாணமாகி கணவன் அரவிந்தனுடன் மண வாழ்க்கை தொடங்க ஆரம்பித்த இந்த ஒரு மாதத்துக்குள், சந்துரு இப்படித் தன்னிடம் பேசுவான் என்பதை அவள் எதிர்பார்க்கவில்லை...!

"கோபமா அகில்... என்ன பண்றது...? வீட்டுல என் மாமா பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி ஏகப்பட்ட பிரஷர்... அதனாலதான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியலே..."

"இப்படி வளவளன்னு பேசாதே... எதுக்காக இப்ப ஃபோன் பண்ணே...?"

"நீ எனக்கு எழுதின அந்தக் கடிதங்கள்... சாரி... காதல் கடிதங்கள்... என்னிடம் இருக்கு... அதை உனக்குத் திருப்பித்தரத்தான்."

"அடப்பாவி... உனக்கு உடம்பு முடியாமல், நீ ஆஸ்பத்திரியில் கிடந்தப்போ, வேலை கிடைக்காமல் மனமுடைந்து போனப்போ, உனக்கு ஆறுதலா, தைரியமூட்டி நான் எழுதின கடிதங்கள், காதல் கடிதங்களா? ஓ... ப்ளாக் மெயில் பண்ணப் போறியா?"

"இல்லை எனக்கு இப்ப கொஞ்சம் பணம் அவசரமா வேணும். நான் மறுபடியும் ஃபோன் பண்ணி பணத்தை எங்கே வந்து கொடுக்கணும்னு சொல்றேன்..." சந்துரு சட்டென்று ஃபோனை வைத்து விட்டான்...!

ஒரு கணம் ஒன்றுமே புரியாமல் குழம்பிப் போன அகிலா, மறுநாளே தோழி மகேஸ்வரியின் வீட்டுக்குச் சென்றாள். அவளைத் தனியாக அழைத்து விஷயத்தைச் சொன்னாள்.

"போலீஸ்ல புகார் பண்ணலாமே?"

"ஐய்யோ... போலீசா? பிரச்னை வளருமே."

"அப்ப ஒண்ணு செய். இந்த சந்துருவைப் பத்தி உன்னோட அரவிந்த் கிட்டே சொல்லிடு..."

"கல்யாணத்துக்கு முன்போ... அல்லது நடந்து முடிந்தவுடனேயோ சொல்லியிருக்கணும்... இப்ப அவன் பிளாக் மெயில் பண்ண ஆரம்பிச்ச பிறகு சொன்னா. அரவிந்த் எப்படி எடுத்துப்பார்...?"

"எதைச் செய்யணும்னு நீயே முடிவெடு"

ஒரு வாரம் கழிந்தது. "ஏ அகிலா.. என்னடீ.. உன்கிட்டேயிருந்து தகவல் வரும்ன்னு இருந்தேன். என்னாச்சு? அந்தச் சந்துரு மறுபடியும் ஃபோன் பண்ணினானா..?"

"ஆமா..." நான் வெறுமனே நியூஸ் பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தேன். அதில் ஒரு செய்தி

என்னைக் கவர்ந்தது. அந்த நேரம் பார்த்ததுதான் அவன் ஃபோன் பண்ணினான். 'பணத்தை எங்கு வந்து கொடுக்கணும்னு சொல்றேன்; அட்ரஸ் குறிச்சுக்கோ'ன்னு சொன்னான். நான் உடனே, முதல்ல நான் சொல்ற அட்ரஸை நீ குறிச்சுக்கோ'ன்னு, என்னோட கணவர் வேலை செய்யற கம்பெனி விலாசத்தைச் சொன்னேன். என்ன விளையாடறியா? என்றான் பதிலுக்கு. 'உன்னிடம் எனக்கென்னடா விளையாட்டு? என் கணவர்கிட்டே எல்லா விஷயத்தையும் சொன்னேன். நான் எழுதிய கடிதங்களைப் படிக்கணும்னு அவர் ஆசைப்பட்டார். அதனாலதான் சொல்றேன். நீ உடனே போய் அவரிடம் அந்த லெட்டரையெல்லாம் கொடு. அவர் தருவதை வாங்கிக்கோ..!' என்றேன். சந்துரு சட்டென்று ஃபோனை வைத்துவிட்டான்.!

"எப்படிடீ இப்படிப் பேசினே..?"

"அதான் சொன்னேனே. அந்த நியூஸ். ஹாங்காங்ல ஒரு பெண் தன்னோட மாஜி காதலன் தனக்கு எழுதின நூற்றுக்கும் மேற்பட்ட காதல் கடிதங்களைத் தெருவில் நின்று ஏலம் போட்டாளாம். இதற்காக அவளோட மாஜி காதலன் வழக்குப் போட, கோர்ட்டில் அபராதம் கட்டினாளாம் அந்தப் பெண். காதலித்து ஏமாற்றிய அவனைச் சந்தி சிரிக்கச் செய்ய வேண்டும் என்ற அந்தப் பெண்ணின் துணிச்சல்



தான் எனக்குத் தெம்பைக் கொடுத்தது. ஆனா சந்துரு இதைத் துளியும் எதிர்பார்க்கலே."

"நானும்தான்டீ அகிலா..!"

ക.ஒப்பிலியப்பன்

நானும் என் ஊரும்

குமரி அனந்தன்

குமரி மாவட்டம் அகத்தீஸ்வரம்தான் என் ஊர். அகத்தியர் இங்கே ஈசனை வழிபட்டதாக வரலாறு. அதனால்தான் இந்தப் பெயர். பழைய கல்வெட்டில் இதற்கு குமரிமங்கலம் என்ற பெயர் இருக்கிறது. இதனாலேயே என் பெயருக்கு முன்னால் குமரியைச் சேர்ந்தேன்.



ஊரில் திண்ணைப் பள்ளிக் கூடம் தான். நான்காவது வரை இங்கே படித்துவிட்டு, சுசீந்தரம் பள்ளியில் மேற்கொண்டு படித்தேன். அப்போது வெள்ளையர் ஆட்சி. சுசீந்தரத்தில் தேரோட்டம் நடந்து கொண்டிருந்தது. நல்ல கூட்டம். தேரின் மேலே ராட்டைக் கொடியைக் கட்டிவிட்டார்கள்.

இதைக் கண்ட வெள்ளையர்கள், கொடியை இறக்கச் சொன்னார்கள். யாரும் முன் வரவில்லை. உடனேயே எந்தக் கேள்வியுமில்லாமல் துப்பாக்கிச் சூட்டை ஆரம்பித்துவிட்டார்கள். சிதறியடித்து ஓடியது கூட்டம். உயிரைக் காக்க கோயில் அருகிலிருந்த பாலத்திலிருந்து பலர் தண்ணீருக்குள் குதித்தார்

புளியமரத்தடியில்...

கள். அதில் சிலர் உயிரிழந்தனர். அம்மா, "ஐயோ" என்ற அலறல். குண்டடிபட்டு நடுரோட்டிலேயே பிணமானவர்கள் அநேகம். இந்தக் கொடுமை என் கண்ணெதிரிலேயே நடந்தது. உயிருக்குப் பயந்து பக்கத்திலிருந்த ஒரு சுவரில் ஏறிக் குதித்து ஓடினேன். இறுதியில் தேரில் கொடி ஏற்றிய சி.பி. இளங்கோ என்பவரைப் பிடித்து விட்டனர். பயங்கர சித்ரவதைக்குப் பின் அவரது கையின் நரம்பை அறுத்து எறிந்துவிட்டார்கள். ஊரைப் பற்றி யாராவது பேச ஆரம்பித்தால், இந்தத் துயரம் தான் என் நினைவுக்கு வரும்.

சிறு வயதில் எங்கள் ஊரின் புளியமரத்தடியில் அமர்ந்து நாங்கள் பேச்சுப் பயிற்சி எடுப்போம். ஒருவர் பேசி முடிந்ததும் மற்றவர்கள் கைதட்டுவார்கள். இதை விரும்பாத பலர் எங்களைக் கேலி செய்வார்கள். இந்தக் கேலியையும் கிண்டலையும் தாங்கிக் கொண்டுதான் பயிற்சி பெற்றோம். இன்று ஒவ்வொரு மேடையில் பேசும் போதும் எழும் கைதட்டல் ஒலி, அந்தப் பேச்சுப் பயிற்சியை ஞாபகப்படுத்தும்.

- அப்பு




அழகம் பெருமாள்



அந்த இழப்பு...!

ஆயிரக்கணக்கான சித்தர்களையும் அரிய பல மூலிகைகளையும் இப்பவும் கொண்டிருக்கிறதாகக் கூறப்படுகிற மருந்து வாழ் மலை அருகிலுள்ள ஓசரவிளைதான் என் ஊர்.



ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையைத் தூக்கிட்டுப் போகும்போது விழுந்த ஒரு துண்டுதான் இந்த மலைங்கறாங்க.



'தாயைப் போலத்தான் தாய்மண்'ணுங்கற மாதிரி ஓர் இயக்குனரா இன்னைக்கு இங்க வந்து இருந்தாலும், மனசு முழுக்க அந்தக் கிராமத்துலதான் உருண்டு புரண்டுகிட்டிருக்கு. பொங்கல் முடிஞ்சதும் இந்த மலைக்குத்தான் கூட்டமாய்ப் போவோம். சொந்த பந்தம்னு ஊரே திரண்டு வரும். சட்டி நிறைய கூட்டாஞ்சோறையும், உளுந்தஞ்சோறையும் அடைச்சுக்கிட்டு, கொஞ்சம் நடந்து, கொஞ்சம் ஓடி, மரத்து மேல ஏறி விளையாடிக்கிட்டே போகிற அழகும், துறுதுறுப்பும் இப்பவும் சிலிர்க்க வைக்கற விஷயம்.

மலையில உட்கார்ந்து, கொண்டு வந்த சோறைச் சாப்பிடும்போது, எந்த ஸ்டார் ஹோட்டல் சாப்பாடும் அவ்வளவு ருசி தராது.



ஒரு முறை சுசீந்திரத்தில் தெப்பத் திருவிழா பாத்துட்டுத் திரும்பிட்டிருந்தோம். நல்ல இருட்டு. வயக்காட்டு வழியா நடந்துதான் ஊருக்கு வரணும். வரப்புல போகும்போது பளபளத்துட்டு அலையற மின்மினிப் பூச்சிகள் அவ்வளவு அழகு. திடீர்னு ஒரு தவளை வயல்ல இருந்து துள்ளிக் குதிச்சு என் மேல விழுந்துட்டு. சின்ன பயம். வீட்டுக்கு வந்ததும் ஆச்சிகிட்டே சொன்னேன். 'அறிவு கெட்ட பயலே. ராத்திரி பயந்துகிட்டு வந்து நிக்கியே... பேயாத்தான் இருக்கும்'னு பரபரப்பாயிட்டாங்க. உடனேயே சாமித்தோப்பு 'அய்யா' கோயிலுக்கு அழைச்சுட்டுப் போயி, விபூதி போட்டுப் பேயோட்டினாங்க.

பேய் இருக்கா இல்லையாங்கற விஷயத்தை விட்டுருவோம். அந்தப் பெரியவங்களோட நம்பிக்கையும், அவங்களோட உணர்வுகளையும் நினைச்சு அடிக்கடி வியந்து போறேன்.

'அழகு, நீ நிறைய இழந்துட்டடா'ன்னு மனசுக்குள்ளயிருந்து ஒரு பட்சி சொல்லிகிட்டே இருக்கு. அந்த இழப்பு பொய்யில்லை.

- மிஸ்டர் லீ

சுசீந்தை பெருமாளே!

பழைய தஞ்சாவூர்க்காரர்களுக்கு மலரும் நினைவுகளையும், சென்னைக்காரர்களுக்குப் பொறாமையும் ஏற்படுத்தும் பச்சைப் பசேர் பகுதி.

இலைப்பச்சை, கிளிப்பச்சை, வெளிர் பச்சை, டார்க் பச்சை என்று பச்சையில் வெரைட்டி காட்டும் வயல், மரம், தென்னந் தோப்புகள். பென்சில் டிராயிங் தீட்டினாற் போல, பஸ்ஸின் ஜன்னல் வழியே நகரும் இயற்கை வனப்பு. பின்னணியில் தென்னையும் கிளிக்கூட்டமும் கண்களைக் கவ்வ, இன்னும் கிலோ மீட்டர்கள் இருக்கும்போதே கோபுரம் தெரிகிறது. கிட்டே நெருங்க நெருங்க பெரிதாகி, பஸ்ஸை விட்டு இறங்கினதும் நெஞ்சையும், கண்ணையும் அடைக்கிற மாதிரி கம்பீரத்துடன் நிற்கிறது சுசீந்திரம் தாணுமாலயன் ஆலய கோபுரம். (134 அடி உயரம் என்றார்கள்). ஏழு மாடங்கள். சிற்பங்களும், அவற்றின் சோழர் கால வடிவங்களும் அசத்துகின்றன. எதிரே அதிக நீளமும் அகலமுமாய் பெரிய தெப்பக் குளம். நடுவே தனிக் கவிதையாய் அழகான நீராழி மண்டபம். நான்கு பக்கமும் தேரோடும் அகலமான வீதிகள். ஆக்கிரமிப்புப் பகுதி போக இன்னும் அகலத்துடனேயே இருக்கிறது.


கோயிலின் முகப்பிலேயே பெரிய, உயரமான மண்டபம். (வேறெந்தக் கோயிலிலாவது இப்படி முகப்பிலேயே மண்டபம் இருக்கிறதா, தெரியவில்லை). நாடக சாலை என்று பெயராம். தமிழ் நாட்டு பழைய டிராகன்களான யாளிகள் தாங்கும் உயரத் தூண்கள். விஷ்ணு, சிவன், காளி எல்லாரும் முகப்பிலேயே நின்று "வெல்கம், வெல்கம்" என்கிறார்கள்.

ஐந்து ஆள் உயரக் கதவு 'யப்பா' என்று அண்ணாந்து பார்க்க வைக்கிறது. பிரம்மாண்டம். மரக் கதவின் உச்சியில் கலைமகள், மலைமகள், அலைமகள் என்று த்ரீ ரோஸஸ். உள்ளே நுழைந்ததும் ஊஞ்சல் மண்டபம். நான்கு பெரிய தூண்களுக்கு நடுவே கல் மேடை. தூணில் சகலரையும் 'காதல் கொண்டேன்' என்று ஆட்டி வைக்கும் ரதி, மன்மதன் சிலைகள். கல்லில் கரும்பு வில். ரதியே கிளி மாதிரி நிற்க, அவன் தோளில் இன்னொரு கிளி.

கிழக்குப் பிராகாரத்தில் படு சீரியஸாக தக்ஷிணாமூர்த்தி தவம் பண்ணிக் கொண்டிருக்க, அடுத்து வஸந்த மண்டபம். நடுவே பெரிய மேடை. வஸந்தோத்சவத்தின்போது அந்த மேடையில் சுசீந்தைப் பெருமான் உமாதேவியுடன் இருப்பாராம். மேலே கூரையில் பார்த்து ராசிபலன் தெரிந்து கொள்ளலாம். 12 ராசிகளும் நவகிரகங்களும் "ஹாய்" என்கிறார்கள்.




பின்புறம் சூப்பர் ஸைஸில் விநாயகர். அப்புறம் தெற்குப் பிராகாரம். ஆஸ்திரேலிய டீமைக் கூட்டிவந்து சுத்தமாய் டெஸ்ட் மேட்ச் நடத்தலாம். தென்னிந்திய இரண்டாவது பெரிய பிராகாரமாம் இது. (முதல் இராமேஸ்வரம். ஃபுட்பால் ஆடலாம்) ஓரமாக பாறைமீது கைலாச நாதர் அரையிருட்டில் ஹாய்யாக உட்கார்ந்து "வாங்கப்பா, எந்த ஊரு?" என்று அன்புடன் விசாரிக்கிறார். பக்கத்




• சுசீந்திரம் கோயில்

துப் பாறையில் ஏகப்பட்ட கல்வெட்டுகள். காதல், வீரம், சோகம், கொடை என்று நூற்றாண்டுகளின் கதைகளைப் பேசிக் கொண்டிருக்கின்றன. மேற்குப் பிராகாரத்தின் சபரிகிரி வாசன், சேரன் வாசல் சாஸ்தா என்று பட்டமாம். மறு கோடியில் ஓர் ஆச்சரியம்!

எல்லாக் கோயில்களிலும் நின்று நின்று கால்வலி எடுத்து விட்டது போலிருக்கிறது. ராமரும் சீதையும் ஏகாந்தமாக உட்கார்ந்து ரெஸ்ட் எடுக்க,





• தெப்பக்குளம்

வெளியே லக்ஷ்மணும், அநுமனும், ஒதுங்கி. அதி பவ்யமாய் நிற்கிறார்கள். இதை வடித்தவன் சாதாரணச் சிற்பியாயிருக்க முடியாது. சிற்பக்கலையில் பி.எச்.டி. வாங்கியிருக்க வேண்டும். ராமர் ஏதோ அரைச் சிரிப்புடன் கிண்டல் பண்ண, சீதையின் முகத்தில் வெட்கம் கலந்த மோனலிஸா சிரிப்பு.

வடக்குப் பிராகாரத்து முருகன், வள்ளி தெய்வானையையும் அதே சிற்பிதான் செதுக்கியிருக்க வேண்டும். அசத்துகிறார்கள், முக பாவங்களில். இதே பிராகாரத்தில் அலங்கார மண்டபமொன்றும் இருக்கிறது. அதில் நான்கு தூண்கள். இரண்டில் 25 சிறு தூண்கள். மற்ற இரண்டில் 33 சிறு தூண்கள். தட்டினால் அசர வைக்கும் ஸ்வரங்கள். எப்படிச் செதுக்கினார்கள் என்று புரியாத அற்புதம். சிற்பியிலேயே யாரோ ஒரு இளையராஜா இருந்திருக்க வேண்டும்.

மறு கோடியில் இன்னுமொரு பிரம்மாண்டம். "அசாத்திய ஸாதகம்' பண்ணும் ஆஞ்சநேயன், அசாத்திய உயரத்தில் நிற்கிறார். ஆனால் முகத்தில் அசாத்திய அடக்கம், பணிவு. காரணம், நேர் எதிரே உட்கார்ந்திருப்பது சீதாராமன். ராமனுக்கெதிரில் அனுமன் விஸ்வரூபம் எடுப்பதில்லியே, என்னவாக இருக்கும்? என்ற யோசனை வருகிறது நமக்கு. கருட மண்டபம், கொடி மண்டபம் என்று தாண்டி வந்தால் செண்பக ராமன் மண்டபம். இங்கு வாலியும் சுக்ரீவனும் மோதிக் கொண்டிருக்க, இன்னொரு தூணில் ராமன். ராமனிடம் நின்று பார்த்தால், வாலி தெரிகிறான். வாலியிடத்தில் வந்து நின்றால் ராமனைக் காணோம்.

அடுத்து நேரே மூலஸ்தானம். லிங்க வடிவம். தங்கக் கவசம். தெற்கில் இடது பாதம் தூக்கிய நடராஜர். 'காலைக் கீழே வைத்து கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தால் என்னவாம்? - கேட்டுவிட்டு வலப்புறம் வந்தால் ஏழரை அடி உயரத் திருமால் வழி மறிக்கிறார். கடுகும், சர்க்கரையும் சேர்த்த திருவுருவாம். ஸோ, அபிஷேகம் கிடையாது.

சிற்பங்களும் சித்திரங்களும், புராணக் கதைகளையும், சிற்பிகளின் திறமையையும் சத்தம் போட்டுச் சொல்கின்றன.

மும்மூர்த்திகளும், மற்ற எல்லாத் தெய்வங்களும் இங்கு உச்சி மாநாடு கூட்டிச் சேர்ந்தது மாதிரி சேர்ந்திருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கொன்றை மரம், மன்னாதி மன்னர்களைக் கண்ட மரம், பண்டைத் தமிழகத்தைப் பார்த்த மரம், இப்போதைய தமிழகத்தைப் பார்த்து காற்றில் சலித்துக் கொண்டு நிற்கிறது.

'மார்கழி, சித்திரைகளில் திருவிழா. அப்போ வந்து பாருங்க. அசந்துடு வீங்க' என்றார் கோயிலைச் சேர்ந்த ஒருவர்.

"இப்பவே அசந்துதான் போயிருக்கிறோம்."

- தேவநாதன்

கொச்சின் போனால் தும்மாங்குத்து!

கடந்த நவம்பர் மாதம் கன்னியாகுமரி, பற்றியெரியாத குறைதான். குமரி மாவட்டத்தின் கடலோர மீன் பிடி கிராமமான தூத்தூரிலிருந்து ஆழ்கடல் மீன் பிடிப்புக்குச் சென்ற எண்பத்து இரண்டு மீனவர்கள், வழக்கம்போல் கொச்சின் துறைமுகத்தில் மீன்களை இறக்கி, வலைகளை உலர வைத்தார்கள். அவ்வளவுதான்! உள்ளூர் கேரள மீனவர்கள் இரண்டு, ஒரு நாளும் இல்லாத திருநாளாக எண்பத்து இரண்டு பேரையும் நையப்புடைத்து விரட்டி அடித்ததோடு, அவர்களது எட்டு படகுகளையும் கவிழ்த்து மூழ்கடித்துவிட்டார்கள். கடையடைப்பு, கள். காரணம், கொச்சின் தேசியத் துறைமுகம் எல்லா விதத்திலும் வசதியானது. லட்சக் கணக்கான ரூபாய்க்கு உடனே இங்கே மீன்களை விற்றுவிட முடியும். தேவையான ரேஷன் மற்றும் எரிபொருள்களை உடனே வாங்கிக் கொண்டு அங்கிருந்தே கடலுக்குப் போய் விடலாம். இதனால் கடந்த எழுபது வருடங்களாக கொச்சின் துறைமுகத்தை பயன்படுத்தி வந்தவர்களை, இப்போது உள்ளூர் மீனவர்கள் அடித்து விரட்டுகிறார்கள். ஏற்கெனவே, மாலத்தீவு, பர்மா, பாகிஸ்தான், இலங்கை என்று வெளிநாட்டுச் சிறைகளில் மீனவர்கள் வாடி வதங்கும் நிலையில், உள்நாட்டிலேயே தாக்குதலுக்கு ஆளாக வேண்டிய அவல நிலை



ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் என்று குமரி மீனவர்கள் பொங்கிய பிறகுதான், தூத்தூர் மீனவர் பிரச்னை வெளியே தெரிய ஆரம்பித்தது.

கேரள எல்லையை ஒட்டி குமரி மாவட்டம் இருப்பதால், ஆழ் கடல் மீன்பிடிப்பில் அக்கறை காட்டும் குமரி மாவட்ட மீனவர்கள், சர்வதேச மீன்பிடித் துறைமுகமான கொச்சினுக்குச் செல்கிறார் ஏன்?

"முதல் காரணம் குமரி கடற்கரைப் பகுதியில் மொத்தமே மூன்று மீன் பிடித் துறைமுகங்கள்தான் உள்ளன. கேரள கடற்கரை எல்லையிலோ, பதினோறு துறை முகங்கள் உள்ளன. தூத்தூருக்குப் பக்கத்தில் தேங்காய்ப் பட்டினத்தில் தாமிரபரணி ஆற்று முகத்துவாரம், துறைமுகம் கட்ட அத்தனை வசதியோடு இருக்கிறது. அதேபோல்

பழம் பெரும் இயற்கைத் துறைமுகமான குளச்சல் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. ஆனால் அரசு ஒவ்வொரு முறையும் கொஞ்சம் நிதி ஒதுக்கி, அறிவிப்பு வெளியிடுவதோடு சரி. உருப்படியாக எதையும் செய்வதில்லை" என்று கண்டனம் செய்கிறார், குமரி மாவட்ட மார்க்சிஸ்ட் எம்.எல்.ஏ.வான ஹேமச்சந்திரன்.

இதை மறுக்கிறார் அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளரான ஆர்.எஸ். பார்த்தசாரதி, "பிரச்னையின் தீவிரத்தை உணர்ந்த முதல்வர், உடனடியாக முப்பத்து ஒன்பது கோடியை ஒதுக்கிவிட்டார். கோவளம், பெரிய காடு, குறுமனை, இணையம், சின்ன முட்டம் உட்பட, ஏழு இடங்களில் தூண்டில் வளைவுகள் (மீன்பிடித் துறைமுக வசதி) அமைக்கும் பணிகள் அசுர வேகத்தில் தொடங்கிவிட்டன. தேங்காய் பட்டினத்தில் மீன் பிடித் துறைமுகம் அமைக்க, மண் ஆய்வுப் பணிகள் அவசர கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்கிறார்.







* ஆர்.எஸ். பார்த்தசாரதி



* பாதிரியார் சார்லஸ்

கடலோர அமைதி மற்றும் வளர்ச்சிக் குழுவின் இயக்குனரான பாதிரியார் சார்லஸ் "கொச்சின் ஒரு தேசியத் துறைமுகம். அதைப் பயன்படுத்த இந்தியாவின் எந்தப் பகுதி மீனவனுக்கும் உரிமையுண்டு. எனவே அந்த உரிமையை நாங்கள் இழக்காத வண்ணம் தமிழக அரசு, கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்" என்கிறார். மேலும், "நீரோடையில் தொடங்கி ஆரோக்கியபுரம் வரை, நாற்பத்து இரண்டு கடலோர கிராமங்களில் வசிக்கும் மீனவர்கள், குமரி மாவட்ட மக்கள் தொகையில் இரண்டாம் இடத்தை வகிக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கென்று தமிழக சட்ட சபையில் ஒரு பிரதிநிதிகூடக் கிடையாது. சட்டமன்ற மறுசீரமைப்புக் குழு, குமரி மாவட்டத்தில் மீனவர்களுக்கென்று இரண்டு தொகுதிகளை ஒதுக்க வேண்டும்" என்றும் கோரிக்கை விடுக்கிறார்.



மாயம்மா



• தாகூர்

குமரி கடற்கரையில் கேரள அரசின் சுற்றுலா விடுதியை ஒட்டி பிரம்மாண்டமாய் எழுந்து நிற்கிறது மாயம்மா சமாஜம். சிரித்த முகமும், கூரிய பார்வையும் கொண்ட வயது முதிர்ந்த மாயம்மா என்ற மூதாட்டியின் உருவப்படத்தை வைத்து, இங்கே தினசரி பஜனை, தீபாராதனை வழிபாடு என்று தூள் பறக்கிறது.

குமரிமுனைக்கு வரும் பக்தர்கள் சமாஜத்திற்குள்ளேயும் சென்று மாயம்மாவை வணங்கிச் செல்கிறார்கள். இது தவிர, விவேகானந்தர் பாறைக்குச் செல்லும் படகுத் துறையை ஒட்டியும், மாயம்மாவுக்கு ஒரு கோயில் முளைத்து விட்டது.




யாரிந்த மாயம்மா?

''அவர் மனநலம் குன்றிய மூதாட்டியாக சுமார் முப்பது வருடங்கள் கன்னியாகுமரியில் ஆதரவற்றுத் திரிந்தவர். பணம் பண்ண நினைத்த கும்பலொன்று அவரைக் கடவுளாக்கி, கோயில் கட்டி, அறக்கட்டளைத் தொடங்கி பக்தர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது'' என்கிறார் குமரி மாவட்ட யு.என்.ஐ. செய்தியாளரான தாகூர்.

''மற்றப் பகுதிகளைவிட குமரி மாவட்டத்தில், மனநலம் குன்றியவர்களின் எண்ணிக்கை அதிகம். மாவட்ட நிர்வாகமே கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கும் பிரச்னை இது. இங்கே திரியும் மனநோயாளிகளில் பெரும்பாலானவர்கள், வட மாநிலங்களில் இருந்து இங்கே அழைத்து வரப்பட்டவர்கள். மாயம்மாவும் அப்படி அழைத்து வரப்பட்டு, இங்கே வலுக்கட்டாயமாக அநாதையாக்கப்பட்டவர்தான். இவர் தனக்குத் தரப்படும் உணவை சாப்பிட்டு விட்டு, நாய்களுக்கும் போடுவார். இதனால் குறைந்தது பத்து, பதினைந்து நாய்கள் இவரைச் சுற்றிய படியே இருக்கும். வாயில் எப்போதும் புகையிலையை அடக்கும் இவருக்கு, தம்பக் (புகையிலை) என்ற வார்த்தையைத் தவிர, எதுவும் தெரியாது. இவரை வைத்துப் பணம் பண்ண நினைத்தவர்கள், முதலில் இவரைப் புகைப் படம் எடுத்து விற்கத் தொடங்கினார்கள். பிறகு இவரை சில பிரபலங்கள் கடத்திக் கொண்டு போனதில் சேலம் ஏற்காடில் இறந்து போனார்'' என்கிறார் தாகூர்.

இப்போது இவரது பெயரால் வாங்கப் பட்ட சொத்துகளுக்குப் பலரும் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்க, கடற்கரை கிராமத்தில் கள்ளச் சாராயம் விற்றுவந்த அரி என்பவர், தன் பங்குக்கு மாயம்மாவுக்கு தனிக் கோயிலே கட்டி வசூல் செய்கிறாராம். மாயம்மாவுக்கு மாயம்மா என்று பெயர் சூட்டியவர்கள் குமரி கடற்கரை வியாபாரிகள்.





பரிதாபத்தில் அய்யன்!

'அரசியல்' பற்றி நாற்பது அதிகாரங்களைப் பாடியவர் அய்யன் திருவள்ளுவர். அவரது சிலை இப்போது அதி.மு.க - தி.மு.க அரசியலில் சிக்கித் தள்ளாடுகிறது. பொது மக்களின் பார்வைக்காகச் சிலை திறந்து வைக்கப்பட்டு, மூன்றாண்டுகள் முடிந்துவிட்டன. சிலையை உப்புக்காற்று அரித்து விடாமல் இருக்க, அதன் மீது எப்போஸைட் (expoxite) என்ற இரசாயனக் கலவை பூசப்பட்டது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்தக் கலவையின் ஆயுள் மூன்று ஆண்டுகள் மட்டுமே. இக் கலவையை மீண்டும் இறக்குமதி செய்து, கடந்த ஜனவரி மாதமே சிலையின் மீது பூசியிருக்க வேண்டும். சிலையைப் பார்வையிட வருகை தரும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து, ஆண்டுக்கு அறுபது லட்ச ரூபாய் அனுமதிக் கட்டணமாக வசூலாகிறது. எக்ஸ்போஸைட் பூசக்கோ, முப்பது லட்ச ரூபாய்க்கும் குறைவாகத்தான் செலவாகும். ஆனால் இதுவரை அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று குமுறுகிறார்கள் குமரி மக்கள்.

"குமரிக் கடல் பகுதியில் ஆண்டு முழுவதும் மூன்று மீட்டர் வேகத்திற்குக் குறையாத உப்புக்காற்று ஊறி எடுக்கிறது. இந்நிலையில் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, திருவள்ளுவர் சிலையைப் பராமரிக்க வேண்டியது அதிமுக அரசின் கடமை" என்று வலியுறுத்திச் சொல்கிறார், திருவள்ளுவர், குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதை, பல்வேறு ஆராய்ச்சிகள் மூலம் நிரூபித்து வரும் டாக்டர் பத்மநாபன்.

மக்கள் பணத்தால் எழுப்பப்பட்ட திருவள்ளுவர் சிலையை, தேசியச் சின்னமாக அறிவித்து, மத்திய அரசு பராமரிப்பில் எடுத்துக் கொள்ள வேண்டும். அல்லது சிலையைப் பராமரிக்க தனியே ஒரு அறக்கட்டளையை நிறுவி, பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் சூடு பிடித்திருக்கின்றன. இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கும், அதிமுக அரசு, கடந்த ஆண்டு வெளியிட்ட சுற்றுலா வரைபடத்திலிருந்து 133 அடி உயரம் கொண்ட அய்யன் வள்ளுவர் சிலையை கூலாக நீக்கி, இருட்டடிப்பு செய்திருக்கிறது. பாவம் அய்யன்!



* டாக்டர் பத்மநாபன்.

உயிர்ப்பு

அதிகாலையிலே விழிப்பு பளிச்சென்று வந்தது அவனுக்கு. எழுந்து பார்த்தான். மணி நான்கு இருக்கலாம். குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. உடம்பில் காற்று பட்டதும் சிலிர்த்தது.

சட்டென்று யோசிக்காமல் ஓடத் தொடங்கினான். ஓட்டத்தின் வேகத்தில் மண் பொறுக்குகள் காலில் குத்தத் தொடங்கின. பழகிவிட்டபடியால் அவை ஒருவிதமான சுகமான வலியாகவே இருந்தது. ஆடி பதினைந்துக்கு மேல் பனைமரங்கள் பழுக்கத் தொடங்கிவிடும். காய்களை வெட்டியது போக, பருவம் தவறிப் போனது எல்லாம் முற்றிவிடும், மேற்காற்று வீசத் தொடங்கிவிட்டால், குலையிலிருந்து வெளிவந்த பத்தாவது நாளிலேயே... காயாகி முற்றிவிடும்...

மரம் ஏறிகள் மரத்தில் உச்சிக் கொள்ளும் முன்பே பார்வையில் முற்றிவிட்டது தெரியும். விட்டு விடுவார்கள், பழங்களாகப் பழுத்து விழும்.

இவன் ஓட்டத்தை நிறுத்தி விட்டு, தனக்கு முன்போ பின்போ எவராவது பயல்கள் ஓடிவருகிறார்களா, என்று கவனித்தான். மெல்லிய இருட்டில் ஏதும் உருவங்கள் தென்படவில்லை என்றதும் திருப்தி ஏற்பட்டது. மீண்டும் ஓட்டம் பிடிக்கத் தொடங்கியிருந்தான்.

வாய்க்கால் கரையிலிருந்து இறங்கி, மரத்துக்கு அடியில் கூர்மையாகப் பார்வையைச் செலுத்தினால் ஒரு பழத்தையும் காணோம், எவராவது வந்து பொறுக்கி விட்டார்களா?" என்று இலேசாகப் பதற்றம் அடைந்தான்.

அடுத்த மரத்துக்கு ஓடினான்.

பழத்தின் வாசம் வந்து மூக்கினைத் தாக்கியதும் சந்தோஷம் பீறிட்டது. கையிலிருந்த சாக்குப் பையை ஒரு கணம் பார்த்தான். மரத்தின் அடியிலே உற்றுக் கவனித்தான். இரண்டு பழங்கள் அருகருகே கிடந்தன.

எடுத்துப் பையில் போட்டான்.

அடுத்த மரம்... முந்தா நாளோடு பழுத்த குலை தீர்ந்துவிட்டது. மிச்சமிருக்கும் இரண்டு குலைகளும் பழுக்க எப்படியும் ஒரு வாரம் ஆகலாம்.

அடுத்த மரம், என்று







சிவகுமார் முத்தய்யா

பழங்களைச் சேகரிக்கத் தொடங்கினான். பொழுது விடியத் தொடங்கியிருந்தது...

சாக்குப்பை நிறையப் பழங்கள் நிரம்பியிருந்தன. அதிகாலையிலேயே பசிக்கத் தொடங்கியிருந்தது.

நாவல் மரத்துக்குச் சென்று, பறித்துவிட வேண்டும் என்கிற யோசனை வந்தது.

நல்லவேளை மறந்திருப்போம். நினைப்பு வந்துவிட்டது. குதூகலம் கொப்பளிக்க ஓடினான்.

பூமிநாதனும், ரவியும் மரத்தில் இருக்கிறார்கள். இவனைக் கண்டதும் கொல்லென்று சிரிக்கிறார்கள்.

"கதிரேசா... நீ... பனம்பழம் பொறுக்கிட்டியே, நாங்க நாவப்பழம் பறிச்சிட்டோம்" ரவி சொல்ல, பூமிநாதன், "ஆமாண்டோய், இது எப்படியிருக்கு?"

சாக்குப்பையைத் தூக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினான். தூக்க முடியவில்லை. தோளில் மாட்டிக் கொண்டு கொஞ்ச தூரம் நடந்ததால் கனத்தது. அடிக்கடி கையை மாற்றி மாட்டிக் கொண்டு நடக்க வேண்டியிருந்தது. தெருவில் நுழையும்போது அமுதாவும், லெட்சுமியும் "ஏய் கதிரேசா, எனக்கு ஒரு பழம் குடுரா" என்று கெஞ்சினார்கள், பைக்குள் கையைவிட்டு நல்ல பழுத்த பழமாய், அமுங்குவதாய்ப் பார்த்து எடுத்துக் கொடுத்தான்.

கூரை வீட்டு வாசலில் அம்மாகத்தாயி உட்கார்ந்து ஏதோ புலம்பிக் கொண்டிருந்தாள். கடந்த ஆறு மாதமாகவே அவளுக்கு உடம்பு சரியில்லை. பெரிய ஆஸ்பத்திரியில் ஒரு மாதம் சிகிச்சை அளித்தும் ஒரு பயனும் இல்லை. மேற்கொண்டு வைத்தியம் பார்க்க அப்பாவிடம் ஒன்றுமில்லை என்ற பிறகு, திண்ணையில் படுக்கையை அமைத்துக் கொண்டாள் அம்மா...

இவன் பையைப் பார்த்ததும் இலேசாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பு அவர் தாடிக்குள்ளிருந்து வெளிவரவில்லை.

"யப்பா... பழத்தை அரிஞ்சு குடுப்பா" என்றான்.

"வைடா" என்றார்.

காலை மணி ஏழு ஆகியிருந்தது. வேப்பங் குச்சி ஒடித்து பல் தேய்த்தான். இரண்டு வாளி நீர் கொண்டு வந்து ஊற்றிக் குளித்தான். அடுப்பங்கரை உள்ளே சென்றான். இரவு சாப்பிட்டது போக மீதியிருந்த பழைய சோறு நொதித்துக் கொண்டிருந்தது....

என்ன அவசரமோ தெரியவில்லை, இரவு சாப்பிட்ட எச்சில் பாத்திரங்களைக் கழுவ மறந்து விட்டிருந்தான். அரக்கப் பரக்க அவற்றை அள்ளிக் கொண்டு வெளியே வரும் போது, வடிதட்டு ஒன்று தவறி விழுந்து "டங்" என்று ஓசை எழுப்பியது. வாசலில் பிரக்ஞை அற்று உட்கார்ந்திருக்கும் அம்மா இவனைத் திரும்பிப் பார்த்தாள்.

தண்ணீர் எடுத்து வந்து அடுப்பிலிருந்து சாம்பலை அள்ளிக் கொண்டு வந்து போட்டு விறுவிறுவென தேய்த்துக் கழுவினான். பாத்திரங்கள் பளிச்சென்று துலங்கின.

குண்டாவில்... பழைய சோற்றை அள்ளிப் போட்டு, ஜாடியிலிருந்த உப்பை அள்ளிப் போட்டான். சின்ன வெங்காயம் நான்கை உரித்துப் போட்டுக் கலக்கி அள்ளி உள்ளே இறக்க இறக்க, மனம் குளிர்ச்சி அடைந்தது. பள்ளியில் தமிழாசிரியர் மனப்பாடம் செய்யச் சொன்ன... "வாடிய பயிர்களைக் கண்ட பொழுதெல்லாம் வாடினேன்" பாடலை இலேசாக முணுமுணுத்துக் கொண்டான்.

சீருடையை அணிந்து கொண்டான்.

அம்மையப்பனது பள்ளிக்கூடம் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. இந்த நேரத்துக்குக் கிளம்பினால் தான் நடந்து செல்ல முடியும். வேகமாக நடக்கத் தொடங்கினான். பள்ளிக்கூட வாசலுக்கு இவன் போகவும், பெல் அடிக்கவும் சரியாக இருந்தது.



"உன் ஹேர்ஸ்டைல் சூப்பர்! எந்த சலூனில்டா முடி வெட்டிக்கிட்டே?"

"கடுப்பைக் கிளப்பாதே! தூங்கும் போது தலைமுடியை எலி கடிச்சுத் தொலைச்சிடுச்சு!"

- உ. ராஜாஜி

மதியச் சாப்பாடு கிடைக்கவில்லை. கணக்கு ஆசிரியர் சுப்பிரமணியன் மதிய கடைசிப் பாடவேளையின் போது, கணக்குகளைப் புரியவைக்க எடுத்துக் கொண்ட சிரத்தையின் காரணமாக, மதியச் சாப்பாடு பெல் அடித்தும், அரை மணி நேரத்தைப் பறித்துக் கொண்டார். அதனால் மதிய உணவு சாப்பாடு தீர்ந்து போயிருந்தது. அவர் வகுப்பை விட்டு வெளியேறிய போது, அவர் மீது கோபம் கோபமாக வந்தது. கோபம் மாறி தொண்டையில் வலித்தது. பசி கிள்ளி அடி வயிறு வலித்தது. இலேசாக மயக்கம், தாகம் எடுத்தது.

பள்ளியைவிட்டு நடக்க முடியவில்லை. கெண்டைக் கால்களும் தொடையும் வலித்தது என்றாலும், நம்பிக்கை கொஞ்சம் பரவசத்தை ஊட்டியது. அப்பா இந்நேரம் பனம்பழம் அரிந்து அவித்து வைத்திருப்பார். போய்த் தின்னலாம்.

வேகமாக நடையைப்போட்டான். அம்மா வாசலில் உட்கார்ந்து கிழக்குப் பக்கம் பார்த்தபடி இருந்தாள். உள்ளே நுழைந்தான். காலையில் பொறுக்கிக் கொண்டு வந்திருந்த பனம்பழம் சாக்குப் பையிலிருந்து சிதறிக் கிடந்தன. பார்த்தவுடன் அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

காற்று பலமாய் அடிக்கத் தொடங்கியது. பெரும் மழை பெய்யக்கூடும் என்று அவனுக்குத் தோன்றியதும், திண்ணைச் சுவரில் சாய்ந்தான். வாசலில் உட்கார்ந்து இருந்த அம்மா எழுந்து திண்ணைக்கு வந்தாள். இவனை ஒரு கணம் பார்த்துவிட்டு முணுமுணுத்தாள்.

பசி மறந்து போயிருந்தது. தெருவில் ஜனங்கள் "மழைக்கு" பயந்து கொண்டு ஓடுவது தெரிந்தது. மழையை வேடிக்கை பார்க்கத் தொடங்கினான்.

மார்பக புற்றுநோய் பரவாமல் தடுக்கவும், கட்டுப்படுத்தவும், வராமல் பாதுகாக்கவும் தேவையான தெய்வீக மூலிகைகள்



& இயற்கை சிகிச்சை முறைகள்



பெண்களுக்கு தோன்றும் புற்று நோய்களில் மார்பகபுற்று நோய் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. இது ஹார்மோன் குறைபாடு, வைரஸ் போன்ற நோய்க்கிருமி, பரம்பரை தன்மை, உணவு பழக்கம், வாழ்க்கை முறை, சுற்று சூழல் மனநிலை பாதிப்பு போன்ற ஏதேனும் ஓரிரு காரணங்களால் உடலில் நச்சுக்கள் அதிகமாகி புற்று நோயாக மாறிவிடுகின்றது. இவைகளை நாம் உட்கொள்ளும் உணவில் கசப்பு சுவையுள்ள காய்கள், கீரைகள், பழங்கள், நம் அருகில் உள்ள சில வகையான கசப்பு சுவையுள்ள மூலிகைகள் உட்கொள்வதால் எல்லாவிதமான புற்று நோய்களையும் குணமாக்கி கொள்ளலாம். வராமலும் தடுத்துக் கொள்ளலாம். கசப்பு சுவையானது நச்சுக்களை முறிப்பதிலும், நோய்க்கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. சுமார் 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குத் தான் மார்பக புற்று நோய் வருகின்றது. இதற்கு ரேடியோ தெரபி, கீமோ தெரபி, அறுவை சிகிச்சை போன்ற முறையில் சிகிச்சைகள் தரப்படுகின்றது. இவைகளில் பக்க விளைவுகள் உண்டு. முழுமையான நிவாரணத்திற்கு உத்திரவாதமில்லை. எனவே எல்லா பெண்களும் மார்பக புற்று நோய் பற்றியும் அவைகளை குணப்படுத்தும் மூலிகை, உணவு முறைகளை தெரிந்து கொள்வது அவசியம்.



மார்பக புற்று நோய் வருவதற்கான காரணம் : • குறிப்பிட்ட வயதிற்கு முன்பே மாதவிடாய் ஏற்படுவது. • 45 முதல் 50 வயதிற்கு பிறகு மாதவிடாய் வருவது நின்று விடும். 45 வயதிற்கு பிறகும் மாதவிடாய் ஏற்பட்டால் மார்பகபுற்று நோய் வரலாம். குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்காமல் இருப்பது, காலதாமதமாக முதல் குழந்தை பெறுவது, குழந்தையில்லாதவர்கள், மார்பகபுற்று நோய் ஏற்கெனவே இருக்கும் குடும்பத்தில் பிறந்தோர் ஆகியோருக்கு இந்நோய் வரும் அபாயம் அதிகம்.

மார்பக புற்று நோயின் அறிகுறிகள் : மாதவிடாய் ஏற்படுவதற்கு ஒரு வாரம் முன்போ (அ) மாதவிடாய் காலத்திலோ அல்லாமல் மற்ற நாட்களில் மார்பகத்தில் தனிதனியாக, வலியற்ற சிறிய அல்லது பெரிய கட்டிகள் தோன்றுதல், மார்பகங்களின் அளவில் மாற்றம், மார்பக காம்புகள் உள்மடித்து இருத்தல், மார்பக காம்பில் இருந்து இரத்தம் வடிதல், மார்பக காம்பைச் சுற்றி அரிப்பு, மார்பகம் அசைக்க முடியாத உறுதியான நிலையில் காணப்படுதல் போன்றன மார்பக புற்று நோயின் அறிகுறிகள் ஆகும். மேலும் 40 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மார்பக சுய பரிசோதனை செய்தும் மேற்கூறிய அறிகுறிகள் உள்ளதா என்பதை தெரிந்துக் கொள்ளலாம்.

மார்பக புற்று நோயாளிகள் பின்பற்ற வேண்டிய உணவு முறைகள் : செயற்கையாகத் தயாரிக்கப்படும் உணவுகளும், சில உணவுத் தயாரிப்பு முறைகளும் புற்று நோய்க்கு காரணமாகின்றன. எனவே நிறத்திற்காகவும், மணத்திற்காகவும், இனிப்புக்காகவும் சேர்க்கப்படும் செயற்கை வேதிப் பொருட்களை தவிர்த்து, புற்று நோயை விரட்டியடிக்கின்ற பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்களை அதிகம் உட்கொள்ள வேண்டும். எனவே காலை உணவாக தினம் இந்நோயாளிகள், பச்சையாக சாப்பிடும் பழங்கள், காய்கள், வெஜிடபிள் சாலட், பழச்சாறுகள் இளநீர் போன்றவைகளாக உட்கொள்ள வேண்டும். அந்தந்த காலங்களில் கிடைக்கும் பழங்கள், காய்கள், வெஜிடபிள் சாலட், பழச்சாறுகள், இளநீர் போன்றவைகளாக உட்கொள்ள வேண்டும். பகல் வேளை உணவை 50% சமைத்த உணவாகவும், 50% அளவு காய்கள், கீரைகள் இருக்கும்படியாக உள்ள உணவுகளை சாப்பிடவும் மாலையில் வெஜிடபிள் சூப், சத்துமாவு கஞ்சி, பட்டாணி சூப், கீரைகள் சூப் போன்றன சாப்பிடலாம். இரவு சமைத்த உணவாக வாரம் நான்கு நாட்களும், இயற்கை உணவை வாரம் மூன்று நாட்களும் சாப்பிடவும். இவ்வாறான உணவில் உடலுக்குத் தேவையான சரிவிகித உணவு கிடைக்கும். இதனால் நோய் விரைவில் குணமாகும்.

இயற்கை சிகிச்சை முறைகள் : இரண்டு மார்பகங்களுக்கும் மண்பற்று போட்டு 20 முதல் 30 நிமிடங்களுக்கு பிறகு தண்ணீரால் சுத்தம் செய்யலாம். இதனை இரண்டு நாட்களுக்கு ஒரு முறை காலை (அ) மாலை வேளைகளில் செய்துக் கொள்ள வேண்டும். வெந்நீர் ஒத்தடம் தினம் காலை (அ) மாலை வேளைகளில் 20 நிமிடம் தர வேண்டும். வேப்பிலை + மஞ்சள் தூள் அரைத்து மார்பகம்மீது பற்று போட்டு 30 நிமிடம் கழித்து சுத்தம் செய்யலாம்.

மேற்கூறியவைகளை பின்பற்றினால் இந்நோயினை முழுமையாக கட்டுப்படுத்தலாம். நலமுடன் இருக்கும்போதே வாரம் ஓரிரு முறைகள் பின்பற்றினால் வராமல் தடுத்துக் கொள்ளலாம்.

தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

தலைமை முகவரி : அஞ்சல் பெட்டி 30, எண்.1, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்),
திருப்பத்தூர் (வ.ஆ.மா.) - 635 601 ✆ : 04179-220469, 222769 Cell : 9443438670

சென்னை முகவரி : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்)
கெல்லீஸ், சென்னை - 10. ✆ : 044-26424285, 26427638 Cell : 9444161670

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7

7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), ✆ : 24011589, 24033879	**9**ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை. ஹோட்டல் பிளாட்டோ, (கல்பனா தியேட்டர் அருகில்) செப்பிங்கடைப் ரோடு. ✆ : 080-2266374, 2873013	**20 & 21**ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, ✆ : 25717126, 25723651

• 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில்



நாகேஷ்

23 சிரித்து வாழ வேண்டும்

"டைமிங் ஸென்ஸ்தான் காமெடி பண்ணுது!"

எனக்கு ஆனந்த் என்ற ஒரு நண்பர் அறிமுகமானார். அவரது பின்னணியைப் பற்றி எதுவும் தெரியாது. நாங்கள் இரண்டு பேருமாக அவரது ஸ்கூட்டரில் எங்காவது போவது உண்டு. ஒருநாள், என்னைத் தேடி வந்தார் அவர். "எங்க அப்பா உன்னைப் பார்க்கணும்னு சொன்னார். வா!" என்றார்.

"உங்க அப்பாவா? எதற்காக என்னைத் திடீர்னு பார்க்கணும்னு சொல்றாரு?"

"எங்க அப்பாதான் பிரபல டைரக்டர், தயாரிப்பாளர் எல்.வி. பிரசாத். அவருக்கு உன்னைப் பற்றித் தெரியும். நீ என்னுடைய நண்பன் என்பதும் அவருக்குத் தெரியும் என்பதால், அழைத்து வரும்படி சொன்னார்"

இதைக் கேட்டபோது, எனக்கு இரட்டை வியப்பு. இத்தனை நாள், பிரபல டைரக்டர், தயாரிப்பாளர் எல்.வி. பிரசாதின் மகனுடன் நான் பழகி இருக்கிறேன் என்பது. இரண்டாவது, அவர், தன் படத்தில் வாய்ப்புக் கொடுப்பதற்காகக் கூப்பிட்டு அனுப்பி இருக்கிறார் என்பது. உற்சாகத்துடன் எல்.வி. பிரசாத்தைப் போய்ப் பார்த்தேன்.

என்னை ஆழமாக ஒரு பார்வை பார்த்தார். "கன்னங்கள் இரண்டும் ரொம்பக் குழி விழுந்து இருக்கே! பற்கள் கூட நன்றாக இருக்கலாமே!'' என்றார். நான் பொறுமையாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் அமைதியாய் உட்கார்ந்திருக்கவே, நான் பேசினேன்.



"சார்! நீங்க வந்து இறங்கின குதிரை எங்கே?"

"குதிரையா? நான் குதிரையில் வரவில்லை; காரில்தான் வந்தேன்."

"உங்கள் டிரஸ்ஸைப் பார்த்தால் குதிரை ஓட்டிக் கொண்டு வந்தவர் போல இருக்கிறது!"

"நோ! நீங்கள் நினைப்பது தவறு!"

"அதே மாதிரிதான்! என் முகத்தைப் பார்த்து, எனக்கு நடிக்கத் தெரியாது என்பதாக நீங்களாக முடிவு கட்டுவதும்" என்றேன்.

இது மாதிரி ஒரு பதிலை என்னிடமிருந்து அவர் எதிர்பார்க்கவில்லை என்பது புரிந்தது.

இலேசாக அதிர்ந்து போனாலும், உடனே சகஜ

நிலைக்குத் திரும்பி விட்டார்.

"நல்லா பேசறயேப்பா நீ! உனக்கு கண்டிப்பா, என் படத்துல வேஷம் உண்டு!" என்றார். இப்போது இன்ப அதிர்ச்சி எனக்கு!

அந்தப் படத்தின் பெயர் தாயில்லாப் பிள்ளை. படம் வெளியாகி மிக நன்றாக ஓடியது. ஆனாலும், எனக்கு அந்தப் படத்தில் தரப்பட்ட வேஷம், மிகவும் சிறியது என்பதால், பெரிய அளவில் பெயர் கிடைக்கவில்லை.

எல்.வி. பிரசாத் பற்றி இன்னொரு சம்பவத்தையும் நான் நினைவு கூற விரும்புகிறேன்.

ஒரு படத்தில், வீட்டு எஜமானி அம்மாளின் மரணத்தையடுத்து, வீட்டில் இருக்கிறவர்களின் துக்கமான ரியாக்ஷனைப் படம் பிடித்துக் கொண்டிருந்தனர். வேலைக்காரன் அழுவதைப் படம் பிடித்த போது, டைரக்டர் எல்.வி. பிரசாத், 'இன்னும் அழு, கேவிக் கேவி அழு' என்று சைகை செய்ய, வேலைக்காரராக நடித்தவர் ரொம்பவே அழுது கொண்டிருந்தார்.

இதை பார்த்துக் கொண்டிருந்த நான், "சார்! கட்' சொல்லுங்க' என்று சொல்ல, அவரும், இவன் எதற்காக இடையில் மூக்கை நுழைக்கிறான் என்றுகூட யோசிக்காமல், சட்டென்று 'கட்' சொல்லி விட்டார். கேமரா நின்றது. எமோஷனலான சீன் எடுத்துக் கொண்டிருக்கும் சமயம், திடீரென்று என்ன ஆனது? என்று எல்லோருக்கும் சஸ்பென்ஸ்.

"எதற்காக கட் சொல்லச் சொன்னாய்?" என்று என்னை எல்.வி. பிரசாத் பார்க்க, நான் சொன்னேன்:

"சார்! நீங்க பெரிய டைரக்டர். ஆனால் இந்தக் காட்சியில், வேலைக்காரரின் நடிப்பு இத்தனை எமோஷனலாக இருக்கக் கூடாது என்பது என்னுடைய கருத்து. ஒரு எஜமானி செத்ததற்கு, அவளது கணவரைவிட அதிகமாக, வேலைக்காரர் அழுதால், அந்த அம்மாவின் கேரக்டர் மீது பார்க்கிறவர்களுக்குச் சந்தேகம் வந்து விடாதா?" என்று சொல்லி அவரை உற்றுக் கவனித்தேன்.


"நீ சொல்லுவது கரெக்ட்தான்!" என்றார் அவர்.

"இந்த சீனை. இப்படி எடுத்தால் என்ன? வேலைக்காரன் எஜமானி அம்மாளின் சடலத்தைப் பார்த்ததும் துக்கம் தாளாமல், தன் துண்டின் நுனியால் வாயைப் பொத்திக் கொண்டு, தலை குனிந்தபடியே அந்த இடத்தை விட்டுப் போய் விடுகிறான்" என்றேன்.

"வெரிகுட்! ரொம்ப கரெக்ட்! அப்படியே எடுத்திடலாம்" என்றவர், அடுத்துச் சொன்ன வார்த்தைகள், எனக்கு என்றைக்கும் மறக்காது. "You are fit to be a director"

எவ்வளவு பெரிய மனிதரிடமிருந்து எவ்வளவு பெரிய பாராட்டு! ஹி ஈஸ் கிரேட்!

• பாலாஜி



தாயில்லாப் பிள்ளை படத்தில் நான் நடித்துக் கொண்டு இருந்த சமயம், திடீரென்று ஒருநாள் பாலாஜியின் ஆபீசுக்கு டெலிஃபோன் அழைப்பு வந்தது. உடனடியாக சித்ராலயா ஆபீசுக்கு வந்து, டைரக்டர் ஸ்ரீதரைப் பார்க்க வேண்டும் என்று தகவல். அந்தக் காலத்தில் டைரக்டர் ஸ்ரீதர் அனைவரது கவனத்தையும் ஈர்த்து வைத்திருந்தார். அவரது டைரக்ஷனில் நடிப்பது பெருமைக்குரிய விஷயமாய்க் கருதப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு டைரக்டரின் கம்பெனியான சித்ராலயாவிலிருந்து எனக்கு



• ஸ்ரீதர்

அழைப்பு வந்திருக்கிறது என்றால் சும்மாவா?

அந்தச் சந்தோஷமான தருணத்தில் உடனடியாக நான் நன்றியுடன் நினைத்துக் கொண்டது பாலாஜியை. ஆமாம்! எனக்கு சித்ராலயாவிலிருந்து வாய்ப்புக் கிடைப்பதற்குக் காரணமாக இருந்தவர் அவர் தான்.

அப்போது ஸ்ரீதர் 'தேன் நிலவு' படத்தை எடுத்துக் கொண்டு இருந்தார். காஷ்மீருக்குப் போய் படத்தை எடுத்து விட்டுத் திரும்பி இருந்த நேரம். சில பேட்ச் ஒர்க் சீன்களை, வாகினி ஸ்டுடியோவில் செட் போட்டு எடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போதுதான் அவரது அறிமுகம் கிடைத்தது. பாலாஜியுடன் நான் அன்று வாகினி ஸ்டுடியோவுக்குப் போயிருந்தேன். ஸ்ரீதரைப் பார்த்தோம். பாலாஜி, 'தேன்நிலவு' படத்தைப் பற்றி விசாரித்தார். அப்போது, என்னை ஸ்ரீதரிடம் சுட்டிக்காட்டி, "இது நம்ம பையன் நாகேஷ்! டிராமாக்களில் நிறைய நடித்துக் கொண்டிருக்கிறான். புதுமையான ஸ்டைலில், ஸ்பீடுடன் செய்வான்" என்று அறிமுகம் செய்து வைத்து விட்டு, என் பக்கம் திரும்பி, "நாகேஷ்! மோடி மஸ்தான் காமெடி ஒண்ணு பண்ணுவியே! அதை இவருக்கு செய்து காட்டு" என்றார். நான் மேடைகளில் செய்து காட்டும்போது, ரசிகர்களின் பலத்த கைத்தட்டலைப் பெற்றுத் தருகிற மோடி மஸ்தான் காமெடியைச் செய்து காட்டுவதற்கு முன்பே, "பரவாயில்லை; நீங்க சொன்னாலே போதும்! இந்தப் படம் முடிஞ்சிட்டது. அடுத்த படம், ஒரு சீரியஸ் சப்ஜெக்ட் பண்ணப் போறேன். அதிலும் காமெடிக்கு ஸ்கோப் இருக்கு. தேவைப்படுகிறபோது (சித்ராலயா) கோபு மூலம் தகவல் சொல்லுகிறேன்" என்றார் ஸ்ரீதர்.

நான் பாலாஜியின் அபிமானத்தைப் பெற்றவன்; என் திறமையைப் பற்றியும் அவருக்குத் தெரியும் என்பதால் அவர் எதேச்சையாக டைரக்டர் ஸ்ரீதரைச் சந்தித்த போது, என்னை அவரிடம் நல்லபடியாக அறிமுகம் செய்து வைத்தார். என்றாலும் கூட, எனக்கு சித்ராலயா போன்ற பெரிய கம்பெனிகளின் படங்களில் நடிக்கக் கூப்பிடுவார்கள் என்ற நம்பிக்கை இல்லாமல் தான் இருந்தேன்.

(சிரிப்பு தொடரும்)

“சிறை எனக்கு; தண்டனை



* கோபால், மகள்கள் மற்றும் தம்பி மகன்களுடன் விஜயலட்சுமி

கீழ்ப்பாக்கம் அப்பா தோட்டம் தெரு. கதவிலக்கம் மூன்று. கொஞ்சம் பழைய டைப் பங்களா வீடு. மாடி போர்ஷனில் மகிழ்ச்சியும், சோகமும் பின்னி ஓடுகின்றன. மகிழ்ச்சிக்குக் காரணம், இருநூற்றி ஐம்பத்தி ஆறு நாள் சிறை வாசம் அனுபவித்து விட்டு, 'நக்கீரன்' கோபால் ஜாமீனில் வீடு திரும்பியிருப்பது. சோகத்துக்குக் காரணம், கோபாலின் அம்மா ராஜமாணிக்கம்மாள் கடும் நோயுற்று படுத்த படுக்கையாக மருத்துவமனையில் இருப்பது.

கோபால், அவரது மனைவி விஜயலட்சுமி, மகள்கள் பிரபாவதி, சாருமதி தவிர, கோபாலின் தம்பி, அவரது மனைவி, இரண்டு மகன்கள் என்று கூட்டுக் குடும்பமாக வசிக்கிறார்கள். கலகலவென்று இருந்த கூட்டுக் குடும்பத்தின் சந்தோஷத்துக்கு வேட்டு வைத்த நாளையும், அதைத் தொடர்ந்து அனுபவித்த வேதனைகளையும், சந்தித்த சவால்களையும், நம்முடன் பகிர்ந்து கொள்கிறார் திருமதி. விஜயலட்சுமி கோபால்.

“ஒரு வெள்ளி மாலை அவரைக் கைது செய்தார்கள். அதன் பிறகு எங்கிருக்கிறார் என்று தெரியாமல் அவஸ்தைப்பட்டு, அடுத்த வாரம் புதன்கிழமை தான் அவரைப் பார்க்க முடிந்தது. அந்த இடைப்பட்ட நாட்களில் நான் பட்ட வேதனை, அந்த மடப்புரம் காளிக்குத்தான் தெரியும். அவரைப் பார்த்தவுடன்தான் எனக்கு உயிர் வந்தது. அதன் பின் வாரம் ஒருமுறை ஜெயிலில் சென்று பார்ப்பேன். கூடவே பெரும்பாலும் என் மச்சினன் மகன் ராம்பிரஸாத் வருவான். கம்பிக்குப் பின்னால் இருக்கும் அவரைப் பார்த்து ஒவ்வொரு முறையும் ''எப்போ வீட்டுக்கு வருவே பெரியப்பா?'' என்று கேட்டுக் கொண்டேயிருப்பான். அவரும், ''அடுத்த வாரம் வருவேன்டா'' என்று சொல்லுவார். 'நீ வீட்டுக்கு வரும்போது

பாட்டரியில் ஓடும் ஸ்கூட்டர் வாங்கி வரணும்" என்று சொல்லிக் கொண்டே இருப்பான். ஜாமீனில் வெளியே வந்ததும், மருத்துவமனையில் அம்மாவைப் பார்த்து விட்டு, அலுவலகத்திற்குச் சென்று, பின்னர் வீட்டுக்கு வந்தபோது அந்த ஸ்கூட்டருடன்தான் வந்தார். "நாளைக்கு வாங்கியிருக்கலாமே!" என்ற போது, "கோர்ட்டு ஜாமீன் கொடுத்துடுச்சு; அப்புறம் ராம்பிரஸாத் ஜாமீன் கொடுக்க மாட்டானே" என்று சொன்னபோது இருநூற்றி ஐம்பத்தாறு நாட்கள் காணாமல் போயிருந்த சந்தோஷம் மீண்டும் திரும்பியது. • விஜயலட்சுமி



உங்களுக்கு!”

இந்த இடைப்பட்ட காலத்தில் சோதனைக்கு மேல் பெருஞ்சோதனையாக என் அப்பா காலமாகி விட்டார். மாமனார் மேல் மிகவும் பாசத்துடன் இருந்தவர் இவர். ஒரு பக்கம் மாமியார் உடல்நிலை. அவருக்கு மாதம் ஒருமுறை கீமோதெரபி செய்ய வேண்டும். என் கணவர்தான் ஒவ்வொரு முறையும் மாமியாரை வற்புறுத்தி அழைத்துச் செல்வார். அவர் சிறைக்குச் சென்றவுடன் மாமியாரைச் சமாதானப் படுத்தி, சிகிச்சைக்கு அழைத்துப் போவதில் கொஞ்சம் போராட வேண்டியிருந்தது. அவர் சொன்னால் உடனே கேட்பார் மாமியார். மாமியார் உடல்நிலையில் பின்னடைவு.

என் வேதனைகளைச் சமாளிக்க, இறக்கி வைக்க, பெரிய உதவியாக இருந்தது இந்தக் கூட்டுக் குடும்பம்தான். எங்கள் குடும்பத்தைத் தவிர, முழுக்க முழுக்க, பின்பலமாக இருந்தது, செயலாற்றியது 'நக்கீரன்' குடும்பமும். கம்பிக்குப் பின்னாலிருந்து ஒரு முறை அவர் 'நக்கீரன் தம்பி'களைப் பார்த்து, "சிறை எனக்கு; தண்டனை உங்களுக்கு" என்று சொன்ன போது அனைவரும் கலங்கிப் போய் விட்டோம்.

உயர்நீதி மன்றத்தில் ஒரு நீதிபதி ஜாமீன் வழங்கிய போது உடனே வந்து விடுவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தை அணுகி தடை வாங்கி விட்டது. என் வேதனையின் உச்சகட்டம் அன்றுதான்.

உடனே மதுரை அருகே உள்ள மடப்புரம் காளியைத் தரிசனம் செய்யக் கிளம்பி விட்டோம். வேண்டுதல் இறுதியில் நிறைவேறி விட்டது.

மகன்கள் மேல் உள்ள பாசத்தை அவர் வெளிக்காட்ட மாட்டார். மச்சினன் மகன் ராம் பிரஸாத்தான் ரொம்பச் செல்லம். "ரொம்ப பாசத்தைக் காட்டினால் இது போன்ற சந்தர்ப்பங்களில் பிரிவுத் துயர் அதிகம் வாட்டி விடும்" என்பார். "புகழையும், சோதனைகளையும் ஒரே மனநிலையோடு எதிர் கொண்டால் கஷ்டங்கள் தெரியாது" என்று அடிக்கடி சொல்லுவார். அதுவே தாரக மந்திரம்" என்று சொல்லி முடித்த திருமதி கோபாலிடம், "உங்கள் கணவர் எதிர்காலத்தில் அரசியலில் ஈடுபடுவது என்று முடிவெடுத்தால், உங்கள் ரியாக்ஷன் எப்படியிருக்கும்?" என்றோம்.

"எனக்கு உடன்பாடில்லீங்க".

சந்திப்பு : கௌசி
படங்கள் : ராஜன்

● ரஞ்சனிப்ரியன், பள்ளிபாளையம்

? காங்கிரஸுடன் சேரும் கட்சிகள் மக்களால் நிராகரிக்கப்படும் என்றும் மதச்சார்பின்மை இனி எடுபடாது என்றும் பா.ஜ.க.வின் அகில இந்திய செயலர் இல. கணேசன் எச்சரித்திருக்கிறாரே...?

! வடமாநில தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்ட தந்திர அறிக்கை. அந்தத் தேர்தலில் ஹிந்துத்வாவை அடக்கி வாசித்ததால்தான் பி.ஜே.பி. வெற்றி பெற்றது என்பதை மறைத்து, பி.ஜே.பி.யின் உண்மை ஸ்வரூபத்தை உணர்த்துகிற வார்த்தைகள். காங்கிரஸுடன் கூட்டணி அமைக்க நினைக்கும் கட்சிகளுக்கு வீண் மிரட்டல்.


● மதுரை முருகேசன், திருச்சி - 18

? வோட்டு வங்கி பற்றிக் கவலை கொள்ளாமல் நிதிக் கொள்கையில் நம் தமிழக முதல்வரின் அணுகுமுறை செயல்பாடு ஓர் அதீத முயற்சி என்று கூறும் லேனாவின் கருத்து பற்றி..?

! ஆகா, ரொம்ப சரி! அவருடைய நிதிக் கொள்கை, தமிழனைப் பொருத்தமட்டில் நிதிக் கொள்ளையாக இருப்பதுதான் அவன் துரதிர்ஷ்டம்.



* தந்திர அறிக்கை



* ஆகம ஆணை

● நகை தி.மகராசன், கடமலைக்குண்டு

? 'தெற்காசிய நாடுகள் பொதுவான செலாவணியை வைத்துக் கொள்ளலாம், எல்லைகளைத் திறந்துவிடலாம்' என்ற வாஜ்பாயின் யோசனை பற்றி..?


! யூரோவை நினைத்துக் கொண்டு இங்கு செயல்படுவது, அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கும் கதை ஆகிவிடும்; ஜாக்கிரதை! பாகிஸ்தானுடன் நட்புறவு பலப்படாதவரை, எல்லைகளைத் திறப்பதிலும் எச்சரிக்கை தேவை.

மதில் மேலுள்ள தி.மு.க. எந்தப் பக்கம் குதிக்கும்?

● கி. துரைசாமி, மங்கலப்பட்டி *

? கலை வளரக் காரணமானது செல்வச் செழிப்பா? வாழ்க்கையில் ஏற்படும் கவையான சம்பவங்களா?

! கலை, வாழ்க்கை அனுபவங்களிலிருந்து உருவாகிறது; செல்வச் செழிப்பால் போற்றி வளர்க்கப்படுகிறது.



● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை

? 'பிரச்னைகளை அணுகுவதில் பிரதமர் வாஜ்பாய் வியப்புக்குரிய மனிதராக விளங்குகிறார்' என்று பேனசிர் புட்டோ பாராட்டியிருக்கிறாரே...?

! ஆமாம்; பேனசிரை இந்தியாவுக்குள் வரவேற்று அத்வானி உபசரிப்பதைத் தடுக்காமல், பார்த்துக் கொண்டு சும்மா இருந்தாரே, அதுவே வியப்புக்குரிய அணுகுமுறைதான்! இந்த லட்சணத்தில் இந்தியா - பாக். உறவு எப்படி முன்னேறும்?

● கே. என். பாலகிருஷ்ணன், சென்னை - 91

? 'ஆயர்பாடி கண்ணன் பெண்களின் பின்னலைப் பின்னின்றிழுக்கும்போது மனிதர்களாகிய நாம் அவ்வாறு செய்தால் தவறா?' என்று விமர்சகர் சுப்புடு கேட்டுள்ளாரே?

! முத்துஸ்வாமி தீக்ஷிதரின் கிருஷ்ணானுபவ கீர்த்தனைகள் குறித்து ஹரிகதை செய்த கல்யாணபுரம் ஆராவமுதன் சொன்னது ஞாபகம்

* அஞ்ஞானத் தேடல்!



வருகிறது : 'கிருஷ்ணன் லீலைகள் செய்தானே என்று நியாயம் தேடுவது அஞ்ஞானம். பரமேசுவரன் ஆலகால விஷத்தை உண்டானே என நாமும் அந்த விஷத்தை உண்ண முடியுமா? அவ்வளவு ஏன், கிருஷ்ணன் சாப்பிட்ட அளவு வெண்ணெயை நம்மால் சாப்பிட முடியுமா!'

● **ஜி. குப்புசுவாமி, மேல்மருவத்தூர்**


? ப. அன்பழகன் கைது குறித்து...?

! காவல் துறையின் திட்டமிட்ட தவறான காரியம்; கலைஞரின் ஓவர் ரியாக்ஷன், சைலேந்திர பாபுவின் பின்வாங்கல் என அழகான குறுநாடகம்.


● **சிம்மவாஹினி, சென்னை**

? இரவு பன்னிரண்டு மணிக்குக் கோயில் நடை திறக்கக் கூடாது என ஸ்ரீ ஜெயேந்திரர் ஒரு போடு போட்டிருக்கிறாரே? இது சாத்தியமா...?

! ஆங்கிலப் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகிவிட்ட நம்மை மீட்க அவர் செய்யும் முயற்சி இது. ஆகம விதிகளைத் தான் அவர் சொல்வார்.



● பரிதாபக் கோலம்!



● அவசர யோசனை!

● அநீதி(நிதி)க் கொள்கை!

● **ஆர்.கோபாலன், சென்னை**

? மதில் மேலுள்ள தி.மு.க. பூனை எந்தப் பக்கம் குதிக்கும்...? அக்னி சர்மாவைக் கேட்டுச் சொல்ல முடியுமா?

! அக்னி சர்மாவைக் கேட்பானேன்... எந்தப் பக்கம் பால் வைக்கிறார்கள்; எந்தப் பக்கம் தண்ணீர் காட்டுகிறார்கள் என்பதைப் பொருத்தது.

● **ராதா ராமஸ்வாமி, திருநெல்வேலி - 11**

? ஆணுக்கு நிகரான ஆற்றலும் மன உறுதியும் மிக்கவர் நம் முதல்வர் என்பதில் உங்களுக்கு மாற்றுக் கருத்து உண்டா?

! ஆற்றல், மன உறுதி இவற்றைக் கொண்டிருப்பதில் ஆண் என்ன? பெண் என்ன? அதுவும் பாரதி பிறந்த தமிழ்நாட்டிலா இப்படி ஓர் ஒப்பீடு? ஆற்றலும் மன உறுதியும் எந்த முறையில் பயனாகிறது என்பதைப் பார்ப்பதுதான் முக்கியம்.

● **கே. சண்முகம், ஆதமங்கலம்புதூர் ❐**

? என்னதான் கொடுமைக்கார சர்வாதிகாரியாக இருந்தபோதிலும் பரதேசிக் கோலத்தில் சதாமைப் பார்க்கும்போது இனம்புரியாத பரிதாபம் ஏற்படுவது ஏன்...?

! அதுதான் மெய்யான மனிதாபிமானம்.

● **க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்**

? கல்கிக்கு மிகவும் பிடித்த 'மனோகரம்' என்ற இனிப்பு இதுவரை நான் கேள்விப்படாததாக இருக்கிறதே...?

! கரகரப்பாக நெய் சேர்த்துச் செய்த தேன்குழலைத் துண்டங்களாக்கி, பட்டும் படாமலும் கண்ணாடி வெல்லப் பாகில் நனைத்து உருண்டை பிடித்து... ஸாரி, இதுக்கு மேல் சொல்ல முடியாது அமுக்கமாய் மெல்லத்தான் முடியும்!

❐ ரூ.100 பரிசு பெறுபவர் :
கே. சண்முகம், ஜெயசித்ரா ஸ்டோர்ஸ், ஆதமங்கலம்புதூர் - 606 901

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
கி. துரைசாமி, க.தே.க.புதூர், மங்கலப்பட்டி, ஈரோடு - 638 105

CHEAPEST PRICE SHOP IN TAMILNADU OM SRI VENKATESWARA STEEL HOUSE & TEXTILES

CHEAPEST PRICE SHOP IN TAMILNADU OM SRI VENKATESWARA STEEL HOUSE & TEXTILES



உழைப்பால் உயர்ந்த உத்தமர்/தெய்வ கடாட்சம் மிகுந்தவர்
74–வது பிறந்த நாள் (27.12.2003) விழா வாழ்த்துக்கள்



Cheapest price in all types of Stainless steel articles, Cookers, Mixies, Gas stoves, Brass, Aluminium, plastic goods & toys & All Textile Items



லோக க்ஷேமத்திற்காக எல்லா வித நவக்கிரக தோஷம் நீக்கும் அருள்மிகு ஸ்ரீகுரு சக்ர விக்னேஷ்வர் ஆலயத்தை ஸ்தாபித்த தேவி உபாசகர் பிரம்மஸ்ரீ மூக்கனூர் **P. சுப்பிரமணியம் ஐயர்** அவர்கள் சக்திவாய்ந்த 18 அட்சரங்கள் உடைய இரு தாரக மந்திரங்களை (ஓம் ஸ்ரீ குரு சக்ர விக்னேஸ்வராய நம; மற்றும் ஓம் ஸ்ரீ ஹரி ஈஸ்வர ஆஞ்சநேயாய நம) உலகிற்கு அருளியவர்.

குரு - சக்ர விக்னேஷ்வரர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் - நந்திதேவர், பாலசுப்ரமணிய சுவாமி, தர்ம சாஸ்தா மற்றும் ஸ்ரீ விஷ்ணு நாராயணமூர்த்தி, ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி, ஸ்ரீ விஷ்ணு துர்கா தேவி மற்றும் குரு - சக்ர விக்னேஷ்வரர் நேர் எதிரில் அமைய பெற்றுள்ள நவக்கிரகங்களை ஒரே சமயத்தில் தீப ஆராதனையுடன் தரிசித்து வலம் வந்து, வழிபடுவோர்க்கு இறையருள் சத்தியமாய் கூடி வரும் ஆலயம் (Ph) 24337181

ஓம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஸ்டீல் ஹவுஸ் என்ற பெயரில் இயங்கும் இவரது வியாபார விலைக்கடையில் மிக மிக குறைந்த விலையில் தரமான எவர்சில்வர், பித்தளை, அலுமினியம், பிளாஸ்டிக் பொருட்கள், குக்கர், மிக்ஸி, காஸ் ஸ்டவ், Fancy gift Items, Toys, விளையாட்டு சாமான்கள், ஹோல்சேல் விலையில் மொத்தமாக கிடைக்கும்.

புதியதாக திறந்துள்ள இவரது மாடி ஜவுளிக்கடையில் Matching பிளவுஸ் materials, தரமான உள்பாவாடைகள், வேஷ்டி, துண்டு வகைகள், பனியன், Briefs, Panties, Handcurchief மற்றும் அனைத்து ஜவுளி வகைகள் மிக மிக குறைந்த விலையில் கிடைப்பது இவருக்கு மக்கள் சேவையில் எவ்வளவு ஈடுபாடு உள்ளது என்று தெரிய வருகிறது.

இவ்வாறாக, இறைப்பணி, மக்கள் பணி செய்து வரும் **P. சுப்பிரமணியம் ஐயர்** தனது துணைவியார் **திருமதி அலமேலு** அம்மாளுடன் பல்லாண்டு நலமாக வாழ்ந்து எல்லோரையும் ஆசீர்வதிக்க வேண்டுமாய் வேண்டுபவர்கள் குரு சக்ர விக்னேஸ்வரர்/ ஹரி ஈஸ்வர ஆஞ்சநேயர் பக்த கோடிகள்.

SRI VENKATESWARA STEEL HOUSE & TEXTILES

No: 5/10, 5/12 & 5/14. Ranganathan Street, Star Bazar, T. Nagar, Chennai - 17 Phone: 24340088

CHEAPEST PRICE SHOP IN TAMILNADU OM SRI VENKATESWARA STEEL HOUSE & TEXTILES

CHEAPEST PRICE SHOP IN TAMILNADU OM SRI VENKATESWARA STEEL HOUSE & TEXTILES



S.V.முதியோர் இல்லம்



Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)

50 / 88, Panchali Amman Kovil Street, (Near Arumbakkam Post Office)
Arumbakkam, Chennai - 600 106 Tel. Off: 2475 5700, 2475 1356.
E-mail:svhome@vsnl.net

சிவகாமியின் சபதம்



நாற்பத்தேழாம் அத்தியாயம்

சிறுத்தொண்டர்

அமரர் கல்கி

பல்லவ வீரர்களில் சிலர் சந்தேகித்தது போல் சேனாதிபதி பரஞ்சோதியின் உடம்புக்கு ஒன்றுமில்லை. அவருடைய தேகம் சௌக்கியமாகத்தான் இருந்தது. ஆனால், அவருடைய மனத்திலேதான் சௌக்கியமும் இல்லை, சாந்தமும் இல்லை.

தம்முடைய கூடாரத்தில் தன்னந் தனியாகப் பரஞ்சோதி உட்கார்ந்திருந்தார். அவருக்குத் தூக்கம் வரவில்லை. அவருடைய மனக்கண் முன்னால் வாதாபியின் வீடுகள் பற்றி எரியும் காட்சியும், ஸ்திரீகளும், குழந்தைகளும், வயோதிகர்களும் அலறிக் கொண்டு ஓடும் தோற்றமும், பல்லவ வீரர்கள் வாதாபியின் எரிகிற வீடுகளிலும் கடைகளிலும் புகுந்து கொள்ளையடிக்கும் காட்சியும், தலை வேறு கை வேறு கால் வேறாகக் கிடந்த உயிரற்ற வீரர்களின் தோற்றமும், இரத்த வெள்ளம் ஓடும் காட்சியும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன.

இந்தக் கோரமான காட்சிகளோடு, இருளடைந்த பாதாள புத்த விஹாரத்தில் சிவகாமியின் மீது விஷக் கத்தியை எறியப் போன நாகநந்தியின் தோற்றமும், விஷக் கத்தியைக் காட்டிலும் குரூரமான நஞ்சு தோய்ந்த சொல்லம்புகளை அந்தப் பேதைப் பெண் மீது மாமல்லர் பொழிந்த சம்பவமும், கத்தியால் குத்தப்பட்டுத் தரையிலே செத்துக் கிடந்த கண்ணபிரானுடைய களையிழந்த முகமும் இடையிடையே அவர்

உள்ளத்தில் தோன்றின.

இவ்வளவுக்கும் மேலாக நெற்றியில் வெண்ணீறும் தேகமெல்லாம் ருத்ராட்ச மாலையும் அணிந்து, கையிலே உழவாரப் படை தரித்துச் சாந்தமும் கருணையும் பொலிந்த திருமுகத்தோடு விளங்கிய திருநாவுக்கரசர் பெருமான், சேனாதிபதி பரஞ்சோதியை அன்புடன் நோக்கி, "அப்பனே! நீ எங்கே இருக்கிறாய்? என்ன காரியம் செய்கிறாய்? போதும்! வா! உனக்காக எத்தனை நாள் நான் காத்துக் கொண்டிருப்பேன்?" என்று கேட்டுக் கொண்டேயிருந்தார். அதற்குப் பரஞ்சோதி, "குருதேவா! இன்னும் அறுபது நாழிகை நேரந்தான்! பிறகு தங்களிடம் வந்து விடுகிறேன்!" என்று மறுமொழி சொல்லிக் கொண்டிருந்தார்.

சிவகாமி தேவியை விடுதலை செய்து ஆயனரிடம் சேர்ப்பித்து அவர்களை முன்னதாக ஊருக்கு அனுப்பி வைத்தபிறகு, பரஞ்சோதி பொறுக்கி எடுத்த வீரர்கள் அடங்கிய படையுடன் மேற்கு நோக்கிச் சென்றார். வேங்கியிலிருந்து வரும் சளுக்கர் சைனியத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஆதித்த வர்மருடன் சேர்ந்து கொண்டார். வாதாபி தகனம் ஆரம்பமான மூன்று நாளைக்கெல்லாம் வேங்கி சைனியம் வந்து சேர்ந்தது. அந்தச் சைனியம் பெரும்பாலும் யானைப் படையும் குதிரைப் படையும் அடங்கியது. மேற்படி சைனியத்தின் தலைவர்கள் புலிகேசியின் மரணத்தையும் வாதாபிக் கோட்டையின் வீழ்ச்சியையும் அறிந்து கொண்டதும் பின்னோக்கித் திரும்பிச் செல்லப் பார்த்தார்கள். பரஞ்சோதியின் முன் யோசனை அதற்கு இடங் கொடுக்கவில்லை. ஆதித்தவர்மரை நின்ற இடத்திலேயே நிற்கவிட்டுப் பரஞ்சோதி விரைந்து வளைந்து சென்று வேங்கி சைனியத்தைப் பின்னோக்கிச் செல்ல முடியாமல் தடுத்தார். இவ்விதம் இருபுறத்திலும் சூழப்பட்ட வேங்கி சைனியம் வேறு வழியின்றிச் சரணாகதி அடைந்தது. அந்தச் சைனியத்தைச் சேர்ந்த பதினாயிரம் யானைகளும் முப்பதினாயிரம் குதிரைகளும் ஒரு சேதமும் இல்லாமல் பல்லவர்களுக்குக் கிடைத்து விட்டன.

இந்த மாபெரும் காணிக்கையை மாமல்லரிடம் ஒப்புவித்ததும் பரஞ்சோதியார் தம்மைச் சேனாதிபதிப் பதவியிலிருந்து விடுதலை செய்யும்படி கேட்டுக் கொண்டார். இத்தனை காலமும் இராஜ்ய சேவை செய்தாகி விட்டதென்றும், இனிமேல் சிவ பெருமானுக்கு அடிமை பூண்டு சிவனடியார்களுக்குத் தொண்டு செய்து வாழ்க்கை நடத்த விரும்புவதாகவும் தெரிவித்துக் கொண்டார்.

மேற்படி வேண்டுகோள் மாமல்லருக்கு அதிகமான ஆச்சரியத்தை அளிக்கவில்லை. சென்ற சில காலமாகவே பரஞ்சோதியின் மனப்போக்கு மாறி வைராக்கியம் அடைந்து வருவதை மாமல்லர் கவனித்து வந்தார். எனவே அவருடைய வேண்டுகோளை மறுக்காமல் "சேனாதிபதி! தங்கள் இஷ்டப்படியே ஆகட்டும். ஆனால், எரிந்து அழிந்த வாதாபியின் மத்தியில் நமது சிங்கக் கொடியை ஏற்றும் வைபவத்தை மட்டும் நடத்தி விடுங்கள். அப்புறம் விடை தருகிறேன்" என்று சொல்லியிருந்தார்.

மேற்படி கொடியேற்று விழா மறுநாள் சூரியோதயத்தில் நடைபெறுவதாயிருந்தது. இதனாலேதான் பரஞ்சோதி, "இன்னும் ஒரே ஒரு நாள்" என்று ஜபம் செய்து கொண்டிருந்தார்.

மறுதினம் காலையில் உதித்த சூரிய பகவான் சில நாளைக்கு முன்பு வாதாபி நகரம் இருந்த இடத்தில், - நேற்றெல்லாம் சாம்பலும் கரியும் கும்பல் கும்பலாகக் கிடந்த இடத்தில், - கண்ணைக் கவரும் அதிசயமான காட்சி ஒன்றைக் கண்டார்.

பல்லவ - பாண்டிய சேனா வீரர்கள் வாளும் வேலும் ஏந்தி வரிசை வரிசையாக அணிவகுத்து நின்றார்கள். அவர்

களுக்குப் பின்னால் அழகாக அலங்கரிக்கப்பட்ட போர் யானைகளும் புரவிகளும் நிரை நிரையாகக் கண்ணுக்கெட்டிய தூரம் நின்றன. இந்தச் சேனா சமுத்திரத்துக்கு மத்தியில், அலைகடலுக்கு நடுவே தோன்றும் கப்பலின் கூம்பைப் போல் ஒரு புத்தம் புதிய சிற்ப வேலைப் பாடமைந்த ஜயஸ்தம்பம் கம்பீரமாக நின்றது.

லட்சக்கணக்கான வீரர்கள் அவ்விடத்தில் கூடியிருந்த போதிலும், கப்சிப் என்ற நிசப்தம் குடி கொண்டிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் கூட்டத்தின் ஒரு முனையில் கலகலப்பு உண்டாயிற்று. பேரிகைகள் அதிர்ந்தன! எக்காளங்கள் முழங்கின! சக்கரவர்த்தியின் வருகைக்கு அறிகுறியான மேற்படி வாத்திய கோஷத்தைக் கேட்டதும், அந்த லட்சக்கணக்கான வீரர்களின் கண்டங்களிலிருந்து ஏக காலத்தில் "வாதாபி கொண்ட மாமல்ல சக்கரவர்த்தி வாழ்க!" என்ற கோஷம் கிளம்பி மேலே வான மண்டலம் வரை சென்று, நாலா திசையிலும் பரவிப் படர்ந்து எங்கெங்கும் எதிரொலியை உண்டாக்கியது.

சேனாதிபதி பரஞ்சோதி, இலங்கை இளவரசர் மானவன்மர், வேங்கி அரசர் ஆதித்தவர்மன் முதலியவர்கள் பின் தொடர மாமல்ல சக்கரவர்த்தி ஜயஸ்தம்பத்தின் அடியிலே வந்து நின்றவுடனே, மறுபடியும் ஒரு தடவை ஜய கோஷம் கிளம்பி, எட்டுத் திக்குகளையும் கிடுகிடுக்கச் செய்தது.

சப்தம் அடங்கியதும் மாமல்லர் சுற்றிலும் நின்றவர்களைப் பார்த்துச் சில விஷயங்களைக் கூறினார். தாமும் பரஞ்சோதியும் ஒன்பது வருஷத்துக்கு முன்னால் மாறுவேடம் பூண்டு அவர்கள் இப்போது நிற்கும் அந்த இடத்துக்கு வந்திருந்ததையும், அச்சமயம் அங்கு வேறொரு ஜயஸ்தம்பம் நின்றதையும், அதில் புலிகேசி மகேந்திர பல்லவரை முறியடித்தது பற்றிய பொய்யான விவரம் எழுதியிருந்ததையும், அந்த ஜயஸ்தம்பத்தைப் பெயர்ந்தெறிந்து அதன் இடத்தில் பல்லவ ஜயஸ்தம்பத்தை நிலை நாட்டுவதென்று தாமும் சேனாதிபதியும் சபதம் செய்ததையும், அந்தச் சபதம் இன்று நிறைவேறி விட்டதையும் குறிப்பிட்டு, இந்த மாபெரும் வெற்றிக்கெல்லாம் முக்கிய காரண புருஷரான சேனாதிபதிதான் அந்த ஜயஸ்தம்பத்தில் பல்லவ சைனியத்தின் வெற்றிக் கொடியை ஏற்றுவதற்கு உரிமையுடையவர் என்று கூறி முடித்தார்.

சக்கரவர்த்திக்கும் சேனாதிபதிக்கும் ஏதாவது மன வேற்றுமை ஏற்பட்டிருக்கிறதோ என்பது பற்றிப் பல்லவ வீரர்களிடையில் சந்தேகம் ஏற்பட்டிருந்ததைப் பார்த்தோமல்லவா?

எனவே, இப்போது ஜயஸ்தம்பத்தின் அருகில் சக்கரவர்த்தியும் சேனாதிபதியும் சேர்ந்து நிற்பதைப் பார்த்ததுமே அவ் வீரர்களுக்கு மிகுந்த உற்சாகம் ஏற்பட்டது. சேனாதிபதியைப் பற்றிச் சக்கரவர்த்தி கூறியதை அருகிலே நின்று நன்றாய்க் கேட்டவர்களும் தூரத்திலே நின்று அரைகுறையாகக் கேட்டவர்களுங்கூட அளவற்ற மகிழ்ச்சியடைந்து ஆரவாரம் செய்தார்கள்.

சேனாதிபதி புதிய ஜயஸ்தம்பத்தின் மீது பல்லவ சிம்மக் கொடியை உயர்த்தியபோது, சேனா வீரர்களின் குதூகலம் வரம்பு கடந்து பொங்கி ஜய கோஷமாகவும் வாழ்த்துரைகளாகவும் வெளியாயிற்று. பேரிகை முழக்கங்களும், வாத்ய கோஷங்களும், லட்சக்கணக்கான கண்டங்களிலிருந்து கிளம்பிய ஜயத்வனிகளும், அவற்றின் பிரதித்வனிகளுமாகச் சேர்ந்து சிறிது நேரம் காது செவிடுபடச் செய்தன.

சப்தம் அடங்கும் வரையில் பொறுத்திருந்த மாமல்லர் கடைசியாக அன்று அவ் வீரர்களிடம் விடை பெறுவதற்கு முன் வருத்தமான விஷயத்தைத் தாம் தெரிவிக்க வேண்டியிருக்கிறது என்ற பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்து, இத்தனை காலம் தம்முடன் இருந்து இரவு பகல் சேவை புரிந்து, இந்த மகத்தான வெற்றியைப் பெற்றுக் கொடுத்த பரஞ்சோதியார் இப்போது

தம்மிடம் விடுதலை கேட்கிறார் என்றும், அவருடைய உள்ளம் சிவபக்தியில் ஈடுபட்டிருக்கிறதென்றும் சிவனடியாரைச் சேனைத் தலைவராக வைத்திருப்பது பெருங்குற்றமாகுமென்றும், ஆகையால் அவருக்கு விடுதலை கொடுத்து விடத் தாம் சம்மதித்து விட்டதாயும்,





நாளைக் காலையில் அவர் தம்மையும் பல்லவ சைனியத்தையும் பிரிந்து தனி வழியே தீர்த்த யாத்திரை செல்கிறார் என்றும், வீரர்கள் எல்லாரும் உற்சாகமாக அவருக்கு விடை கொடுத்து அனுப்ப வேண்டும் என்றும் தெரிவித்தார். தாம் தெரிவித்த விஷயம் அவ்வளவாக அந்த வீரர் கூட்டத்தில் உற்சாகம் உண்டு பண்ணவில்லையென்பதையும் கண்டார். எல்லையற்ற மௌனம் அந்தப் பெருங் கூட்டத்தில் அப்போது குடிகொண்டிருந்தது. அடுத்த நிமிஷம், ஆஜானுபாகுவாய் நெடிதுயர்ந்த மாமல்ல சக்கரவர்த்தி தம்மை விடக் குட்டையான சேனாதிபதி பரஞ்சோதியை மார்புறத் தழுவிக் கொண்டபோது, மீண்டும் அந்தச் சேனா சமுத்திரத்தில் கோலாகல த்வனிகள் எழுந்தன.

அன்றைக்கெல்லாம் மாமல்லர் பல்லவ - பாண்டிய வீரர்களுக்கும் படைத் தலைவர்களுக்கும் பரிசுகள் வழங்குவதில் ஈடுபட்டிருந்தார். வாதாபி எரியத் தொடங்கிய நாளிலிருந்து பல்லவ சைனியத்துடன் வந்திருந்த நூறு பொற்கொல்லர்கள் ஆயிரம் வீரர்களின் உதவியுடன் தங்கத்தை உருக்கிப் புதிய சிங்க முத்திரை போட்ட பொற்காசுகள் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். வாதாபி அரண்மனைகளிலிருந்தும் சளுக்க சாம்ராஜ்ய பொக்கிஷங்களிலிருந்தும் கைப்பற்றிய ஏராளமான தங்கக் கட்டிகளையும் பொன்னாபரணங்களையும் பெரிய கொப்பரைகளில் போட்டுப் பிரம்மாண்டமான அடுப்புக்களில் தீ மூட்டி உருக்கினார்கள். உருக்கிய பொன்னை நாணயவார்ப்படத்துக்காக அமைக்கப்பட்ட அச்சுக்களிலே ஊற்றிஎடுத்து, லட்ச லட்சமாக கழஞ்சு நாணயங்களைச் செய்து குவித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு பல்லவ - பாண்டிய வீரனுக்கும் அவனவன் தானே சேகரித்துக் கொண்ட செல்வத்தைத் தவிர தலைக்குப் பத்துப் பொற்கழஞ்சுகள் அளிக்கப்பட்டன.

போர் வீரர்களுக்கு மேற்கண்டவாறு பரிசு அளித்த பிறகு படைத் தலைவர்களுக்கும் சிறந்த விசேஷப் பரிசுகள் அளிக்கப்பட்டன. யானைகளும் குதிரைகளும் சுமக்கக்கூடிய அளவு செல்வங்களும் பகிர்ந்து கொடுக்கப்பட்டன.

துங்கபத்திரைக்கும் கிருஷ்ணை நதிக்கும் அப்பால் பல்லவ ஆதிக்கத்துக்குக்குட்பட்ட விஸ்தாரமான பிரதேசங்களை எல்லாம் வேங்கியைத் தலைநகராக்கிக் கொண்டு சர்வாதிகாரத்துடன் ஆளும்படியாக ஆதித்த வர்மர் நியமிக்கப்பட்டார்.

இலங்கை இளவரசன் மானவன்மருக்குத் தக்க வெகுமதியளிப்பது பற்றி மாமல்லர் யோசித்தபோது, "பிரபு! என் தந்தை வீற்றிருந்து அரசாண்ட இலங்கைச் சிம்மாசனந்தான் நான் வேண்டும் பரிசு! வேறு எதுவும் வேண்டாம்!" என்றார் மானவன்மர்.

கடைசியில், மாமல்லர் பரஞ்சோதியைப் பார்த்துச் சொன்னார். "நண்பரே! இந்த மகத்தான வெற்றி முழுவதும் தங்களுடையது! எனவே, இந்த வெற்றியின் மூலம் கிடைத்த அளவில்லாத செல்வங்களும் உங்களுடையவைதான். முப்பதினாயிரம் யானைகள், அறுபதினாயிரம் குதிரைகள், காஞ்சி அரண்மனைகள் எல்லாம் கொள்ளாத அளவு நவரத்தினங்கள். அளவிட முடியாத தங்கம், வெள்ளி ஆபரணங்கள் இவையெல்லாம் நமக்கு இந்தப் போரிலே லாபமாகக் கிடைத்திருக்கின்றன. இவற்றில் ஒரு பகுதியையாவது தாங்கள் கட்டாயம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஐயாயிரம் யானைகளும், பதினாயிரம் குதிரைகளும், அவை சுமக்கக்கூடிய செல்வங்களும் தங்களுக்கு அளிப்பதென்று எண்ணியிருக்கிறேன்..."

மாமல்லரை மேலே பேச விடாதபடி தடுத்துப் பரஞ்சோதி கூறினார்: "பல்லவேந்திரா! மன்னிக்க வேண்டும். தங்களிடம் நான் கோருவது முக்கியமாகத் தங்களுடைய தங்கமான இருதயத்தில் என்றைக்கும் ஒரு சிறு இடந்தான்.



• சிறுத்தொண்டர் கணபதியை வணங்கும் காட்சி (புடைப்புச் சிற்பம்)

அதற்கு மேலே நான் கோருகிற பரிசு ஒன்றே ஒன்று இருக்கிறது. அதுவும் வாதாபிக் கோட்டையிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருளேதான்!''


''ஆகா! அது என்ன அதிசயப் பொருள்?'' என்று மாமல்லர் வியப்புடன் கேட்டார்.

"அந்தப் பொருள் இதோ வரும் மூடு பல்லக்கில் இருக்கிறது!'' என்று பரஞ்சோதி கூறியதும், நாலு வீரர்கள் ஒரு மூடு பல்லக்கைக் கொண்டு வந்து இறக்கினார்கள். பல்லக்கைத் திறந்ததும், அதற்குள்ளே நாம் ஏற்கெனவே பார்த்த விநாயகர் விக்கிரகம் இருந்தது.

வாதாபிக் கோட்டை வாசலில் இருந்த அந்த விக்கிரகத்துக்குத் தாம் பிரார்த்தனை செய்து கொண்டதைப் பற்றிப் பரஞ்சோதி கூறி, அதைத் தம்முடன் கொண்டு போய்த் தாம் பிறந்து வளர்ந்த செங்காட்டாங்குடிக் கிராமத்தில் பிரதிஷ்டை செய்ய விரும்புவதாகவும் தெரிவித்தார். மேற்படி விக்கிரகத்தைத் தவிர வாதாபி நகரத்திலிருந்து கவரப்பட்ட வேறெந்தப் பொருளும் தமக்கு வேண்டியதில்லையென்று பரஞ்சோதி கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

வேறு வழியின்றி மாமல்லர் பரஞ்சோதியின் விருப்பத்துக்கு இணங்க வேண்டியதாயிற்று. பரஞ்சோதி ஸ்தல யாத்திரை செல்லும்போது இரண்டு யானை, பன்னிரண்டு குதிரை, நூறு காலாள் வீரர்கள் ஆகிய பரிவாரங்களை மட்டும் உடன் அழைத்துச் செல்ல வேண்டுமென்று மாமல்லர் பிடிவாதம் பிடித்துத் தமது நண்பரை இணங்கும்படிசெய்தார்.

மறுநாள் மத்தியானம் மாமல்லரும் பல்லவ சைனியமும் அவர்கள் வந்த வழியே காஞ்சிக்குத் திரும்பிச் செல்லப் புறப்படுவதாகத் திட்டமாகியிருந்தது. பரஞ்







சோழியார் துங்கபத்திரைக் கரையோடு சென்று ஸ்ரீசைலம் முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து விட்டு வருவதற்காக அன்று காலையிலேயே தமது சிறு பரிவாரத்துடன் புறப்பட்டார்.

புறப்படுவதற்கு முன்னால் மாமல்

அருள்வாக்கு



“எல்லோரும் அவரவருக்கு உரிய கர்ம அநுஷ்டானங்களைச் செய்ய வேண்டும்; ஆசாரங்களை அநுசரிக்க வேண்டும்; விபூதி, திருமண், ருத்ராட்சம் போன்ற சின்னங்களைத் தரிக்க வேண்டும்” என்றெல்லாம் நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். சிலர் இதெல்லாம் எதற்கு என்று நினைக்கிறார்கள். ‘‘நல்ல சீலங்களுடன் இருக்க வேண்டியதே முக்கியம். சீலம் மனசைப் பொறுத்த விஷயம். சமய ஆசாரங்களெல்லாம் வெளி விஷயம்தானே?’’ என்று எண்ணுகிறார்கள்.

மிலிடரிக்காரன் யூனிஃபார்ம் போடாவிட்டால் அவனுக்கு வீரம் வராதா என்று கேட்பவர்கள் கேட்கலாம். ஆனால் மிலிடெரிக்காரன் என்றால் லோகம் முழுக்க அவனுக்கென்று யூனிஃபாரம் இருக்கத்தான் இருக்கிறது. அதுவே வீரத்தைத் தூண்டுகிறது என்றும் சொல்கிறார்கள்.

வெளியில் தரிக்கும் சின்னம், வெளியில் செய்கிற சம்ஸ்காரம் இவை உள்ளுக்கும் நன்மை தருவனவே ஆகும். வெறும் வேஷம் என்று நினைத்தால் வேஷமாகவே போகும்.’ ஆத்மார்த்தமாக, ஜீவனைப் பரிசுத்தம் செய்து கொள்வதற்காக இந்த சம்ஸ்காரத்தைச் செய்கிறேன்; சின்னத்தை அணிகிறேன்’ என்று உணர்ந்து செய்தால், சத்தியமாகவே அது உள்ளே புகுந்து சுத்தி செய்கிறது. புறத்தில் செய்வது உள்ளுக்கு உதவுகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

லரிடம் கடைசியாக விடைபெற்றுக் கொள்ளுவதற்காகச் சக்கரவர்த்தியின் கூடாரத்துக்குப் பரஞ்சோதி வந்தபோது பல்லவ - பாண்டிய வீரர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டையெல்லாம் மறந்து அங்கே கூட்டம் கூடி விட்டார்கள். பரஞ்சோதியின் புதிய தோற்றம் அவர்களைச் சிறிது நேரம் திகைப்படையச் செய்தது. கத்தி, கேடயம், வாள், வேல், தலைப்பாகை, கவசம், அங்கி இவற்றையெல்லாம் களைத்தெறிந்து விட்டுப் பரஞ்சோதி நெற்றியில் வெண்ணீறு தரித்து, தலையிலும், கழுத்திலும் ருத்ராட்சம் அணிந்து, பழுத்த சிவபக்தரின் தோற்றத்தில் விளங்கினார். அவருடைய திருமுகம் நேற்று வரை இல்லாத பொலிவுடன் சுடர் விட்டுப் பிரகாசித்தது. சற்று நேரம் திகைத்து நின்ற வீரர்களைப் பார்த்துப் பரஞ்சோதி கும்பிட்டதும், “சேனாதிபதி பரஞ்சோதி வாழ்க! வாதாபி கொண்ட மகா வீரர் வாழ்க!” என்று கூவினார்கள். பரஞ்சோதி அவர்களைக் கை கூப்பி வணங்கி அமைதி உண்டு பண்ணினார். பிறகு, “நண்பர்களே! இன்று முதல் நான் சேனாதிபதி இல்லை; தளபதியும் இல்லை. சிவனடியார்களுக்குத் திருத் தொண்டு செய்யும் தொண்டர் கூட்டத்தில் அடியேன் ஒரு சிறு தொண்டன்!’’ என்று கூறினார்.

அளவில்லாத வியப்புடனும் பக்தியுடனும் இதைக் கேட்டுக் கொண்டு நின்ற பல்லவ வீரர்களில் ஒருவன் அப்போது ஓர் அமர கோஷத்தைக் கிளப்பினான்.

‘‘சிவனடியார் சிறுத்தொண்டர் வாழ்க!’’ என்று அவன் கம்பீரமாக கோஷித்ததை நூறு நூறு குரல்கள் திருப்பிக் கூவின.

‘‘சிறுத் தொண்டர் வாழ்க! சிவனடியார் சிறுத்தொண்டர் வாழ்க!’’ என்று கோஷம் நாலாபுறத்திலும் பரவி ஆயிரமாயிரம் குரல்களில் ஒலித்து எதிரொலித்தது. பரஞ்சோதியார் தமது சிறிய பரிவாரத்துடனும் வாதாபி விநாயகருடனும் நெடுந்தூரம் சென்று கண்ணுக்கு மறையும் வரையில், ‘‘சிறுத்தொண்டர் வாழ்க!’’ என்ற சிரஞ்சீவி கோஷம் அந்தச் சேனா சமுத்திரத்தில் திரும்பத் திரும்ப எழுந்து கொண்டேயிருந்தது.

(தொடரும்)

ப.சிதம்பரம்



திறந்த கதவுகள்!

இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகக் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்த அனுபவம், இந்தியர்கள் மனங்களில் ஓர் ஆழமான காயத்தை ஏற்படுத்திவிட்டது. அந்நியர்கள், அந்நியர்களின் பொருளாதார ஆதிக்கம் ஆகியவை பற்றிய அச்ச உணர்வு இந்தியர்களிடம் மிகுந்திருந்தது.

மகாத்மா காந்தியடிகள் 'கிராம சுயராஜ்யம்' என்ற ஒரு கருத்தை வலியுறுத்தி வந்தார். காந்தியடிகளைத் தெய்வமாகப் போற்றிய நாட்டு மக்கள், அவருடைய கருத்துக்களை வரவேற்றார்கள். ஒவ்வொரு கிராமமும் 'தன்னிறைவு' பெற்ற 'சுயராஜ்யமாக' விளங்க முடியும் என்ற நம்பிக்கைக்கு அவர் வித்திட்டார்.

'தன்னிறைவு' என்றால் என்ன என்பதை யாரும் விளக்க முற்படவில்லை. ஒவ்வொரு கிராமமும் தனக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். தனக்குத் தேவையான உடைகளை நெய்து கொள்ள வேண்டும் என்று சொல்லும் வரை, 'தன்னிறைவு' என்பதற்கு அர்த்தம் இருந்தது. பல கிராமங்களில் இத்தத் தேவைகளைக் கூடத் தன்னிறைவு வாயிலாகப் பூர்த்தி செய்ய முடியாது. இமயமலை போன்ற மலைப்பகுதிகளில் உள்ள கிராமங்கள், எப்படித் தங்களுக்குத் தேவையான உணவை - அரிசி, கோதுமை, பருப்பு, எண்ணெய், சர்க்கரை, பால், பழம், காய்கறி, மாமிசம் - உற்பத்தி செய்ய முடியும்? அதேபோல் அடர்ந்த காடுகளிலோ, பாலைவனப் பகுதிகளிலோ இருக்கும் கிராம மக்கள், எப்படித் தங்களுக்குத் தேவையான உடைகளை நெய்து கொள்ள முடியும்?

உணவு, உடை ஆகியவற்றுடன் மனிதனின் தேவைகள் முடிந்துவிடுவதில்லை. மிகவும் அடிப்படையான அவசியமான தேவைகள் என்று எடுத்துக் கொண்டால்கூட, மனித சமுதாயத்திற்குப் பல தேவைகள் இருக்கின்றன. காலுக்குச் செருப்பு தேவை. பள்ளிகளில் பாடப் புத்தகங்கள் தேவை. வாகனங்கள் தேவை. மருந்துகள் தேவை. விளையாட்டுக் கருவிகள் தேவை. இந்தத் தேவைகள் எல்லாவற்றையும் ஒவ்வொரு கிராமமும் பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்பது சுகமான கற்பனையே. கிராமத் தன்னிறைவு என்பது பொருளாதாரக் கண்ணோட்டத்தில் நடைமுறைச் சாத்தியமற்றது.

சரி, ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்றிருக்க வேண்டாம். இந்தியா ஒரு தன்னிறைவு பெற்ற நாடாக உருவாக முடியாதா, என்ற கேள்வி எழுகிறது. இந்திய மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும், சேவைகளையும் இந்தியாவிலேயே உருவாக்க முடியாதா? இது நல்ல கேள்வி.

ஒரு காலத்தில் இந்தியர்கள் மாட்டு வண்டி, குதிரை வண்டிகளில் பயணித்தார்கள். பிறகு சைக்கிள் வந்தது. "மாட்டு வண்டி யுகத்திலிருந்து சைக்கிள் யுகத்திற்கு இந்தியா முன்னேறி வந்திருக்கிறது" என்று பண்டித ஜவஹர்லால் நேரு பெருமைப்பட்டுக் கொண்டார். அதற்குப் பிறகு பஸ், கார், டீசலில் ஓடும் ரயில், விமானம் என்று போக்குவரத்துச் சாதனங்கள் மிகுந்துவிட்டன. இந்தப் போக்குவரத்துச் சாதனங்கள் இல்லாத இந்தியாவைக் கற்பனை செய்து பார்க்க முடியாது. இந்த வாகனங்கள் எதில் இயங்குகின்றன? இவை இயங்குவதற்கு கச்சா எண்ணெய் தேவை. கச்சா எண்ணெயிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பெட்ரோல், டீசல், விமான டர்பைன் எண்ணெய் ஆகியவை தேவைப்படுகின்றன. இந்தக் கச்சா எண்ணெய் எங்கே கிடைக்கிறது? இந்தியாவிற்கு ஆண்டு தோறும் தேவையான கச்சா எண்ணெயில் முப்பது சதவிகிதம்தான் இந்திய மண்ணிலும், இந்தியக் கடல்களிலும் கிடைக்கிறது. எஞ்சிய



எழுபது சதவிகிதம் கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இந்தியா இருக்கிறது. "எங்களுக்குத் தன்னிறைவே முக்கியம்" என்ற நிலையை எடுப்போமென்றால், கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்ய முடியாது. மீண்டும் சைக்கிள் யுகத்திற்கோ, மாட்டு வண்டி யுகத்திற்கோதான் போக வேண்டும். அதற்கு இந்திய மக்கள் தயாரா?

நம் வீடுகளில் சமையல் எப்படிச் செய்கிறோம்? இன்று எல்லோருக்கும் சமையல் காஸ் தேவைப்படுகிறது. விறகு அடுப்பு, கரி அடுப்பு, மண்ணெண்ணெய் அடுப்பு என்பனவெல்லாம் மலையேறிவிட்டன. விறகு அடுப்பு என்பதை இனி நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. பல்லாண்டுக் காலம் விறகு அடுப்புகளில் சமைத்த காரணத்தால்தான் பல லட்சம் ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டன. சுற்றுச்சூழல் சிதைந்தது. மழை குறைந்தது. நிலச்சரிவுகளும் வெள்ளங்களும் ஏற்பட்டன. இந்தச் சமையல் காஸ் எங்கிருந்து கிடைக்கிறது? அண்மைக் காலம் வரை இந்தியாவில் சமையல் காஸ் உற்பத்தி செய்யப்படவில்லை. இப்பொழுதுகூட மிகச் சிறிய அளவிலேயே சமையல் காஸ் உற்பத்தி செய்யப்படுகிறது. நமக்குத் தேவையான சமையல் காஸ், ஏறத்தாழ முற்றிலும் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த இறக்குமதி வேண்டாமென்றால், மீண்டும் விறகு அடுப்புதான்.

இந்தியாவின் தேவைகள் பல. இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. கருப் பொருள்கள் தேவைப்படுகின்றன. தொழில்நுட்பம் தேவைப்படுகிறது. மருந்துகள் தேவைப்படுகின்றன. நம்முடைய இராணுவத்திற்கு ஆயுதங்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் தேவைப்படுகின்றன. நம் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், உயர்கல்வி படிப்பதற்கு அந்நிய நாடுகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. பல நாடுகளில் இந்தியாவின் தூதரகங்களை அமைக்க வேண்டியுள்ளது. இவற்றை வாங்குவதற்கோ, பெறுவதற்கோ இந்திய ரூபாயைக் கொடுத்தால் யாரும் வாங்கிக் கொள்ள மாட்டார்கள். அந்நியச் செலாவணியில்தான் விலையைத் தர வேண்டும் என்று கேட்பார்கள். இந்த அந்நியச் செலாவணி எப்படிக் கிடைக்கும்?

அந்நியச் செலாவணி வேண்டுமென்றால் ஏற்றுமதி செய்ய வேண்டும்.

இந்தியாவில் இல்லாத பொருள்களையும், சேவைகளையும் பெறுவதற்கு இறக்குமதி செய்ய வேண்டும்.

ஏற்றுமதி, இறக்குமதி என்பதை எந்த நாடும் தவிர்க்க முடியாது. எந்த நாடும் எல்லா விஷயங்களிலும் தன்னிறைவு பெற்றுவிட முடியாது. எனவேதான் ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் ஜீவநாடியே, ஏற்றுமதி - இறக்குமதிதான் என்று பொருளாதார அறிஞர்கள் கூறுகிறார்கள். ஏற்றுமதி - இறக்குமதி என்பது திறந்த பொருளாதாரத்திற்கு அடையாளம்.





• நேரு

இருபதாம் நூற்றாண்டின் இறுதி இருபத்தைந்து ஆண்டுகளில் வறுமையை ஒழித்து வளமான பாதையில் நடைபோட்டு, வளர்ந்த நாடுகளாக உயர்ந்திருக்கும் நாடுகள் அனைத்தும், திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்ட நாடுகளே.

இதற்கு மாறாக, இந்தியப் பொருளாதாரம் சுமார் நாற்பது ஆண்டுகள் தன்னுடைய கதவுகளை இறுக மூடி வைத்திருந்தது. குறிப்பாக, ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு ஏராளமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. சிவப்பு நாடா என்ற பெயரில் ஐந்நூறு பக்கங்களுக்கும் அதிகமாக, பல ஆயிரம் விதிகளை இயற்றிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

ஒரு சுவையான நிகழ்ச்சியை நினைவுகூர விரும்புகிறேன்.

1991-ஆம் ஆண்டில் நான் மத்திய வர்த்தக



அமைச்சராகப் பொறுப்பேற்றேன். ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாடுகளை அமல் செய்வதற்காக, 'இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடு தலைமை அதிகாரி' என்றொரு உயர் பதவி இருந்தது. அந்தப் பொறுப்பில் டி.ஆர். மேத்தா என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி இருந்தார். அவர் எனக்கு ஏற்கெனவே அறிமுகமானவர்.

நான் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் மரியாதை நிமித்தமாக மேத்தா என்னைச் சந்திக்க என்னுடைய அறைக்கு வந்தார். அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, "மேத்தா அவர்களே, நீங்கள் இறக்குமதிக் கட்டுப்பாடு அதிகாரியாக இருப்பது எனக்குப் புரிகிறது. இந்தியாவின் அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துவதற்காக நீங்கள் இறக்குமதியைக் கட்டுப்படுத்துகிறீர்கள். ஆனால், எதற்காக நீங்கள் ஏற்றுமதிக் கட்டுப்பாடு அதிகாரியாகவும் இருக்கிறீர்கள்? ஏற்றுமதி நமக்கு நல்லதுதானே? நமக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தருமே?" என்று அவரிடம் கேட்டேன். இந்தக் கேள்வியை அவர் எதிர்பார்க்கவில்லை. இதைக் கேட்டு அவர் உறைந்து போனார். 'ஏற்றுமதிக் கட்டுப்பாடு' எதற்காக, என்பதை ஆராயாமலேயே பல ஆண்டுகள் அந்தப் பதவி மத்திய அரசில் இருந்து வந்தது.

1991-92ஆம் ஆண்டில் புதிய பொருளாதாரக் கொள்கையை மத்திய அரசு அறிமுகப் படுத்தியது. வர்த்தகத் துறையில் அரசு கொண்டு வந்த புரட்சிகரமான மாற்றங்களில், ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் இருந்த கட்டுப்பாடுகளைப் பெருமளவு விலக்கிக் கொண்டது முக்கியமான மாற்றம். குறிப்பாக, ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் அனைத்தும், ஏறத்தாழ முதலாண்டிலேயே நீக்கப்பட்டன.

1991-ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுபாடுகள் இருந்தபோதுதான், இந்தியாவில் அந்நியச் செலாவணி வெறும் நூறு கோடி டாலர்கள் என்ற அளவிற்குக் குறைந்தது. நூறு கோடி டாலர் அல்லது இரண்டாயிரத்து நூறு கோடி ரூபாய்தான். ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்ட பிறகு - பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து - இன்று இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு, பத்தாயிரம் கோடி டாலர்! பன்னிரண்டு ஆண்டுகளில் நூறு மடங்கு வளர்ச்சி.

திறந்த பொருளாதாரக் கொள்கையினால் நமக்குக் கிடைத்த பயன்களில் ஒரு முக்கிய பயன், கோபுரமாகக் குவிந்திருக்கும் அந்நியச் செலாவணி இருப்பு.

வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் திருடர்களைப் போல, கிரிமினல் குற்றவாளிகளைப் போல, வெளிநாடுகளுக்குச் சென்ற காலம் ஒன்று இருந்தது. வெளிநாடுகளில் வாழும் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் கடன் வாங்கி, அல்லது கறுப்புச் சந்தையில் டாலர் வாங்கி வெளிநாடுகளுக்குச் சென்றார்கள். இரண்டுமே அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கடுமையான குற்றங்கள். அந்தக் காலத்தில் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களில் பெரும்பாலானோர் குற்றவாளிகளே!

நல்ல வேளையாக, அந்த இருண்ட காலம் முடிவடைந்துவிட்டது. நம்முடைய அந்நியச் செலாவணி இருப்பைப் பற்றிப் பெருமிதம் கொள்ளும் நேரத்தில், இவற்றையும் சிந்தித்துப் பாருங்கள்.

ஜப்பானில் இருப்பு அறுபத்தாறாயிரம் கோடி டாலர்!


சீனாவில் நாற்பத்தைந்தாயிரம் கோடி டாலர்.

ஹாங்காங், தாய்வான் ஆகிய நாடுகளில் அந்நியச் செலாவணி இருப்பும், நம்மிடம் இருப்பதைவிட அதிகம்.

உலகின் முக்கிய நாடுகளில், திறந்த பொருளாதார அணுகுமுறையையே கையாளுகிறார்கள். இந்தியாவும் இந்த முறையையே தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

தன்னிறைவு என்ற பெயரில் மீண்டும் திறந்த கதவுகளை மூடிவிடக் கூடாது.

(தொடரும்)



- எஸ். மோகன்



ஆஹா! ரூ.10,000 பரிசு!

குவிஸ் போட்டி - (4) முடிவுகள் :

வாராவாரம் ரூ.10,000 போட்டி தொடங்கிய பிறகு, போட்டிக்குப் போட்டி கூப்பன்கள் வந்து குவிவது கூடிக் கொண்டே இருக்கிறது. உங்கள் ஆர்வத்துக்குப் பாராட்டு! ஆதரவுக்கு நன்றி!

இந்த நான்காவது போட்டிக் குலுக்கலில் பரிசை வென்றவர் :

> **எஸ். துளசி,**
> **14/23, மதுரை வீரன் கோயில் தெரு,**
> **தி. நகர், சென்னை - 600 017.**

ஆறுதல் பரிசு ரூ.100/- பெறுபவர்கள்:

1. எஸ். பாலசுப்பிரமணியன், சென்னை- 44
2. என். சுவாமிநாதன், மதுரை - 17
3. ஆர். கமலக்கண்ணன், சித்தோடு
4. வி. திலகம், திருநெல்வேலி - 7
5. என். நந்தினி மாசிலாமணி, மதுரை - 10
6. எஸ்.கே. ராமன், சென்னை - 4
7. எஸ். சிவா, சென்னை - 62
8. டி.வி.கே. மூர்த்தி, திருச்சி - 3
9. எஸ். கணேசன், சென்னை - 96
10. முரு. பிச்சை சேர்வை, புதுக்கோட்டை
11. கே.ஆர். சாவித்திரி, மடப்புரம்
12. கே. ராதாகிருஷ்ணன், கோவை - 41
13. பி. ஆனந்த், காரம்பாக்கம்
14. எல். விஜயகோபாலன், அரிமழம்
15. என். ஷண்முகம், போளூர்
16. பி. கவிதா, பாண்டிச்சேரி - 7
17. நளினி ராமச்சந்திரன், கோவை - 42
18. என். ஜெகதா, ஆலங்காயம்
19. ஏ. துரைசாமி, கோவை - 45
20. டிக்ஷனரிப்ரியன், திருச்சி - 2

குவிஸ் போட்டி (4)க்கான விடைகள் :

1. திருக்குறளில் குறிப்பறிதல் என்ற ஒரு தலைப்பில் இரண்டு அதிகாரங்கள் உள்ளன.
2. கிரிக்கெட்டை தேசிய விளையாட்டாகக் கொண்ட நாடு இங்கிலாந்து.
3. 'மத்திய தரைக்கடலின் சாவி' என்று அழைக்கப்படும் ஜலசந்தி ஜிப்ரால்டர்.
4. 'ஜேம்ஸ் பாண்ட் 007' வரிசையில் வந்த முதல் ஆங்கிலத் திரைப்படம் டாக்டர் நோ.
5. இரத்தம் உறைவதற்கு உதவும் வைட்டமின் கே.
6. சென்னைக்கு அருகில் உள்ள ராக்கெட் தளம் ஸ்ரீ ஹரிக்கோட்டா.

வாழ்த்துகள்!

அடுத்தடுத்து மூன்று மெகா வெற்றிகளைக் கொடுத்த நடிகர் தனுஷிடம் பந்தா எதுவுமில்லை. ஆனால் பயமிருக்கிறது.



"என்கிட்டே மக்கள் வேற எதையோ எதிர்பார்க்கிறாங்கன்னு தோணுது. நிறைய பொறுப்பு வந்துட்ட மாதிரி மனசு பாரமா இருக்கு. இவங்க



வளர்ச்சியால் வீழ்ச்சியா?

காட்டுற அன்பைக் கடைசி வரை காப்பாத்திக்கணுமேன்னு மனகல பயம் வருது. 'சீச்சீ.. எதுக்குப் பயப்படுறே? இங்கே எல்லாமே மாயை. நீயும் ஒரு மாயை. அலட்டிக்காதே'ன்னு மனசாட்சி மண்டையிலே அடிக்குது. மொத்தத்துல கொஞ்சம் குழப்பம், கொஞ்சம் தெளிவு நிறைய சந்தோஷமும் இருக்கு" என்று படபடப்பாகப் பேசிக் கொண்டிருக்கும் போதே, 'ஷாட் ரெடி சார்; டைரக்டர் கூப்பிடுகிறார்' என்றதும், எக்ஸ்யூஸ் கேட்டபடி செட்டை நோக்கி ஓடுகிறார்.

சும்மாயில்லை! பாலு மகேந்திரா இயக்கமாயிற்றே! காட்சியை இயக்குனர் விளக்க, பவ்யமாய் கையைக் கட்டி, தலையை ஆட்டி ஆட்டி, கேட்டுக் கொள்கிறார். 'அது ஒரு கனாக்காலம்' படப்பிடிப்பு. மீண்டும் இடைவேளை விடும் போது கூட்டத்தில் நம்மைச் சரியாக அடையாளம் கண்டு, "கன்டினியூ பண்ணலாமா?" என்று பாந்தமாய் ஒட்டிக் கொள்கிறார்.

அடுத்து என்ன கேட்கலாம் என்று நாம் யோசிப்பதற்குள், "காதல் கொண்டேன்" பட வெள்ளி விழாவில், நான் தேசிய விருது பெறும் கலைஞனாக வருவேன்னு பாலு






மகேந்திரா சார் பாராட்டினார். அவர் எவ்வளவு பெரிய மேதை. அவரோட நம்பிக்கையை நான் காப்பாத்தணும். அதுக்கு முதல்ல என் மேலே விழுந்திருக்கிற கவர்ச்சி முத்திரையைத் தொடைச்சு எறியணும். அதுக்கான முதல் மூவ்மெண்டா இந்தப் படம் இருக்கும். இது சாரோட படம். இதுலே தனுஷ் தனிச்சுத் தெரிய மாட்டான்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, எப்படியோ ஸ்டுடியோவுக்குள் ஊடுருவி விட்ட ஒரு தீவிர ரசிகன், 'வினோத்... ஒரு ஆட்டோகிராப் போடுங்க'' என்று நெருங்கி வந்து விட, 'என்னை வினோத்தாகப் பார்த்திருக்கும் உங்களுக்குத் தன்னம்பிக்கையுடன் தனுஷ்' என்று அவருக்குக் கையெழுத்திட்டுக் கொடுத்து விட்டு, நம் பக்கம் திரும்புகிறார்.

''பாருங்க! காதல் கொண்டேனுக்கு அப்புறம் 'திருடா திருடி' ஹிட் படமாயிருக்கு. அப்படியும் அந்தப் படத்தையும் வினோத் கேரக்டரையும் யாரும் மறக்கவேயில்லை. சமீபத்துலே ஸ்பென்சர் பிளாசாவுக்குப் போயிருந்தேன். அங்கே ஸ்கூல் யூனிஃபார்ம் போட்டிருந்த ஒரு ஸ்டூடண்டைப் பார்த்தேன். 'ஸ்கூல்லே என்னை எல்லோரும் நாய் மாதிரி நடத்துறானுங்க. 'காதல் கொண்டேன்' பார்த்த பிறகு நிறைய தைரியம் வந்துடுச்சி வினோத்'துன்னு சொன்னான். ரொம்ப சந்தோஷமா இருந்தது. இன்னைக்கு ஏழை, நடுத்தர வீட்டுப் பசங்க நூறு பேர் இருந்தா, தொண்ணூற்று அஞ்சு பேர் வினோத் மாதிரிதான் இருக்காங்க. அவங்க, அவங்களையே ஸ்கிரீனில் பார்க்கிற மாதிரி நினைக்கிறாங்க. இதுதான் என்னோட வெற்றிக்கு முக்கியக் காரணம். எனக்கு இதுமாதிரி கேரக்டர் ரொம்பப் பொருத்தமா இருக்கும்னு முடிவு பண்ணி நடிக்க வெச்சதுக்கு, என்னோட அண்ணன் முதல் காரணம். அவருக்கு நிறைய நன்றி சொல்லணும்'' என்று கொஞ்சம் நெகிழ்ந்த தனுஷிடம், ''உங்களோட இந்த வளர்ச்சி, தனிப்பட்ட வாழ்க்கையின் வீழ்ச்சின்னு சொன்னால் ஏற்றுக் கொள்வீர்களா?'' என்று வேறு டாபிக் பக்கம் (இதுதானே முக்கிய டாபிக்காக இருக்க முடியும்!) திசைதிருப்பி அழைத்து வந்தோம்.

''அதை வீழ்ச்சின்னு சொல்றதை விட இழப்புன்னு சொல்லலாம். என் படிப்பைக் கெடுக்காதீங்கன்னு சொன்னப்போ, வீட்லே யாரும் கேட்கலை. சினிமாவுக்கு வெளியே தனுஷ் யாருங்கறதே மறந்து போச்சு. இதை வருத்தத்தோடு சொல்றேன். பிளஸ் டூ வரைக்கும் நான் பெரிய ரவுடி. தம்மு, தண்ணி தவிர மிச்சமிருக்கிற எல்லா லூட்டியும் அடிச்சிருக்கேன். கல்லூரிகளைக் கடந்து போறப்போ,







பெரிசா எதையோ இழந்துட்ட மாதிரி ஃபீல் பண்றேன். ஒன்றை இழந்தால்தானே இன்னொன்று கிடைக்கும்? அப்படிப் பார்த்தா நான் சந்தோஷமாத்தான் இருக்கேன்'' என்ற தனுஷின் கண்களில் ஏக்கம் இழையோடியது.

''அடுத்து வெளிவரப் போகிற 'புதுக் கோட்டையிலிருந்து சரவணன்' படத்தில் தனுஷ் எப்படி? அந்தப் படத்தில் இடம் பெறும் காட்சிகளிலிருந்து, பத்திரிகைகளில் வெளியிடப்படும் புகைப்படங்களில் ஆபாசமும், எல்லை மீறலும் அதிகமிருப்பதைப் பார்த்தால் தனுஷை மீண்டும் தவறான பாதையில் அழைத்துச் செல்கிறார்கள் என்று தானே தோன்றுகிறது?'' என்றதும் அவசரமாக மறுத்தார்.

''நிச்சயமாக ஆபாசக் காட்சிகள் இருக்காது. அப்படி ஒன்றிரண்டு காட்சிகள் இருந்தால் தயவுசெய்து மன்னித்துக் கொள்ளுங்கள். இனி யாரும் என்னை எக்ஸ்பினாய்ட் பண்ண முடியாது'' என்கிற தனுஷ், சமீபத்தில் மிகவும் சந்தோஷப்பட்ட விஷயம், கமல் கையால் ஷீல்டு வாங்கியது.

''கமலை நேரில் பார்க்க முடியுமான்னு ஏங்கியிருக்கேன். 'காதல் கொண்டேன்' வெள்ளி விழா ஷீல்டை அவர் கையால் வாங்கியது, ஆஸ்கர் விருது வாங்கின மாதிரி இருக்கிறது'' என்று சிலிர்த்துக் கொள்கிறார்.

விடைபெறும் முன் தனுஷை காதல் விவகாரத்தில் சிக்க வைத்து விடுவது என்ற முடிவோடு, ''வெள்ளி விழா நிகழ்ச்சியில் உங்களை வாழ்த்திப் பேசிய பார்த்திபன், உங்களுக்கு அமெரிக்காவில் ஒரு காதலி இருக்கும் ரகசியத்தை உடைத்தாரே! இது என்ன புது விவகாரம்?'' என்றால்,

''நான் என்ன செய்ய? இந்த முகத்தைப் பார்த்து, ஒல்லியான என்னோட உடம்பைப் பார்த்து, எந்தப் பெண்ணாவது என்னைக் காதலிப்பாளா? அப்படி பெருந்தன்மையோட முன்வந்து யாராவது சொன்னால், நிச்சயமா காதலிப்பேன். அதுக்கு முன்னாடி என்னோட குடும்பத்தைக் காப்பாத்தணும்'' என்றவர், ''காதல் நிறையப் பேருக்குப் பொழுதுபோக்கு; ஒருசிலருக்கு மென்டல் சப்போர்ட். இது ரொம்ப அபூர்வம். அது மாதிரி காதல் கிடைச்சா பார்க்கலாம் பாஸ்'' என்றபடி அடுத்த ஷாட்டுக்கு வந்த அழைப்பை ஏற்று ஓடினார் தனுஷ்.

- ஜெய்

அட்டை, படங்கள் : 'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' படத்திலிருந்து.

'மாணிக்கம் வைரம் முதல்
நவரத்னாபரணமும்
மணமார் பற்பல மலர் மாலைகளும்
முகமும்
மதியொடு தாரா கணம் நிறையும் அந்தி
வானமோ கமல வனமோ என மனம்
மயங்க...

கபாலியின் பவனி
காணக் கண் கோடி வேண்டும்.'

பாபநாசம் சிவனின் இந்த அருமையான பாடலைக் கேட்டு மனம் மயங்காதவர் யார்?

திருமங்கையாழ்வாரால் 'தேனமர் சோலை மாட மாமயிலை' என்று பாடப் பட்ட தலம். "வேலை*யுலாவும் உயர் மயிலை" என்று சம்பந்தர் பாடிய தலம். வாயிலார் நாயனார் (பேசியதே இல்லையாம்) வாழ்ந்து மனத்தினால் கோயில் கட்டி, சிவனருள் பெற்ற தலம். 'சோதித் தொன்மயிலை வாயிலார்க்கும் அடியேன்" என்று சுந்தரர் சிறப்பித்துப் பாடிய தலம்.

மயிலை ஒரு காலத்தில் துறைமுகமாக இருந்ததாகச் சொல்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள். ரோமாபுரியிலிருந்து யாத்திரையாக வந்த தாலமி மயிலாப்பூரைப் பற்றி எழுதியிருக்கிறாராம்.

திருவள்ளுவர் திருமயிலையில்தான் வாழ்ந்தார். மஸ்தான் சாயபு என்ற பெரியார் வாழ்ந்த ஊர். பட்டு ஜவுளி வியாபாரம் செழித்த இடம். செயின்ட் தாமஸ் (ஏசுநாதரின் நேர் சீடர்) அவர் அடக்கமான இடம் மயிலாப்பூர்.

உமா தேவியாருக்கு மயில் என்றால் கொள்ளை ஆசை போலிருக்கிறது. திருக் கயிலாயத்தில் திருநீற்றின் பெருமையைப் பற்றி பார்வதி தேவியாருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார் ஈசுவரன். கானமயில் ஒன்று பறந்து வந்து தோகையை விரித்தாடியது. அம்மையின் கண்கள் மயிலின் தோகை சிலிர்ப்பதைக் கண்டு மகிழ்ந்தன. உமையின் கவனம் சிதறியதைக் கண்ட ஈசுவரன் "பூவுலகில் மயிலாகப் பிறந்து திரிந்து கொண்டிரு" என்று சாபம் கொடுத்து விட்டு, "கடற்கரைப் பட்டினத்தில் மயில்கள் விளையாடும் இடத்தில் உள்ள கபாலீச்சுரத்தில் என்னைப் பூஜித்து, மீண்டும் கைலாயத்தை அடையலாம்" என்று சொன்னாராம்.

மயிலாய் உன்னைப் பூஜித்த
சயிலேந் திரன் புதல்வி
மாதா கற்பகாம்பிகை நாதா -
கடற்கரையில்
மயிலாபுரிக் கிறைவா!

* வேலை - கடல்


கருணை நிலவு பொழி வதன மதி

திருமயிலை கற்பகம்



யத்தை ஈசன் உலா வரும்போது தரிசிக்கலாம். இப்போது சிவலிங்க வடிவமாக கபாலீச்வரரைத் தரிசிக்கிறோம். "கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம் அமர்ந்தான்" என்று சம்பந்தர் ஏற்றிய பெருமான். மேற்கு

• கபாலீச்வரர்



போது இந்தக் கற்பகத்தைத் தரிசிக்க வேண்டும். கற்பகத்தின் திருவதனம் கருணை ஊற்றுப் பெருகும் வதனம். 'கடைக் கண்களால் உன்னைப் பார்ப்பானேன்' என்று நேராகவே நம்மைப் பார்க்கிறாள். அருள் மழையைப் பொழிகிறாள், கேட்ட வரமெல்லாம் தருகின்ற கற்பகம், வெள்ளிக்கிழமையில் சந்தியா கால தீபாராதனையைக் கண்டவர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

கற்பகவல்லியின் தரிசனம் நமது ஆசைகளைப் போக்கி, மனப் பிணிகளை அகற்றி, சாந்தத்தை அளிக்கிறது. அந்த அமைதியின் சுகத்தை அறிந்தவர்கள், மீண்டும் மீண்டும் அந்தக் கற்பகத்தின் குளிர் நிழலில் தங்க ஆசைப்படுவார்கள். அதன் பிறகு வேறு ஆசைகளுக்கு உள்ளத்தில் இடம் எது?

தமிழ்த்தாத்தா
டாக்டர் உ.வே. சாமி

ஆனந்தி 11

நோக்கிய சந்நிதி.

ஈசனின் ஜடா மகுடத்திலிருந்து விழுந்து கொண்டிருந்த தாழம்பூ மடலைக் கண்ட ப்ரும்மா, ஈசனின் முடியைக் கண்டதாகப் பொய் சொன்னாராம். அதனால் ஐந்து தலைகளை உடைய ப்ரும்மாவின் ஒரு தலையைக் கிள்ளி எடுத்து விட்டார் ஜோதிப் பிழம்பான ஈசன். கையில் பிரும்ம கபாலம் இருப்பதால் கபாலீச்வரர். 'தான்' என்னும் ஆணவத்தைக் கிள்ளி எடுத்து விடுவார். அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுத்து விட்டால் பிறகு பரிபூரணானந்தம்தானே!

"திருமயிலை கற்பகமே, கடைக்கண் பாராய்", தேவி ஒயிலாக நிற்கிறாள். புஷ்பப் பாவாடை சார்த்தியிருக்கும் நாதய்யர் நூலகத்தில் அவர் சேகரித்த அபூர்வமான சுவடிகள் இருக்கின்றன. இதுவரை பதிப்பிக்கப்படாமலிருந்த சுவடிகளை எழுதித் தற்போது பதிப்பித்து வருகிறார்கள். ஆசிரியர் பெயர் தெரியாத ஒரு சிறிய நூல். 'திருமயிலைக் கற்பகவல்லியம்மன் மாலை'. இதில் இடம் பெற்றுள்ள நூற்று ஐந்து பாடல்களில் ஒரு பாடலைப் பார்க்கலாம்.

புலவருக்குக் கற்பகவல்லியே முழுமுதற் கடவுளாகத் தென்படுகிறாள் என்று தோன்றுகிறது. தேவியை நடுநாயகமாக வைத்து, சூழ்ந்திருக்கும் தெய்வ மூர்த்தங்களை எல்லாம் ஈசனார் உள்பட, பரிவார தேவதைகளாக வைத்துப் பாடி

யிருக்கிறார்.

நிர்த்த விக்கினேசர், நீண் மயில் வேலர்
நிமலர் பூம்பாவை யீசுவரனார்
சக்தியுந் தனக்கு நற்பரி வார
சுவாமிகட் காகமப்படியே
நித்தியமான பூசனைக்குதவ நவ நிதி
நிதானங்கள் நீ தருவாய்.
காத்தி எவ்வுலகும் அளித்திரு
மயிலைக் கற்பகவல்லி நாயகியே!

(நிதானம் - செல்வம்) சக்தி உந்தனுக்கு என்று படிக்க வேண்டும். சுவாமிகளுக்கு - ஆகமப்படியே)

நாம் நவநிதிகளையும் கேட்பது நமக்காக அல்ல. இத்தனை பரிவார தேவதைகளுடன் உன்னையும் ஆகம சாத்திரங்களின் விதிமுறைப்படி பூஜை செய்யவே!

நவராத்திரியில் அம்பிகையைத் தரிசிக்க வேண்டும். 'அம்மன் கொலு விருப்பது போல' என்று சொல்கிறோமே, அந்த விமரிசையைத் திருமயிலையில் பார்க்கலாம்.

கோயிலின் மேற்கில் பெரிய திருக்குளம்! இதில் தண்ணீர் அலைமோதிக் கொண்டிருக்கும்போது, ஒரு காலத்தில் தெப்போத்ஸவம் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஞானசம்பந்தர் பாடிய பத்துப் பாடல்களிலும் ஒவ்வொரு விழாவையும் சொல்லித்தான் பாவையை எழுப்புகிறார். ஐப்பசி ஓண விழா, கார்த்திகை விளக்கீடு, ஆதிரை நாள், தைப்பூசம், மாசிக்கடலாட்டு, பங்குனி உத்திர விழா, அட்டமி நாள் என்று மயிலையின் விழாக்கள், அந்த நாளிலேயே அவ்வளவு சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன.


கபாலீசுவரர் கோயிலுக்குச் செல்பவர்கள் கட்டாயமாக தெற்கு மாட வீதியிலுள்ள வெள்ளீசுவரர் கோயிலுக்குப் போக வேண்டும். வாமனாவதாரத்தில் மகாவிஷ்ணு தர்ப்பையால் குத்தியதால் இழந்த கண்ணை, சுக்ராச்சாரியார் இந்த வெள்ளீசுவரரைப் பூஜித்துப் பெற்றார். அழகான உற்சவமூர்த்திகள், வெள்ளீசுவரரைப் பூஜித்தால் அகக் கண்களும் திறக்கும்.

கபாலீச்சுரத்தைச் சுற்றிலும் எத்தனை கோயில்கள்! திருவள்ளுவருக்கு ஒரு கோயில் இருக்கிறது. அறுபத்து மூவர் உற்சவத்தின்போது, திருவள்ளுவர் தம் மனைவி வாசுகியுடன் சேர்ந்து நாயன்மார்களுடன் உலா வருவது வழக்கம். நமக்குச் சரியாகத் தெரியாதபடியால், யார் வள்ளுவர் என்பதை அறிய முடிவதில்லை.

கேசவப் பெருமாளும், மாதவப் பெருமாளும், ஸ்ரீநிவாஸப் பெருமாளும் ஸேவை சாதிக்கிறார்கள். இன்னும் சற்று தூரத்தில், முண்டக் கண்ணி அம்மன் அன்பர்களுக்கு வரமளிக்கிறாள். சற்றுத் தூரம் நடந்தால் பிரஸித்தியாகிவிட்ட ராமபக்த ஹனுமான் கோயில். லஸ்ஸில் விநாயகர் கோயில். தடுக்கி விழுந்தால் அது நமஸ்காரமாகத்தான் இருக்கும்.

(தொடரும்)

* கீழ்க்கோபுரம்



நினைத்த காரியங்கள் நிச்சயமாக வெற்றி பெற

சக்தி மிக்க 6 விதமான பூஜைகள்

(தபால் வழி போதனா முறை)

எண்ணிய காரியம் எதுவாக இருப்பினும் ஈடேற்றி வெற்றி காண ஏற்ற பூஜைகள் - சக்திமிக்க தாயத்து சக்கரம் - மூல மந்திரம் அனைத்துடனும் 48 நாட்களிலேயே நிறவேற்றிடதற்குரிய மார்க்க வழிகளை அன்றைய சித்தர்கள் ஆக்கம் செய்து வைத்து இருக்கின்றனர். மந்திரங்களை ஒழுக்க நிலையோடு சொல்லி பூஜையை ஒழுங்குபட செய்திடில் சிறப்பான வெற்றிகளை அடைந்திடலாமெனன்பது தெய்வத்தீர்வை.

தினசரி பூஜை செய்யும் பழக்கம் உள்ளவர்களும், மதுபானம் செய்வதோ, புகை பிடிப்பதோ, புகையிலை, பொடி போடும் பழக்கம் இல்லாதவர்களும் இந்த பூஜை வழியாக நிச்சய நலம் பெற்றுத்தீரலாம்.

1.ஸ்ரீ லக்ஷ்மி பூஜை: இந்த பூஜா வழியாக எல்லையற்ற கடன் தொல்லை இருந்த் போதும் அதனை கட்டி முடித்து சுபிச்ச சௌகர்யம், வீடு கட்டும் யோகம், நிலையான வரவினங்கள் வரத்தக்கதான வழிகள் ஏற்பட்டு சுபிச்ச நிலை என்றும் குறைவுபடாமல் வாழும் நிலை ஏற்படும். *2.ஸ்ரீ வஸிய பூஜை:* இதன் வழியாக சதிபதிகள் இருவரும் சதா சண்டை சச்சரவென்று மனம் ஒடிந்து மனம் வெறுப்புற நிலை மாறி என்றும் இணை பிரியா ஒற்றுமை நிறைவு பெற்று இனிதுற வாழும் நிலையும், தொழில் வழியில் வாடிக்கையாளர்கள் அனைவரும் ஆவலுடன் வந்து அதிக வியாபாரம் ஏற்பட்டு அதிக லாபப் பெருக்கு ஏற்படுவதுடன் எதையும் விற்க நினைத்து விலை போகாமல் இருக்கும் இடம் வீடு, நிலம் எண்ணியபடி ஏறிய விலைக்கு விற்று அதிக லாபம் பெற்றிடும் இனிய நிலை ஏற்படும். *3.ஸ்ரீ காப்பு பூஜை:* இந்த பூஜை வழியாக எதிரியாக பலர் தீது செய்வதோடு, பில்லி, சூன்யம், ஏவல், செய்வினை என்று செய்து நிலைகுலைய செய்யும் நிலை நீங்கி அப்படி செய்பவர்கள் விலகி நீங்கிடுவர்.எண்ணிய காரியங்கள் எவ்வித இடைதடை ஏதுமின்றி ஈடேறி வெற்றி காணுவதோடு குடியிருக்கும் வீட்டில் வாஸ்து பிழை, மனையடி சாஸ்திர பிழை இருந்து விர்த்தி இன்றி இருப்பினும் அதுவும் அடியோடு நீங்கிடப்பெற்று ஆனந்த வாழ்வு ஏற்படும்.

4.ஸ்ரீ சரஸ்வதி பூஜை: இதனை செய்ய இதன் வழியாக கல்வி கற்றிடுவோர் நன்கு படித்து பட்டம் பெற்று பெரும் பதவி ஏற்று ஏராளமான சம்பாத்தியத்தில் அமர்ந்து மேன்மை அடைவார்கள். பதவியில் இருப்பவர்கள் மேல் பதவி அதிக சம்பளம் அடைவார்கள். *5.ஸ்ரீ சூரிய நாராயண பூஜை:* இந்த பூஜை வழியாக படித்து முடித்து பல காலமாகியும் சரியான வேலை வாய்ப்பின்றி வேதனையுற்ற நிலையில் இருப்பவர்கள் - உரித்தான உயரிய சம்பாத்திய நல்லவேலை வாய்ப்பை அடைவர். சுய தொழில் செய்யும் வாய்ப்பும் ஏற்படும். அயல்நாடு சென்று வேலை வாய்ப்படைந்து அரியதொரு நலம் அடைவர். *6.ஸ்ரீ மங்கள கௌரி பூஜை:* இந்த பூஜை வழியாக வயது வந்த பின்னும் விவாகம் நடவாது காலம் கடந்து போகும் நபருக்கு விரைவான விவாகம் உயர்வான வரன் வாய்க்கப்பெற்று வாழ்வின் அனைத்து பாக்கியமும் பெற்றிடும் சிறப்பு நிலை அடைவார்கள். விவாகமாகி பல காலமாகியும் பிள்ளைப்பேற்ற நிலையில் வாடி நிற்கும் தம்பதிகள் இப்பூஜா வழியாக சற்புத்திரனைப் பெற்றெடுத்து நெஞ்சம் நிறைவு பெறுவர்.

இவ்விதம் 6 பூஜைகள் செய்வதற்குரிய 15 லக்ஷம் உருவேற்றிய தாயத்து சக்கரம் உரிய மந்திரம் எப்படி பூஜையை செய்ய வேண்டுமென்று வழிமுறைகள் அடங்கிய படிவம் அனைத்தும் தருவோம். உரியபடி காலை, மாலை தவறாது செய்திடில் நிச்சய வெற்றிகள் உறுதிப்படும் என்பது சாஸ்திர தீர்வையாகும். இந்த பூஜை வழியாக பெண்கள் பலரும் நற்பலன் அடைந்திருக்கின்றனர். அவர்களும் மனுச்செய்யலாம். எனவே- உங்கள் ஜாதக நகல் ஒன்று இணைத்து இந்த பூஜை செய்ய விரும்புகின்றேன் என்று எழுதி **14.2.2004** தேதி மாலைக்குள் கடிதம் எழுதுங்கள். கிடைத்தவுடன் உரிய விபரமும் உங்கள் ஜாதகப்படி அவ்விதம் அதனை எப்படி செய்ய வேண்டும் என்ற முறை விதிகளோடு காணிக்கை விபரமும் எழுதி அனுப்புகின்றோம்.

நிச்சயமாக நீங்கள் மதுபானம் செய்பவராகவோ அல்லது புகைபிடிப்பவராகவோ அல்லது பொடி, புகையிலை போடுபவாகவோ இருக்கவே கூடாது. காலை,மாலை பூஜை செய்யும் பழக்கம் உடையவராக இருக்க வேண்டும். இவ்வரிதான பூஜைகளின் வழியாக நலம் அடையும் விதி அமைப்பு, ஜாதக அமைப்பு உடையவருக்குத்தான் இந்த விளம்பரம் கண்ணில்படும். இப்பூஜைகளை செய்யும் வாய்ப்பினை கடவுள் அருள்வார். எமது பூரண நல்லாசிகள்.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி

இராஜயோக பயிற்சியாளர் தபால் பெட்டி எண்: 55

பிளாட்எண்:204,அண்ணாநகர் மதுரை - 625 020 தமிழ்நாடு

(0452) 2533412 2650576

ஜூட்



தலைக்கு மேலே ரயில்வே தண்டவாளம். கீழே கறை படிந்த பற்களை நறநறவென்று கடிக்கும் தமிழ் சினிமாவின் பிராண்டெட் வில்லன்; கதாநாயகனின் தந்தையைத் தண்டவாளத்தில் கட்டிப் போட்டிருக்கிறான். பதறியடித்து அங்கே ஓடி வருகிறார் நாயகன். சொல்லி வைத்த மாதிரி தூரத்தில் ரயில். ஓடிப் போய் காப்பாற்றலாம் என்றால், ''உன்னோட உயிரா, அப்பனோட உயிரா? முடிவு பண்ணிக்கோ'' என்றபடி நாயகன் நெஞ்சுக் குழிக்குத் துப்பாக்கியை நீட்டுகிறான். இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் நம்ம ஆக்ஷன் ஹீரோ அசைந்து கொடுப்பாரா? ஒரே பாய்ச்சலில் பாலத்திற்குத் தாவி, தந்தையை விடுவிக்கிறார். அடுத்த விநாடி, அதே கயிற்றின் ஒரு முனையில் முடிச்சுப்போட்டு, கீழே நிற்கும் வில்லன் கழுத்துக்குக் குறி வைத்து வீசி விட்டு, மறுமுனையைப் பிடித்துக் கீழே குதிக்கிறார். அவ்வளவுதான்! வில்லன் இப்போது பொறியில் சிக்கிக் கொள்ள, கடைசி விநாடியில் போனால் போகிறதென்று கயிற்றைத் தளர்த்தி விடுகிறார் கதாநாயகன். தியேட்டரில் விசில் பறக்கிறது!

ஆக்ஷன் விரும்பும் ரசிகர்களைத் திருப்திப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட படங்களில், கதை எப்போதும் ஒப்புக்குச் சப்பாணிதான். இந்தப் படமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் காட்சி அமைப்புகள், திரைக்கதை இரண்டிலும் அடுத்தது என்ன என்று கேட்கத் தூண்டும் இயக்குனரின் திறமை பளிச்சிடுகிறது.

மாதவனுக்குப் பிறகு 'டாலஸ்ட் சார்மிங்' என்று பெயர் வாங்கிய ஸ்ரீகாந்த், 'ஆக்ஷன், அடிதடி மசாலாவுக்கு நானும் தயார்' என்று சக ஹீரோக்களைப் பார்த்து முதல் முறையாக ஜூட் விட்டிருக்கிறார். இதற்காகக் கன்னச் சதையைக் குறைத்து, புஜங்களை நிறைத்துக் கொண்டு, ஆக்ஷன் பிளாக்குகளில் காட்டுகிற வேகத்தைப் பார்த்தால், கூடிய சீக்கிரம் காக்கிச் சட்டை (போலீஸ் ஹீரோ) போட்டு விடுவார் போலிருக்கிறது. படத்தில் ஆகச் சிறந்த பரிதாபம், கதாநாயகி மீரா ஜாஸ்மின். இவரை வழக்கறிஞராக அறிமுகப்படுத்தும்போதே, ஆஹா! பாதிப் படத்துக்கு மேல் நாயகன் மேல் விழும் பழிகளைத் துடைக்க, சூப்பராய் நீதிமன்றத்தில் வாதாடப் போகிறார் என்று எதிர்பார்த்தால், புஸ்...! தியேட்டரை விட்டு வெளியே வந்த பின்பும் சிரிப்பை அடக்க முடியாத விவேக்கின் நகைச்சுவை, நைஸ். ஜூட், ஆக்ஷன் தாட்பூட்!

- விஷுவல்தாசன்

• ஆவரேஜ்

மனம் மாறும் மயிலாடி இளைஞர்கள்!



* தட்சிணாமூர்த்தி



ஊரின் எல்லையை நெருங்கும்போதே உளிச் சத்தம் காதுகளை எட்டுகிறது. கன்னியாகுமரியிலிருந்து 'அஞ்சு கிராமம்' வழியே ஐந்து நிமிடப் பயணத்தில் வந்து விடுகிறது மயிலாடி. அலை கடலுக்கு அப்பாலும் சிறந்த விலை கொடுத்து வாங்கப்படும் சிற்பங்களுக்குப் பெயர் பெற்றது இந்தப் பேரூராட்சி. ஒரு கூட்டுறவுச் சங்கம் உட்பட, சிறிதும் பெரிதுமாக மொத்தம் முப்பது சிற்பக் கூடங்கள். இங்கே அதிகம் தயாராவது விநாயகர் விக்கிரகங்களும், நாகர் சிலைகளும்தான். அடுத்து முருகன், அம்மன், அய்யப்பன், பெருமாள், ஆஞ்சநேயர், சுடலை மாடன் என்று சுவாமி சிலைகளைச் செதுக்குவதுதான் இங்குள்ள சிற்பிகளின் வாழ்வு. அவ்வப்போது நினைவுச் சின்னங்கள், தலைவர் சிலைகளையும் செதுக்குகிறார்கள்.



* கிரைண்டர் கல்லில்...

"சிலையோட அமைப்பைப் பொறுத்து, ஓர் அடிக்கு இரண்டாயிரம் முதல் இரண்டாயிரத்து ஐந்நூறு வரை விலை கிடைக்கும்" என்று சொல்கிறார் தொண்ணூறு வயதை நெருங்கும் தட்சிணாமூர்த்தி. "எங்களுக்குப் பிறகு எங்க வாரிசுங்க யாரும் இந்தத் தொழிலை கத்துக்கலை. எல்லாருக்கும் உத்யோகம் தான் புடிக்குது" என்பதுதான் இவரது வருத்தம். இவர் சொல்வதைப் போல மயிலாடியை சல்லடை போட்டு அலசியதில், நாற்பது வயதுக்குக் கீழே சிற்பிகளையே பார்க்க முடியவில்லை. விதிவிலக்காக சில இளைஞர்கள் கிரைண்டர் கல் தயாரிப்பில் தீவிர ஆர்வம் காட்டுகிறார்கள்.

"சிலைகள் செதுக்குவதற்கு ஆகிற கால தாமதம் இளையதலைமுறைக்குப் பிடிக்கலைங்க. அந்த அளவுக்கு எங்ககிட்டே பொறுமை இல்லை. அதனால் தான் கிரைண்டர் கல் தயாரிக்கிறோம். இது நேரத்தைச் சாப்பிடாது. சிற்பத்தைவிட அதிக லாபம் கிடைக்குது" என்கிறார் கணேஷ்.



* மயிலாடி சிற்பங்கள்

பிற்காலச் சோழர் பாணியை அடியொற்றி, சுவாமி சிலைகளைச் செதுக்கும் மயிலாடி சிற்பிகளின் பூர்வீகம்? சுசீந்திரம் கோவில் திருப்பணிக்கு கழுகு மலையிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள். வேலை முடிந்த பிறகு மயிலாடி தென்கம்பொத்தை மலையிலேயே சிற்பத்திற்கு ஏற்ற கற்கள் கிடைப்பதை அறிந்து இங்கே தங்கிவிட்டார்களாம். இப்போது அந்த மலை பெரிய குவாரியாக மாறி கல்வளம் குறைந்து போய்விட, கேரளத்திலிருந்து அதிக விலைக்குக் கற்களை வாங்க வேண்டிய பரிதாபம். இளைஞர்கள் சிற்பத் தொழிலில் ஈடுபாடு காட்ட மறுப்பதற்கும், ஊரின் அருகில் கல் வளம் இல்லாமல் போய் விட்டதும் முக்கியக் காரணம் என்கிறார்கள்.

மேலே ஆறு; கீழே பாலம்!

தூக்கத் திருவிழா!

குமரி மாவட்டம் - கொல்லங்கோடில் உள்ளது பத்ரகாளி அம்மன் கோயில். இங்கு வித்தியாசமான முறையில் தூக்கத் திருவிழா நடைபெறுகிறது. சக்கரங்கள் பொறுத்தப்பட்ட வாகன அமைப்பில், ஏற்றம் போல் இரு தடிகள், உயர்த்தவும் தாழ்த்தவும் வாகாக அமைக்கப்பட்டிருக்கும். தடியின் உச்சியில் இருவர் தொங்கும்படியான அமைப்பு. தூக்கக்காரர் எனப்படுபவர்கள், விரதமிருந்து வரிசைப்படித் தூக்கத்தில் தொங்குவர். வேண்டுதல் செய்யப்பட்ட குழந்தைகளைக் கைகளில் ஏந்தியதும், தூக்கம் உயர்த்தப்பட்டு, பக்தர்களால் இழுக்கப்பட்டு, ஆலயத்தை வலம் வரும்.

- க. உமா, தோவாளை.

குடிநீர் பஞ்சம்ன்னா என்னங்க?

வற்றாத சிற்றாறுகள், ஆங்காங்கே அணைக்கட்டுகள் என்று சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொள்ளும் குமரி மாவட்டத்தில், குடிதண்ணீர்ப் பஞ்சமே கிடையாது. நாகர்கோவில் நகரின் குடிநீர்த் தேவையை மட்டும் நிறைவேற்றுவதற்காகக் கட்டப்பட்டது முக்கடல் அணை. இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தின் பெரும்பகுதி குடிநீர்த் தேவையை ஈடுகட்டுகிறது இந்த அணை. இதைக் கட்டியவர், திருவிதாங்கூர் மன்னர் ராஜமார்த்தாண்ட வர்மா. இந்த அணை சூப்பர் சுற்றுலாத் தலமும் கூட.






• வில்லுக்குறி பாலம்

தடாலடித் தடா!

பாலித்தின் பைகள், மற்றும் பிளாஸ்டிக் பொருள்களுக்கு குமரி நகரியம் அதிரடித் தடை விதித்திருக்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு இதை அறிவிக்கும் விதமாக, தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி உட்பட பன்மொழி அறிவிப்புப் பலகைகளை வைத்திருப்பதோடு, அடிக்கடி ஒலிபெருக்கி அறிவிப்பும் உண்டு. இதையும் தாண்டி பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்திய ஆயிரத்து இருநூறு பேர் அபராதம் செலுத்தியிருக்கிறார்கள்.

காற்றில் கொட்டும் லாபம்!

கணவாயின் அதிவேக காற்றைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் காற்றாலை மின்சாரம்தான் இப்போது ஆரல்வாய்மொழியில் பணம் கொழிக்கும் தொழில். ஆண்டுதோறும் ஒரு வினாடிக்கு ஐந்து மீட்டர் கணவாய் காற்று வீசுவதை, டென்மார்க் தமது சாட்டிலைட் மூலம் கண்டு பிடித்துச் சொல்ல, இங்கே காற்றாலை நிறுவிய முதல் நிறுவனம் மைக்கான். இன்று



• முக்கடல் அணை



* ஆங்கிலத்தில் அறிவிப்பு பலகை லாபமாம்!

தகவல், படங்கள்: **குமரி ரமேஷ்.**

லாட்டரிச் சீட்டின் பூட்டி!

பரிசுச் சீட்டு முறை, ஏறத்தாழ நூற்றியெண்பது ஆண்டுகளுக்கு முன் சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயத்தில்தான் தொடங்கியுள்ளது. திருவிதாங்கூர் மன்னரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்று, இன்றளவும் இந்தக் கோயிலில் இருக்கிறது. இந்தப் பரிசுச் சீட்டு தாணுமாலயன் ஆலய கோபுரத் திருப்பணிக்கு நிதி திரட்டுவதற்காகவே நடத்தப்பட்டிருக்கிறது.

\- **ஆர். இளங்கோ**




* தூக்கத் திருவிழா!

அந்தரங்கத்தில் ஆடும் தேர்!

படத்தில் காணப்படுவது அந்தரங்கத்தில் ஓடும் தேர் அல்ல. ஆடும் தேர் மாலை! தேர் வடிவில் அமைக்கப்படுவதால் தேர் மாலை என்கிறார்கள். பல வண்ண மலர்களால், இதற்கென்றே தனியாக மாலைகள் கட்டப்படுகின்றன. பிறகு ஆலயப்பந்தல்களில் ஆட விடப்படுகின்றன. தோவாளையில், 'போட்டித் தேர்மாலை' கட்டுவார்கள். எந்த அமைப்பினர் அழகிய, பெரிய தேரை உருவாக்குகிறார்களோ அவர்களுக்கு, 'தங்க நகை' பரிசும் வழங்கி ஊக்குவிப்பார்கள்.

படம், தகவல்:
க. உமா



* தேர் மாலை!


வித்தியாச பாலம்!

நாகர்கோவிலுக்கும் தக்கலைக்கும் இடையே உள்ள வில்லுக்குறி பாலம் வித்தியாசமானது. இங்கு பாலத்தின் மேலே ஆறும், கீழே வாகனங்கள் செல்லும் சாலையும் அமைந்துள்ளது. இந்தப் பாலம் சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயப் பொறியாளர்களால் கட்டப்பட்டது. இன்று வரை பழுது ஏதுமின்றி நிமிர்ந்து நிலைத்து நிற்கிறது.

இது போன்றே அழகப்பபுரம் - ஜேம்ஸ் டவுன் இடையேயும் மேலே வாய்க்காலும், கீழே வாகனங்கள் செல்லும் சாலையுமாக அமைந்த மற்றொரு பாலமும் உண்டு.

தகவல், படம்:
ஆளூர் ஒய்.எம். ஹாஜா





* ஆரல்வாய்மொழி காற்றாலை

ஆண்டுக்கு ஆயிரத்து ஐந்நூறு மெகா வாட் மின்சாரம் தயாரிக்கும் திறன் கொண்ட ஐயாயிரத்து ஐந்நூறு காற்றாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஒரு காற்றாலையின் மதிப்பு, சராசரியாக இரண்டு கோடி ரூபாய். இங்கே காற்றாலைகள் அமைக்க, இருபது சதவிகிதம் கைவசம் இருந்தால், எண்பது சதவிதம் அரசே கடனுதவி தருகிறது. இப்படிக் காற்றாலை அதிபர்கள், இங்கே அதிகரித்ததால் ஐயாயிரம் படித்த உள்ளூர் இளைஞர்களுக்கு வேலை கிடைத்து விட்டது. உற்பத்தியாகும் மின்சாரத்தை மொத்தமாய் அரசு மின்வாரியமே கொள்முதல் செய்து கொள்வதால் கொள்ளை

க.சீ.சிவகுமார்

பொங்கியண்ணன் மாமாங்கத்தைப் பற்றிக் கேள்விப்பட்டபோது வயது பதினாறு. அவன் பிறந்தது முதலே முழுப் பெயரால் அறியப்படவில்லை. அம்மா குழந்தைப் பருவத்தில் 'பொங்கு! பொங்கு!' எனப் பாசமுடன் அழைத்தாள். அப்புறம் ஊராரும் உற்றார் பெற்றோரும் அழைக்கும் பெயர் 'பொய்ங்கான்'. பொங்கானுக்குச் சொந்த ஊர் கம்பளியம்பட்டி. தமிழையும் மரபையும் தக்க வைக்க நினைக்கும் சிலர் அவ்வூரை 'கம்மலியம்பட்டி' என்றும் அழைப்பதுண்டு. பொங்கானுக்கு முடிவெட்டுதலும் மழித்தலும் தொழில்; இது நகம் வெட்டுவது முதல் பண்டுதம் எனப்படும் கைவைத்தியம் வரை நீட்சியுடையது. விசேஷ வைபவங்களைச் சென்று தெரிவித்தல் முதல், மயானக் கரை ஈடேற்றச் சடங்குகள் ஈறாக, பலவற்றிலும் பங்கு கொண்டு செவ்வனே வளர்ந்து வந்த போதுதான் அவனில் மாபெரும் கனவு விதைக்கப்பட்டது.

தனது தாய்மாமனைப் பார்த்து வர தாராபுரம் போன போது நிகழ்ந்தது. மாமா தான் தொழில் செய்யப் போகும் 'கொண்டையஞ் செட்டியார்' வீட்டுக்கு அவனையும் கூட்டிப் போனார். செட்டியார் வீட்டில் 'மாமாங்கம்... மாமாங்கம்' என்று ஒரே பேச்சாயிருந்தது. அவர்கள் வீட்டில் முந்தின வாரம்தான் யாவரும் மாமாங்கக் குளியலை நிறைவேற்றிவிட்டு வந்திருந்தனர்.

பொங்கான் வெகு நேரம் மாமாங்கம் என்பதை... மாங்காய் ஐட்டமா அல்லது தின்னுகிற பலகாரமா எனக் குழம்பினான். அந்தக் குளியல் பற்றி செட்டியார் தெளிவுறவே எடுத்துச் சொன்னது கண்டு பிறகு தெளிந்தான். எண் திசை நதிகள் மட்டுமன்றி, ஆகாச பாதாள கங்கைகளும் மேற்படி நாளில் குளத்தில் சங்கமித்து விடுமென்றும், அம் முகூர்த்தத்தில் மூழ்கியெழுந்தால் பாவங்கள் பறந்தோடும் பஞ்சினும் வேகமாய் என்றும் தெரிவித்தவாறிருந்தார்.

அவரது பிரசங்கம் கேட்டுப் பிரமித்த பொங்கான்,

"நாங்கள்லாம் அங்கே போலாங்களா?" என்று வினவினான். அவனது கண்களை ஒரு நிமிடம் உற்று நோக்கிய செட்டியார்,

''தம்பி! அடுத்த தடவை உன்னையும் கூட்டிப் போறோம். ஒரு நாலுநாள் முன்னாடியே புறப்பட்டுடுவோம். நீ இங்கே வந்திரு. உன்னையும் கூட்டிப்



போறோம்" என்றார். ஆறுதல் வார்த்தைகளில் ஆண்டவன் வாழ்கிறான்.

ஊருக்குத் திரும்பி வந்த பொங்காலுக்குச் சதாகாலமும் மாமாங்க நினைவு மேவவில்லை என்றாலும், திடீர் திடீரெனவும் கோயில் குளங்கள் போகுந்தோறும் அது வட்டமிட்டது. அந்த நினைவுப் பறவையின் அலகில், வாடாத குறிஞ்சிப்பூ ஒன்றும் செருகப்பட்டிருந்தது.

காலம் நீண்டதுதான். தாராபுரம் போகிற போதெல்லாம் செட்டியாரை ஒருமுறை எட்டிப் பார்த்துவிட்டு வருவது பொங்காலுக்கு வழக்கமாகிவிட்டது. இடைப்பட்ட காலத்தில் அவனுக்குக் கல்யாணமாகி, பஞ்சாயத்துத் தேர்தலில் 'மாட்டுப் பெட்டியில்' வாக்குகூட அளித்தான். நிர்ணயித்த மாமாங்கத்தின்போது ஒரு மாதத்துக்கு முன் செட்டியார், பொங்கான் சந்திப்பொன்று நிகழ்ந்தது.

செட்டியார். "உன்னையுஞ் சேத்து ஒம்பது டிக்கட்டு எல்.ஜிபி பஸ்ல சொல்லி வச்சுட்டனப்பா. கரெக்ட் டயத்துக்கு வந்து சேரு. இங்கேயிருந்து கரூர் போய், அங்கிருந்து ரயில்ல போய்க்கலாம்" என்றார்.

காலண்டர்கள் அதிகமில்லாத காலத்தில், பொங்கான் அமாவாசை பௌர்ணமிகளை மனத்தில் இருத்தி கணக்கிட வேண்டி இருந்தது.

மனோரதம்



சூரியனுக்கு எல்லா நாளும் ஒன்று போலத்தான். அதை சூரியாதிபதி நிருபிக்கவுஞ் செய்தான். அப்போது வட்டாரத்தில் ஒரே போக்குவரத்துப் பேருந்து எல்.ஜி.பி சர்வீஸ்தான். ஏரோப்பிளேனின் வண்ணத்தில் அது இருக்கும். பொங்காலுக்கு மாமாங்கம் கிளர்ச்சி என்றால், எல்.ஜிபி பயணமும் ஒரு கிளர்ச்சிதான். பக்கக் கன்றுகள் முகிழ்த்த வரம். குரல் கொடி கட்டிப் பறந்தது.

"நான் மாமாங்கக் குளத்துக்குக் குளிக்கப் போறேன்". குறிப்பிட்ட நாளில் சாயங்காலம்தான் பேருந்து என்பதால், காலையில் புறப்பட்டுத் தாராபுரம் போய் பேருந்தில் இணையும் திட்டத்தில் தனது பயணப் பையும் கொஞ்சம் காகச்

சேமிப்புமாய், கனவுகளில் மிதந்தும் மிதவாமல் பொங்கானுக்கு இரவு கழிந்தது. காலையில் கதவு தட்டப்பட்டது. திறந்ததும் செய்தி.

'செங்காளி வலசா' என சக கிழடுகளால் அழைக்கப்பட்ட வேலாத்தாக் கவுண்டச்சி (82) மண்டையைப் போட்டு விட்டாள். காரியத்துக்குப் பொங்கானின் தகப்பன் கிட்ணனே கூடப் போதும்தான். ஆனால் சேதியைக் கேட்டபிறகு கிளம்பிப் போவது சரிப்படாது. தவச தானியம் அளக்கிற எஜமான்கள், நாளை ஊர்க்கட்டு செய்து பிழைப்புக்குப் பங்கம் ஏற்பட்டு விடும். பொங்கான் இடுகாட்டுக் காரியத்தில் மும்முரமானான்.

வானத்துப் பறவை பழைய குறிஞ்சிப் பூவை விசிறிவிட்டு, அலகில் புதிய ஒன்றைச் சூடிக் கொண்டு பறக்க ஆரம்பித்தது. சம்பவத்துக்கு ஒரு வருடம் கழித்துதான் செட்டியாரைப் பொங்கான் சந்தித்தது.

"என்னப்பா விஷயம்?" என்று கேட்டவரிடம், நடந்த செய்தியைக் கூறவும் "சரி...சரி, பொழப்பு முக்கியம். அடுத்த தடவை போனால் போகுது" என்றார்.

தொல்காப்பியரின் தோழர்!

கேரள எல்லைக்கருகில் அமைந்துள்ள அதங்கோடு கிராமம் புகழ் மிக்கது. தமிழின் ஆதி இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் அரங்கேற்றத்திற்குத் தலைமையேற்ற தமிழ்ப் பெரும்புலவர் அதங்கோட்டாசானின் ஊர் இது. தொல்காப்பியரும் அதங்கோட்டாசானும் அகத்தியரின் சீடர்கள் என்று கூறப்படுகிறது. (சென்னை வள்ளுவர் கோட்டத்திலும் அதங்கோட்டாசானின் உருவப்படம் இடம் பெற்றுள்ளது.) இன்றும் இப்பகுதியில் ஆசிரியர்கள் ஆசான் என்று அழைக்கப்படுகிறார்கள். மேலும்

அடுத்தமுறை குறுக்கிடு புறக் காரணங்கள் இன்றி குடும்பத்துக்குள்ளேயே விளைந்தது. தகப்பன் கிட்ணனுக்கு உடம்பு முடியாது போய் விட்டது. நார்க் கட்டிலில் நாரோடு நாராக கிட்ணன். உயர உயரப் பறந்து உயிர்ப்பந்து கோட்டுக்கு அப்பால் விழாமல், இப்புறமே விழுந்தது. இன்னும் ஆட்டம் உண்டு.

பொங்கானின் மாமாங்கப் பயணம் ரத்தானது உறுதியானதும், கிட்ணனுக்கு நரம்பும் எலும்பும் திண்மை கொள்ளத் தொடங்கி, சரியாய் ஒரு மண்டல காலத்தில் தொழிலுக்கே போகத் தொடங்கினார்.

கிட்ணன் இயற்கை எய்தி எட்டாண்டுகள் ஆயின.

அதற்கும் ஈராண்டுகள் கழித்து செட்டியார் அந்திப் படுக்கையில் படுத்தது கேள்வியுற்று, பொங்கான் தாராபுரம் நோக்கிப் போனான். தான் பாவத்தைக் கழுவுமளவு என்ன செய்தோம் எனச் சிந்தித்தும் ஒன்றும் பிடிபடவில்லை. தான் புண்ணியம் செய்திருக்கவில்லை என்பது மட்டும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்ததால், மாமாங்கக் குளியல் அவசியமே எனவும் தோன்றியது.

செட்டியாருக்கு ஸ்மரணையும் பேச்சுமிருந்தன. மரியாதை தெரிவிப்பதாய் இருந்தன பொங்கானின் குசலங்கள். அவர்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருந்தபோது செட்டியாரின் மகன் அங்கே வரவும், செட்டியார் மகனிடம்,

"யப்பா! இங்க பாரு. பொங்கான் என்னிக்கு வந்தான்னாலும் மாமாங்கம் போற அன்னிக்கு இவனக் கூட்டிக்கிட்டுப் போயிடணும்" என வேண்டுகோள் விட, சின்னச் செட்டியார் புன்முறுவலுடன் தலையசைத்தார்.

வரத்தை தலைமுறை தாண்டி சாசனப் படுத்திய செட்டியார், மறுவருடம் உயிர் நீத்தார்.

இம்முறை...

பொங்கான் ஏமாறத் தயாரில்லை. முதல் நாள் இரவே கிளம்பி ராவோடு ராவாக தாராபுரம் போக வேண்டியதுதான். பொழுது இறங்கட்டும் என பொங்கான் காத்திருந்தான். இரை தேடிய பறவைகள் கூடு நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. கனவுப் பறவையின் குறிஞ்சியில் ஒரு மகரந்தக் கொம்பு நீண்டு நீண்டு, பொங்கானை நோக்கி வந்து கொண்டிருந்தது. அது தீண்டி



சுதந்திரத்துக்கு முந்திய நில ஆவணங்களில் இப்பகுதி அதங்கோடு தேசம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

அதங்கோட்டாசான் சிறப்பை நிலை நிறுத்த விரும்பிய தமிழறிஞர்கள் அதங்கோட்டில் அவருக்கு நினைவகம் அமைக்க அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். வழக்கம் போலவே அது கிணற்றில் இட்ட கல்லாகிப் போனது.

அரசின் மெத்தனம் கண்டு வெகுண்ட புலவர் கோவிந்தநாதன் என்பவர் தீக்குளிப்பு போராட்டம் செய்ய முனைந்தார். அவருக்குத் தண்டனையாக சிறைவாசம் கிடைத்தாலும் மனம் மாறிய அரசு, அதங்கோட்டாசான் நினைவகம் அமைக்க ஒப்புக் கொண்டது.

அழகிய தொல்காப்பியர் வளைவு முகப்பாக அமைய தாமரை மலர்ப்பீடத்தின் மேல்அமர்ந்த அதங்கோட்டாசான் சிலையும் பின்புறம் படிப்பகமும் என இந்த நினைவிடம் அமைந்துள்ளது.

- விக்டர்வாசன்

விட்டால் சாபல்யம்தான்.

இம்முறை கதவு தட்டப்படவில்லை. நேரடியாகவே குரல்தான்.

"பொய்ங்கே! அருமைக்காரருக்கு நாடி விழுந்துருச் சாட்ட இருக்குதப்பா. வந்து பாருப்பா."

பொங்கான் அருமை ரங்கசாமிக் கவுண்டரின் (78) வீட்டுக்குப் போனான். துடிப்பு ஈனத்தில் கிடந்தது. மரணம் அறிக்கையை எழுத்தெழுத்தாய் எழுதிக் கொண்டிருந்தது.

நீண்டு வந்த மகரந்தக் கொம்பு பழைய படி வானத்தை நோக்கிப் போக ஆரம்பித்தது.

அருமைக்காரர் - அதிகாலை இரண்டு மணி. அதேநாள் மாலை மூணு மணிக்கு கடைசிக் கட்ட காரியங்கள் அருமைக்காரருக்கு நடந்த வண்ணமிருந்தன! பொங்கான், 'இந்நேரம் செட்டியார் வூட்டுல கரூர் தாண்டிப் போயிருப்பாங்க' என நினைத்து விசும்பினான் ஒரு தடவை. கூட்டத்தில் ஒரு குரல், "பாவம்... அருமக்காரரு போனது பொங்கனுக்கு ரொம்ப வருத்தமப்பா" என்றது. வழி மொழிந்தது மறுகுரல், "சும்மாவா ரெண்டு பேருஞ் சேந்து எத்தன கல்யாணம் நடத்திருப்பாங்க. எத்தனை மங்கலப் பாட்டு பாடியிருப்பாங்க" குறிஞ்சிப் பூவைத் தாங்கியிருந்த பறவைக்குக் குரல் அற்றுப் போய் விட்டது. அருமைக்காரரின் காடேற்றம் முடிந்தது. கம்பளியம்பட்டியில் இவ்வகைக் காரியங்கள் முடிந்தபின் பெரிய கிணற்றில் தான் தலை முழுகுவது. சாங்கியத்துக்கென ஒரு முறையோ மூன்று முறையோ முழுகி எழுவர் ஆண்களெல்லாரும். நின்று தலை முழுகும் உட்பரப்பு வசதியுடைய கிணறு.

வரிசையாய் ஆட்கள் முழுகி எழுந்தார்கள். "பொய்ங்கே நீ போ" சுரணையற்று நிற்கிறவனை யாரோ அண்டித் தள்ளுகிறார்கள். கிணற்றில் இறங்கி மூன்று முழுக்குடன் வெளி வராது, தொடர்ந்து முக்கி முக்கி எழுகிறான்.

"யேப்பா. கிறுக்குப் புடிச்சுக்கிச்சா. வாப்பா வெளீல சீக்கிரம்" ஊர்க் கொத்துக்காரர் கட்டளையிடுகிறார்.

வெளி வரும் பொங்கானின் தலைமேல் துண்டைப் போர்த்து, முகமும் துடைக்கிற பாவனை கிடைக்கிறது. அவனது வாய் ரகசியமாய் முணுமுணுக்கிறது.

"கம்பளியம்பட்டிதான்
கும்பகோணம்.
பெரிய கிணறுதான்
மாமாங்கம்"

வானில் வெறும் அலகுடன் குரலற்ற ஒரு பறவை இப்போது வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. ○



கிருஷ்ணா

• சங்கீதா

சிக்கில் குருசரணின் உற்சாகம் அவர் சங்கீதத்துக்கு முன்பாகவே அவையை நிறைத்து விடுகிறது. நளின காந்தி சபாவுக்காக அவர் பாடிய கச்சேரியை கல்யாணி வர்ணத்துடன் ஆரம்பித்தார். மூன்று காலப் பிரமாணங்கள். படிப்படியாக வேகம் வளர்க்கையில், பக்கவாத்திய கலைஞர்களைப் பக்கவாட்டில் ஒரு பார்வை பார்த்து, கூட இழுத்துக் கொண்டு முன்னேறி, ஆபோகியில் 'ஸ்ரீ மஹா கணபதே' க்ருதியில் கொண்டு நிறுத்தினார். ரூபக தாளத்தில் கற்பனை ஸ்வரங்கள் அளவாக, அழகாக வந்து விழுந்த நேரத்தில், அவ்வப்போது இனிமைக்காகக் கொடுத்த நாசுக்குப் பிடிகள் கனத்தைக் குறைத்துவிட்டன.

நளினகாந்தி ஆலாபனையிலும் இந்தப் போக்கு தலைகாட்டியது. சற்று நேரம் நளினம் காணாமல் போய், காந்தி மட்டும் வளைய வந்து நம்மைச் சீண்டியது. ஒரு வழியாக இரண்டையும் சேர்த்துப் பிடித்து ஆரோகண அவரோகணத்தில் ஏறி இறங்கி அவர் முடிக்க, வயலின் கலைஞர் நாகை ஸ்ரீராம் அதே நளினகாந்தியில் காந்தியைத் தொலைத்துவிட்டு, நளினத்தை மட்டும் பொழிந்து சர்க்கரைப் பாகு குடிக்க வைத்தார். 'நதஜன பாலினி நளினகாந்தி' என்று தஞ்சாவூர் சங்கர அய்யர் கீர்த்தனையை பாவத்தோடு குருசரண் பாட ஆரம்பிக்கவும் தான் அந்த ராகம் உய்யப்பெற்றுப் பிரகாசித்தது. கற்பனை ஸ்வரம் பாடியபோது வழங்கிய ரகளையான தீர்மானம், அதைத் தொடர்ந்த ஸ்ரீராமின் பதில் தீர்மானம், வாத்தியக் கச்சேரிக்கு வேண்டுமானால் அவசியமானதாக இருக்கலாம்; வாய்ப்பாட்டில் கீர்த்தனையின் பாவத்தோடு பொருந்தி வரவில்லை.

'ஹிரண்மயீம் லக்ஷ்மி' அழகான தீக்ஷிதர் கீர்த்தனை. லலிதா ராகத்தின் சௌந்தர்யத்தை அதிலே தொட்ட இடத்திலெல்லாம் கேட்க முடியும். இக் கிருதியைச் சிறப்பாகப் பாடிக் கொண்டே வந்த குருசரண், பல்லவி - அனுபல்லவி யிடையே நிறுத்துகையில், ஒரு மனோதர்ம சுழற்றல் சுழற்றியது அழகுக்கு அழகு செய்யும் அனாவசிய முயற்சியாகத் தோன்றியது. 'சங்கீத வாத்ய வினோதினி'யில் நிரவல், ஸ்வரங்களிலும் கீர்த்தனையின் பக்தி பாவம் வெளிப்படவில்லை... எனினும் ரசிகர்கள் குருசரணின் குரல் இனிமையிலும் உற்சாகத்திலும் கட்டுண்டு போனார்கள்.

'ஸதாமதிம்' என்ற கம்பீரவாணி ராக கீர்த்தனையை 'கான்ட்ராஸ்ட்'க்காகப் பாடி விட்டு, கரகரப்ரியாவை எடுத்தார் குருசரண். அருமையான அளவான விஸ்தாரம். லலிதாவிலும் நளினகாந்தியிலும் முயன்ற மிகை யலங்காரங்களைக் கைவிட்டு 'சக்கனி ராஜ மார்கமுலு'வில் சென்றார்! 'கண்டிகி சுந்தர'வில் நிரவல் ஸ்வரம் பாட, அழுத்தம் மீண்டும் அவர் கட்டுக்குள் வந்தது. ஆலாபனையில்,



இசைபுரு

அழகான சஞ்சாரங்கள், சங்கதிகள் உதிர்ந்தன. ஸ்வரக் குறைப்பில் அழகும் அளவும் இருந்தன. தொடர்ந்த தனியாவர்த்தனத்தில் சங்கரநாராயணனும் (மிருதங்கம்), குருபிரசாதும் (கடம்) பாடகரின் மனோதர்மத்தை ஒட்டியே வலம் வந்து அழகாக முத்தாய்ப்பு வைத்தனர்.

இதுவரை தன்னம்பிக்கையோடு பாடி வந்த குருசரண், துக்கடாக்களுக்குக் காகிதம் எடுத்து வைத்துக் கொண்டு ஒப்பித்ததைத் தவிர்த்திருக்கலாம். 'த்ஸல்லரே'வைப் பாடம் பண்ணுகின்றவரைக்கும் அந்த ஸ்ரீ ராமச்சந்திரன் பொறுமையாய்க் காத்திருக்க மாட்டானா என்ன!

முன்னதாக 'ஸோபில்லு ஸப்தஸ்வர'வுக்கு சுவரம் பாடியபோது சுருதி அவ்வளவாகச் சேராததை மறந்தோம்; ஜுஜாவந்தியில் 'அகிலாண்டேசுவரி' பாடியபோது வார்த்தைகளைச் சற்றுக் குழப்பியதை மன்னித்தோம், சங்கராபரண ஆலாபனையில் கரைந்தோம், மனம் நிறைந்தோம்.

வழி சங்கீதா!

சில சபாக்கள் சங்கீதா சிவகுமார் என்று அறிவிக்க, வேறு சிலர் சங்கீதா கிருஷ்ணா என்று அச்சிடுகின்றன... ஆனால் சங்கீதத்தில் இந்த சங்கீதா, கிருஷ்ணா வழிதான் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது. சான்று: கபாலி ஃபைன் ஆர்ட்ஸில் அம்மணி பாடிய சங்கராபரணம். குரு சாருமதியின் சாயல் அதில் மருந்துக்கும் இல்லை. மாறாக, கணவர் கிருஷ்ணாவின் அணுகுமுறை. அப்பட்டமாகத் தெரிந்தது. கிருஷ்ணாவைப் போலவே கண்ணை இறுக்கி மூடிக் கொள்ளும் சங்கீதா, கிருஷ்ணாவைப் போலவே சங்கீதத்தில் லயித்து, சாஹித்யத்தை அவ்வப்போது நழுவ விட்டுவிடும் சங்கீதா... கிருஷ்ணாவைப் போலவே கைகளால் கராத்தே முத்திரை காட்ட வேண்டியதுதான் பாக்கி!



• சிக்கில் குருசரண்

அன்றைய கச்சேரியில் சங்கீதாவுக்குப் பெரிய பலம் - வயலினில் வி.வி.எஸ். முராரி; மிருதங்கத்தில் மனோஜ் சிவா. முராரி இடைஞ்சல் பண்ணாத ஆதரவு; மனோஜ் பிரகடனப்படுத்தாத போஷிப்பு.

ஜெயந்தஸேனா ராகத்தில் 'வினதாசுத வாஹன' பாடியபோது சங்கதிகளின் அமைப்புக்கேற்ப பக்கவாத்தியங்கள் ஈடுகொடுக்க, அழகான பாடாந்தரத்தில் அந்தக் கீர்த்தனை ஜொலித்தது. முகாரி ஆலாபனையில் அழுத்தமான கமகப் பிரயோகங்கள்; அகிலாண்டேஸ்வரியில் நிதானமான நிர்வாகம் (மிருதங்கம் அந்த லயிப்பைக் கூட்டியது) என நிறை அம்சங்கள் நிறைந்த நிகழ்ச்சியில், குரல் இடைஞ்சலால் விளைந்த குறைகளைப் பெரிதுபடுத்தாது விட்டுவிடலாம். ஆனால் இத்தனை சிறந்த பாடகி, நிரவலை ஏறத்தாழ நிராகரிப்புச் செய்வதை எப்படி ஏற்பது...?

புக் போஸ்க்

மஹா ஸ்வாமி தர்ஷன்



வேதங்களின் வழியும், சாத்திரங்களின் நெறியும், தர்மத்தின் விதியும் வெகு சாமான்யனுக்கும் விளங்கும் படி எடுத்துக் கூறுவதில் காஞ்சி பரமாச்சார்யர் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச் சார்ய சுவாமிகளுக்கு இணை யானவர் இந்த நூற்றாண்டில் இல்லை. சத்தியத்தையும், தர்மத் தையும் உலகுக்கு எடுத்துச் சொல் வதற்காகவே வாழ்ந்த வாழ்வு ஆசார்யருடையது. அந்த வாழ்வை புகைப்படங்களாக, அவரது இள மைக்கால துறவுக் கோலம் முதல் இறுதிவரை, தொகுத்து நூல் வடிவத் தில் அளித்திருக்கிறார்கள். அவரது உரைகளைக் கேட்டவர்க்கு, வாசித் தவர்க்கு, ஒவ்வொரு புகைப்படமும் ஓராயிரம் உண்மைகளையும், தர்மங் களையும் கூறுகிறது. அந்தக் கனிந்த முகமும், கருணை விழிகளும், அவரது எத்தனையோ உரைகளை உள்ளத்தில் அலையலையாய் எழுப்பி நெகிழவும், மகி ழவும் வைக்கின்றன.





'இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்' - என்று வள்ளுவன் சொன்னதன் அச்சு அசலான பதிப்பு அவர் வாழ்க்கை. அதை அப்படியே பிரதிபலிக்கிறது இந்தப் புகைப் படந் தொகுப்பு.

(வெளியீடு: எஸ்.எஸ்.எஸ். எம்.எம் அறக்கட்டளை, சென்னை - 85. விலை: ரூ.500/- ஜனவரி 31 தேதிக்கு முன் வாங்குவோருக்கு மட்டும் இச் சலுகை விலை. கரூர் வைஸ்யா வங்கி அல்லது சிட்டி யூனியன் வங்கியின் எந்தக் கிளையிலும் பணம் செலுத்திப் பதிவு செய்ய லாம்.)

- விஷ்வக்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
எமது புதிய கிளை நிறுவனம் : எண். 7, 30வது தெரு, தில்லைகங்கா நகர்,
நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

புத்தாண்டு / பொங்கல் நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 15 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 180 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (180 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்

சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் (நிறுவனர்) — A.ராஜாபக்கிரிசாமி MSc., MEd., — சுவாமி ஸ்ரீ அம்பிகானந்தா

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

அவன் நினைத்த அளவிற்குச் சுலபமாக அவனை நினைவுகளிலிருந்து கழற்றிக்கொள்ள முடியவில்லை. பாத்ரூமில் முதுகு மச்சத்தில் புன்னகைத்தான். கூந்தலை நிரடினால் பின்னந் தலை தழும்பில் மூச்சு விட்டான். ஃபோட்டோ ஃபிரேம்களில் சிக்கியிருந்த சின்ன வயது நிவேதனாக்களுக்குப் பின்னால் நின்று பழிப்புக் காட்டினான். கேன்டீனில் காபி அருந்தும் நேரங்களில் அரூபமாக அருகிருந்து வேடிக்கை பார்த்தான். அவள் முணுமுணுத்தப் பாடல் வரிகளில் நலமா என்று விசாரித்தான்.

அத்தனை பழகிய ரவியை இழந்தபோது இல்லையே இந்த வலி? இவனோடு பழகவே இல்லையே, அப்புறம் ஏன் கண்ணுக்குள் புகுந்த தூசு போல் உறுத்திக் கொண்டே இருக்கிறான்?

உனக்கு நிஜமாகவே தெரியாதா? மூடிப் புதைந்து கிடந்த உன்னை உயிர்ப்பித்துத் தந்தான். எட்டு வயதுச் சிறுவனைக் கோபித்து இவனைப் பழிவாங்குகிறாய்!

கோபம் எட்டு வயதுச் சிறுவன் பேரில் இல்லை. இவன் பேரில் தான். ஏன் உண்மையைச் சொன்னான்? அவன் காட்டிய அம்மா இருக்கட்டும். அப்பா இருக்கட்டும். அவன் வேண்டாம், வேண்டாம், வேண்டாம்.

தீர்மானமாய்த் தானிருந்தாள்.

ஆனால் அவளை முன் மேல் நிறுத்தும் தருணம் இரண்டு வாரங்களில் வந்தது.

இசை அரசனிடமிருந்து அழைப்பு.

"படத்தோட பாடல் காஸெட் வெளியீட்டு விழா, ஃபிலிம் சேம்பர்ல நடக்குதும்மா. மேடையில லைவ்வா அந்தப் பாட்டையெல்லாம் பாடணும்னு ஐடியா"

"பாடறேன், சார்"

"ஜமாய்ச்சுடுவே தெரியும். உனக்கு எவ்வளவு கெஸ்ட் வருவாங்கன்னு சொல்லு" என்று அழைப்பிதழ்களை அவளிடம் நீட்டினார்.

நள்ளிரவின் நிசப்தங்கள் சூழ்ந்திருக்க, நிவேதனா கட்டிலில் குப்புறப்படுத்திருந்தாள்.

ஏன் சந்தோஷமாயிருக்கேனு கேக்க மாட்டியா அம்மா? என் குரலைக் கேக்க நீயும் விழாவுக்கு வருவியா? எங்க இசைக்குழுவுல எல்லாருக்கும் படு சந்தோஷம். ஆபீஸ்ல மேனகா மட்டும் 'ஹாட் பார்ட்டி உண்டா'ன்னு கண்ணடிச்சா. உதைச்சேன்.

ஒரு சின்னத் தப்பு நடந்து போச்சும்மா. ராஜ்குமாருக்கு நேர்ல கொடுக்காம திமிரா கூரியர்ல அனுப்பினேன். முகவரி தப்புன்னு திரும்பி வந்திருச்சு. வீடு மாறிட்டான். காலைல ஃபோன்ல சொல்லிடறேன், சரியா?

திரும்பிப் படுத்தாள். முழங்கையில் அந்தக் கவர் தட்டுப்பட்டது. ராஜ்குமாரிட

நான் வேண்டுமா?

சுபா 12

மிருந்து தட்டிப் பறித்து வந்த தினசரி.

மறுபடி படிக்க வேண்டும் போலிருந்தது. மின்வெளிச்சத்தில் கண்ணாடித் தாள் கண்களைக் கூச வைத்தது. பாலிதீன் உறையிலிருந்து செய்தித் தாளை மெல்ல உருவி எடுத்தாள். வயதேறிய காகிதம் விறைத்திருந்தது. உடையத் தயாராயிருந்தது. படிப்பதற்காக கவனமாகப் பிரித்தாள். உள் மடிப்பிலிருந்து இன்னொரு பக்கம் நழுவி வந்தது.

இது என்ன செய்தி? விழி விரியப் படித்தாள்.

ராஜ்குமார் ஏன் இதை அவள் எடுத்துப் போகக் கூடாது என்று துடித்தான் என்று இப்போது புரிந்தது. இதயநாடி வேகம் பிடித்தது.

திருட்டுப் பயல். விடாதே. உடனே உடனே அவனைப் பிடி.

செல்போன்கள் எதற்கு இருக்கின்றன?

“நல்ல தூக்கத்துலேர்ந்து எழுப்பிட்டே, நிவேதனா!”

மறுமுனையில் அவன் குரல் கேட்டதும், விரல்கள் ஏன் நடுங்குகின்றன?

நிவின்னே கூப்புடு. ராஸ்கல்” உதடுகள் ஏன் உதறுகின்றன?

“உடம்பு சரியில்லியா?”

“ரொம்ம்...ப நல்லா இருக்கேன்” என்றாள், குரலை சீர்படுத்திக் கொண்டு.



''சொல்லு, இன்னும் என்னவெல்லாம் என்கிட்டே மறைச்சிருக்கே?''

''பழைய நியூஸ் பேப்பரை வெளியே எடுத்தியா?''

''ஏன் என்கிட்டே மொதல்ல சொல்லலே?''

''இதைக் கேக்கவா இப்ப ஃபோன் பண்ணினே?''

''இப்ப உடனே உன்னைப் பார்க்கணும்டா''

''திருவாரூருக்கு இந்நேரத்துல பஸ் இருக்கா?''

''ஏன் என் கிட்டேர்ந்து ஓடி ஓடி ஒளியறே?''

''நாளைக்கு ராத்திரி சென்னையில இருப்பேன்''

''சாயந்திரம் ஆறு மணிக்குள்ள நீ இங்க இருந்தாகணும், ராஜ்'' விழா பற்றிச் சொன்னாள். ''அம்மாவையும் அழைச்சிட்டு வா''

ஃபோனை வைத்தாள். ஆனால் விரல்களின் நடுக்கம் நிற்கவில்லை.

வெகு நேரம் தூக்கமில்லை. தொலைக்காட்சியில் ஆடும் பிம்பங்கள் மனத்தில் பதியவில்லை. பத்திரிகையின் எழுத்துக்கள் பறந்தன. 'நிவி' என்று அதட்டினாள். யாருக்காகவும் நீ உணர்ச்சிவசப்படாதே! ஆனால் அவளிடமே அவள் தோற்றாள்.

ஃபிலிம் சேம்பர் இருந்த சாலை ஓரத்தில் கேபிள் போடவோ, எடுக்கவோ அரசுத்துறை அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருந்ததால், கார்கள் மூக்கோடு மூக்கு முட்டிக் கொண்டு ஊர்ந்தன.

நிவேதனா அரக்கு நிற சூரிதாரில் சேற்றை மிதிக்காமல் நுழைவதற்குள் பெரும் சர்க்கஸ் செய்தாள்.

பட்டுச் சேலைகள், ஸ்லீவ்லெஸ்கள், மிடிகள், ஜீன்ஸ்கள் என்று கதம்பமாக அரங்கம் மெல்ல மெல்ல நிரம்பியது.

தீபக், தயாரிப்பாளர் போல் ஏக மோதிரங்கள் அணிந்து வந்திருந்தான். ''இனிமே எங்களோடல்லாம் சவேராவுக்கு வருவியா என்ன?'' சிரித்து அவனுக்கான இருக்கையைக் காட்டினாள். உட்கார்ந்தவுடன் பக்கத்து லீலாவின் புடைவையை, விரல்களுக்கு நடுவில் பிடித்து அதன் துணியை சோதிப்பதில் கலகலப்பானாள். மேனகா சாமர்த்தியம் பற்றாமல் சேற்றில் ஹீல்ஸ் மாட்டி, தனியே கையில் பிடித்தபடி 'பாத்ரூம் எங்கேடி இருக்கு?' என்று வந்து சேர்ந்தாள்.

மறுபடி வாசலுக்கு வந்தபோது ராஜ்குமாரின் பைக் நுழைந்தது. அவளையறியாமல் பின் கழுத்தில் வியர்த்தது.

பைக்கை நிறுத்திவிட்டு அம்மாவின் கையோடு கை கோத்து வந்தான். அவளைப் பார்த்ததும், ''நான் கண்ல படாம நின்னு கேட்டுட்டுப் போறேன்'' என்றான்.

''ஏன்?''

''நான் உள்ளே இருந்தா நீ பாடமாட்டியே?''

''சரியான குடைக்கம்பி''

''அப்படின்னா?''

''குத்தல் பேர் வழி. வாங்கம்மா''

அவர்களை அழைத்துப் போய் உட்கார வைத்த பின்னும் படபடவென்று நெஞ்சுக்குள் வௌவால் அடித்தது.

''மேடம், உங்களை மேடைக்கு வரச் சொன்னாங்க''

யாவற்றையும் உதறிவிட்டு பரபரவென்று மேடை ஏறினாள்.



பட்டுத் துணிகளில் படத்தின் பெயர் காற்றில் அலைந்தது. இந்தப் பாடல்களால் தமிழ்த் திரை இசை வானத்தைத் தாண்டி வேறு ஏதோ உயரத்தைத் தொட்டுவிட்டது, என்றெல்லாம் மணக்கும் பொய்த் தமிழில் பேசிய இயக்குனர், இசை அரசனை நெளிய வைத்தார். நாபிச் சுழிவை பேண்ட் மூடி விடாமல் கவனமாகப் பார்த்துக் கொண்ட செம்பட்டைத் தலை முடி நடிகை, கேஸட்டை வெளியிட்டு தமிழை ஆங்கிலத்தில் எழுதி 'பருமைப்'பட்டார்.

சில பலூன்கள் குத்தப்பட்டு முதல் பாடல் துவங்கியது. உயரமான ஸ்பீக்கர்களால் அரங்கமே நிறைந்தது. கைத்தட்டல் அடங்கியதும், ''தமிழைத் தமிழாகப் பாடும்

புதிய குயில் ஒன்றை உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன்'' என்று இசை அரசன், நிவேதனாவை முன் நிறுத்தினார்.

சிக்கனமான இசைக் கருவிகளுடன் அந்தப் பாடல் அவள் குரலால் அரங்கத்தை அதிரடித்தது. கைத்தட்டல் அடங்க வெகு நேரம் பிடித்தது.

நிவேதனாவின் கண்களில் கண்ணீர் பூத்தது. மொத்தமாக வணங்கிவிட்டு தன் இருக்கையில் வந்தமர்ந்த பின்னும், புன்னகைத்தாலும் நிற்காமல் கன்னத்தில் வழிந்த படி இருந்தது. இசைக் குழு நண்பர்கள் கட்டை விரல்களை உயர்த்திக் காட்டினர். தீபக் அவள் பின் கழுத்தைத் தொட்டு, "பின்னிட்டே" என்றான். ராஜ்குமார் கண்களை அழுத்தமாக மூடித் திறந்து, ஆம் என்று சைகை செய்தான்.

அடுத்த மூன்று பாடல்கள் முடிந்து விழா நிறைவானதும், நிவேதனா சட்டென்று ராஜ்குமாரின் கையைப் பிடித்து எழுப்பினாள்.

"எம தர்ம பிரபு! ஒரு மாதம் லீவு போடப் போறீங்களா? பூலோகத்தில் மனித உயிர்களை யார் பறிப்பது?"

"அந்த வேலையை தண்ணீர் லாரிகள் செய்து விடும். சித்ர குப்தா!"

– அஸ்வினி

"வா"

"ஏய்"

சேர்த்து இழுத்துக் கொண்டு இசை அரசனின் முன் சென்று நின்றாள்.

"சார், இது ராஜ்குமார். இவராலத் தான் நான் பாட வந்தேன்"

கையைப் பிடித்துக் குலுக்கினார். "எந்த மியூசிக் ட்ரூப்?"

'இல்ல, ஊறுகா பிஸினஸ்' என்று ராஜ்குமார் சொல்வதற்குள், நிவேதனா "நான் கல்யாணம் செய்துக்கப் போறவர்" என்றாள்.

"இவங்க குரல் கடவுள் தந்த வரம். நெறைய ஐஸ்க்ரீம் வாங்கித் தராதீங்க" என்று அவனிடம் சிரித்தார். கூட்டத்திலிருந்து நெளிந்து வெளியே வந்தார்கள்.

"என்ன நிவி, இப்படியெல்லாம் அறிமுகப்படுத்தறே?"

"மாட்டேன்னு சொல்லிடுவியா? போ. அம்மா தேடிட்டிருக்காங்க பாரு"என்று கையை அழுத்திவிடுவித்தாள்.

மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்ட பின்னும் இறங்காமல் நிவேதனா அவனை இறுக்கிப் பிடித்திருந்தாள்.

"ஏய், உன் வீடு வந்தாச்சு"

"நம்ம வீடு"

"சரி, நம்ம வீடு"

"மொதல் தடவை என்னை வீட்ல கொண்டு வந்துவிட்டது ஞாபகமிருக்கா?"

"மறக்குமா? தூக்கிட்டில்ல போய்விட்டேன்?"

"இப்பவும் தூக்கிட்டுப்போய் விடு"

"அப்ப நீ மயக்கமா இருந்தே"

"இப்பவும் மயக்கமாத்தான் இருக்கேன்"

"தெருவே வேடிக்கை பார்க்கும், நிவி"

"பார்க்கட்டுமே"

"செல்லக் குட்டி இல்ல? எறங்கு"

"அப்ப உள்ளே கொண்டு போய்விடு"

அவன் தோளில் தொற்றிக் கொண்டு நடந்தாள். கதவைத் திறந்ததும், "பெட்ரூம் வரைக்கும்" என்றாள்.

ஷூக்களை நெம்பிக் கழற்றி விட்டு அழைத்துப் போனான்.

"ஏண்டா அந்த நியூஸை மறைச்சே?" என்று காதில் கிசுகிசுத்தாள.

"கடைசி வரைக்கும் உனக்குத் தெரியக் கூடாதுன்னு தான் நெனைச்சிருந்தேன், நிவி"

"உலகமே என்னைக் கடிச்சு தின்ன நேரம் பார்த்திருட்டிருக்கு. நீ மட்டும் ஏண்டா இப்படி இருக்கே?"

"உங்கப்பா குடிச்சிட்டுக் காரை ஓட்டினதால தான் விபத்தாச்சுன்னு போலீஸ் கண்டு பிடிச்சிருக்கலாம். காருக்குக் குறுக்கே ஓடினது எனக்கு மட்டும் தானே தெரியும்?"

"குடிக்கலைன்னா விபத்தாயிருக்காது தானே?"

"படுக்கைல கொண்டு விடு"

"நிவி, நீ ரொம்ப வம்பு பண்றே"

"நிவின்னா பிடிவாதம் தான். முடிஞ்சா கல்யாணத்துக்கப்புறம் மாத்திக் காட்டு"

படுக்கையில் அமர்த்தியதும், "நீயும் இங்கேயே தூங்கேன். காலைல குருவி வந்து எழுப்பும்" என்றாள்.

"காலைல உனக்கு ஏழு மணிக்கு ரெக்கார்டிங் இருக்கு. குட் நைட்"

சரேலென்று புறப்பட்டான்.

"இரு. வாசல் வரைக்கும் வரேன்"

மிரண்டு பார்த்தான்.

"வேணாம், திருப்பி உள்ளே கொண்டு விடுன்னு அடம் பிடிப்பே"

சிரித்தாள். பொங்கிச் சிரித்தாள். அத்தனை ஆனந்தமாக அவன் சிரித்ததே இல்லை.

(முற்றும்)

வட்டமேஜை



ஆத்தா ஞாபகம் வந்துடுச்சு!

✉ காயத்ரி கிரீஷுடன் நடத்திய 'சரிகமபதநி' பேட்டி படித்தேன். "ரிப்பன் கட்டிய இரட்டை ஜடையுடன் நடிகர் திலகம் சிவாஜியிடம் அவர் பரிசு வாங்கும்" அரிய புகைப்படத்தை வெளியிட்டிருக்கலாமே சார்?

மதுரை, என். பாலகிருஷ்ணன்

✉ விஷ்ணுவின் அனுக்கிரஹம் இல்லாமல் அவனைக் கீர்த்தனம் பண்ண முடியாது என்கிறார் பராசர மஹரிஷி. அதை நிரூபிப் பது போல் விட்டல் புகழ்பாடும் துக்காராம் கணபதி மகராஜின் கருத்தும் இருக்கிறது.

சென்னை, ெப. தர்மன்



✉ 'அரசியல் தலைவலி' (நமக்கே உரிமையாம்) படித்தேன். ப. சிதம்பரத்தின் கருத்துக்கள் மிகப் பெரும்பாலானவர்களின் விருப்பமாகவே உள்ளது. ஆனால், எந்த இரண்டு கட்சி என்பதில்தான் பிரச்னையே!

பாண்டிச்சேரி, எஸ். இளங்கோ

✉ சீதா ரவியின் 'மழை' சிறுகதை மனதுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இதயத்தில் இசை மழையைக் கொட்டியது.

பொன்னிவாடி, திருமலைசாமி

✉ வீராணம், நெய்வேலி மற்றும் கிருஷ்ணா ஆகிய மூன்று திட்டங்களின் மூலமாகவும் சென்னைக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை என்ற அவலத்தைச் சுட்டிக்காட்டியுள்ள கார்ட்டூன் மிக அருமை.

மதுரை, இரா. சக்கரபாணி

✉ ஹரித்துவாரமங்கலம் ஏ.கே. பழனிவேல் பற்றிய கட்டுரை மூலம் பல நல்ல விஷயங்களை அறிந்து கொண்டோம். நல்ல தாள வாத்ய தவில் கச்சேரியை அனுபவித்தத் திருப்தியும் ஏற்பட்டது.

மதுரை, பி.ராஜசேகரன்

✉ பரவை முனியம்மாவும், நித்யஸ்ரீயும் சந்தித்துப் பேசிக் கொண்டதைப் படித்த போது கச்சேரி ஒன்றைக் கேட்டு ரசித்த உணர்வு ஏற்பட்டது. பரவை முனியம்மாவின் பேச்சு வெள்ளந்தியாக இருந்தது. நித்யஸ்ரீயுடன் அட்டைப்படத்துக்கு அவர் கொடுத்திருந்த போஸ், எங்க ஆத்தாவை அப்படியே ஞாபகப்படுத்தியிருந்தது.


மொரட்டுப்பாளையம், இரா.வி.சௌந்தர்யா விசாலினி

✉ பரவை பறந்து போய் நித்யஸ்ரீயை முடக்கத்தான் ரசம் சாப்பிட வைத்து, அவரை பத்தியஸ்ரீ ஆக்கிய விவரம் தந்து எழுதப்பட்ட சுவையான கட்டுரைக்காக, ஜெயந்தனின் ஆர்.சி.புக்கில் சபாஷ் என்று என்டார்ஸ் செய்யவும்.

சென்னை, ஜே.எஸ்.ராகவன்

✉ 'பா.ஜ.க. கையாண்ட ராஜதந்திரம்' தலையங்கம் காங்கிரஸ் கட்சியினருக்கு நல்ல அறிவுரை! ஆனால் சோனியா தமக்குப் பிரதமர் பதவி வேண்டாம் என்று அறிவித்துவிட்டுப் பொதுத் தேர்தலைச் சந்தித்தால், அக்கட்சியில் மாற்றுப் பிரதமர் வேட்பாளரை இனங்காண்பதரிது. அதற்கு அக்கட்சியில் தற்போது நிலவிவரும் கோஷ்டிப் பூசலும் இடந்தராது என்பதே நிதர்சனமான உண்மை!

நெல்லை, புளியரை கணேசன்



வாரா வாரம் ரூ.10,000 போட்டிக்கு நீங்கள் காட்டும் அமோக ஆதரவுக்கு ரொம்ப ரொம்ப நன்றி.

இது 8வது போட்டி. வழக்கம்போல ஜி.கே. கேள்விகள்தான். ரொம்ப ஈஸிதாங்க. கொஞ்சம் யோசிச்சு, இலேசா முயற்சி பண்ணினா போதும், விடைகளைக் கண்டுபிடிச்சிடலாம்.

விடைகளை எழுதிட்டு, உங்க கையெழுத்தையும், முகவரியையும் கூப்பனிலேயே அதற்குரிய இடத்திலே நிரப்பிடுங்க.


ஓ.கே.வா?

பின்புறமுள்ள கூப்பனில் இடம் பெற்றுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதி, ஜனவரி 10 ஆம் தேதிக்குள் அனுப்புங்கள்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய கல்கி வாசகர் ஒருவருக்கு ரூ.10,000 பரிசு வழங்கப்படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதில்களை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது, குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசாக 20 பேருக்குத் தலா ரூ. 100 ரொக்கப் பரிசு.
- இப்பரிசுத் தொகை வருமானவரி விதிமுறைகளுக்கு உட்பட்டது.
- கல்கி வாசகர்கள் எங்கிருந்தாலும் இதில்

வாசகர்கள் அனைவருக்கும்

கல்கி வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி



பங்கேற்கலாம்.

- உறையின் மீது 'ஆஹா! ரூ.10,000 (8)' என்று குறிப்பிட வேண்டும்.
- விடைகள் 10.1.2004க்கு முன்னதாக கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்பட மாட்டாது.

ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

குவிஸ் போட்டி கூப்பன் - 8

1. இந்தியாவின் தேசியப் பழம் ....

2. பாலைவனத்தில் திரிந்தாலும் விரும்பியபோது மட்டும் வியர்வையை வெளியிடும் மிருகம் ....

3. பறவைகளுக்கான 'சாரிடி பேர்ட்ஸ் ஆஸ்பிட்டல்' உள்ள இடம் ....

4. கல்கத்தா, கொல்கத்தா என்று பெயர் மாற்றம் பெற்ற ஆண்டு ....

5. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே செல்லும் ரயிலின் பெயர் .... எக்ஸ்பிரஸ்.

6. "மெய்ன் காம்ப்" நூலை எழுதியவர் ....

பெயர் : ....

முகவரி : ....

....

கையொப்பம் : ....

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளில் "ஆன்மீகம்" தெய்வீக மாதஇதழும்

ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்களும் இணைந்து நடத்தும்,

அன்பர்கள் இஷ்டப்படும் ஹோம பூஜையில், நேரிலேயே கலந்து கொள்ளும் வாய்ப்பு !

பேரன்புடையீர், வணக்கம் ! எடுத்த முயற்சிகள் வெற்றியடையவும், சங்கடங்களின்றி சந்தோஷமாக வாழவும், செய்தொழிலில் லாபம் பெறவும், மகப்பேறு பெற்று மகிழவும், திருமணத்தடைகள் நீங்கி, குதூகலம் பெறவும், கடன் தொல்லையிலிருந்து விடுபடவும், பிள்ளைகள் கல்வியில் முதல் நிலை பெறவும், தீராத நோய்களிலிருந்து நிவாரணம் பெறவும், நவகிரஹ தோஷங்களிலிருந்து விலகி நலம் பெறவும், பிரிந்த குடும்பத்தினரும், தம்பதியினரும் ஒன்று சேரவும், உத்தியோகம் மற்றும் அயல்நாடு செல்லவும் நினைக்கும் ஒவ்வொருவருக்காகவும், மாதா மாதம் பௌர்ணமி அன்று திருவல்லிக்கேணியில் சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கவேண்டி, காலை 06.00 முதல் 10.00 வரை "ஆன்மீகம்" தெய்வீக மாத இதழ் சார்பாக கீழ் கண்ட விவரப்படி சிறப்பான ஹோமங்களை நடத்தவிருக்கிறோம்.

07.01.04. புதன் - சகல காரியம் ஜெயப்ரதம் உண்டாக - ஸ்ரீ மஹாபீம பூஜையும், வாயு ஸூக்த ஹோமமும்

நாம் தொடங்கும் எந்த செயலும் வெற்றி பெற வேண்டுமானால், முறைப்படி திட்டமிட்டு செயல்படுத்த அறிவாற்றல் தேவைதான் என்றாலும், அதை விரைவாகவும், சரியாகவும் முடிக்க உடலில் பலமும் தேவை. பலவீனமாக இருந்தால் நம் முயற்சிகள் வெற்றியடைய தவறிவிடும். எனவே நமக்கு உடல் பலம் வேண்டி இராமாயணத்தில் இடம் பெறும் வாயுபுத்திரனான அனுமனையும், அதே போல மகாபாரதத்தில் இடம் பெறும் பீமனையும் வேண்டிக் கொண்டால் நாம் உடல் வலிமை பெற்று விளங்க முடியும். ஆஞ்சநேயனையும், பீமனையும் வழிபடுபவர்களுக்கு புத்தி, பலம், புகழ், மன உறுதி, அஞ்சா நெஞ்சம், உடல் ஆரோக்கியம், விழிப்புணர்வு, வாக்கு வன்மை ஆகிய அனைத்து நன்மைகளும் உண்டாகும். இம் மாதம் நடைபெறும் **ஸ்ரீ மஹாபீம பூஜையிலும், வாயு ஸூக்த ஹோமத்திலும்** கலந்து கொண்டு மனக்கவலைகளிலிருந்துவிடுபட்டு, பல் வேறு நன்மைகளை பெற்று இனிய நல்வாழ்வு வாழ அழைக்கிறோம்.

மார்கழி	07.01.04	புதன்	சகல காரியம் ஜெயப்ரதம் உண்டாக	ஸ்ரீ மஹாபீம பூஜையும், வாயு ஸூக்த ஹோமமும்
தை	06.02.04	வெள்ளி	திருமண பாக்கியம் கை கூடி வர	ஸ்ரீ ஸ்வயம்வரகலா பார்வதி ஹோமம்
மாசி	06.03.04	சனி	வீடு அலுவலகம் வாஸ்து தோஷங்கள் விலக	ஸ்ரீ வாஸ்து ஹோமம்
பங்குனி	05.04.04	திங்கள்	வழக்கு வியாஜ்யங்களில் வெற்றிகிட்ட	ஸ்ரீ ஸூக்த ஜெயாதி ஹோமம்
சித்திரை	04.05.04	செவ்வாய்	செய்வினை விலக	ஸ்ரீ ஸுதர்ஸன ஹோமம்
வைகாசி	02.06.03	புதன்	கல்வி செல்வம் உண்டாக	ஸ்ரீ நீல சரஸ்வதி ஹோமம்
ஆனி	ஆனி பௌர்ணமியன்று		தடைகள் அனைத்தும் விலக	ஸ்ரீ ராஜ கணபதி மஹாமந்த்ர ஹோமம்
ஆடி	29.08.03	ஞாயிறு	நினைத்தகாரியங்கள் சித்தியாக	ஸ்ரீ துர்கா ஸூக்த - பஞ்ச ஸூக்த ஹோமம்
ஆவணி	28.09.03	செவ்வாய்	தீராத வியாதிகள் விலக	ஸ்ரீ தன்வந்திரி ஹோமம்
புரட்டாசி	27.10.03	புதன்	சத்ரு பயம் விலக	ஸ்ரீ நரஸிம்ம ஸுதர்சன ஹோமம்
ஐப்பசி	26.11.03	வெள்ளி	செல்வம் பெருக	ஸ்ரீ லக்ஷ்மி குபேர ஹோமம்
கார்த்திகை	26.12.03	ஞாயிறு	நவகிரஹ ப்ரீதி உண்டாக	ஸ்ரீ நவகிரஹ ஜெயாதி ஹோமம்

ஜோதிட சாஸ்த்ரசிம்மம், வாஸ்த்து சாஸ்த்ர விற்பன்னர், யோக ஆஞ்சனேய சக்தி பீடாதிபதி பூஜ்யஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்களின் தலைமையில், வேத சாஸ்திரங்களில் பாண்டித்யம் பெற்ற வித்வான்களைக்கொண்டு, ஸ்ரீ யோக ஆஞ்சநேயர் சக்தி பீடம், 177 / 84, வெங்கட்ரங்கம் பிள்ளைத்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5ல் சிறப்பு ஹோமங்கள் மேற்கண்ட விவரப்படி ஒவ்வொரு மாதங்களிலும் நடைபெற இருக்கின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு மாதங்களில் நடைபெறும் ஒரு ஹோமத்தில் பங்குபெற கட்டணம் ரூ. 500- எல்லா ஹோமங்களிலும் பங்கு பெறவும், முன்பதிவு செய்யவும் கட்டணம் ரூ. 4500, செலுத்தி, நேரில் கலந்து கொள்ளலாம். நேரில் கலந்துகொள்ள இயலாதவர்கள் பெயர், நட்சத்திரம், இராசி, கோத்ரம் முதலியவைகளைக் குறிப்பிட்டு, என்ன பரிகாரத்திற்காக ஹோமம் செய்ய வேண்டும் என்பதையும், தங்களது விலாசத்தையும் எழுதி அனுப்பவும், பிரசாதங்கள் தபால்மூலம் அனுப்பப்படும்.

வைகானச தர்ம சாஸ்திரம், ஜோதிடம், வாஸ்து என ஒரு கோடியே 25 லட்சம் கிரந்தங்களை எழுதியவரும் ப்ருகு, அத்ரி, காஸ்யபர், மரீச் ஆகிய மகரிஷிகளுக்கும் குருவானவருமான 'ஸ்ரீ விகநஸ மஹரிஷி' யின் அபூர்வ புகைப்படத்துடன் ஹோமத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட அட்சதை, மஞ்சள் ரட்சை, குங்குமம், ஹோம பஸ்மம், 3x3 கனத்த செம்புத் தகட்டினாலான யந்திரத்துடன் வெள்ளியால் செய்யப்பட்ட லக்ஷ்மி டாலரும் மஹாஹோமத்தில் பங்குபெறுபவர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும்.

ஸ்ரீ விகநஸ மஹரிஷியின் பூஜிக்கப்பட்ட படம், இருக்கும் வீடுகளிலோ, அலுவலகங்களிலோ எந்த விதமான தோஷங்களும் அண்டாது என்பது உறுதி.



எடுத்த முயற்சிகளில் வெற்றிகளை உண்டாக்கும் ஹோமத்திற்காக 'Homadharisanam' எனும் பெயரில் ரூ. 500/ அல்லது ரூ. 4500. - Cheque/D.D./M.O. மூலம் அனுப்ப வேண்டிய முகவரி

ஹோம தரிசனம்

68, நடுத்தெரு, (ஸ்ரீ காபாலீஸ்வரர் கோயில் அருகில்) மயிலாப்பூர், சென்னை - 4.

Tel : 2461 6466, 52067068. Fax : 044-5206 6525. E-mail:siva siva @ vsnl.net



ஹோமத்தின் மூலம் தெய்வத்தை ப்ரீதி செய்து வேண்டியதை நிறைவேற்றிக் கொள்வதும் ஒரு சிறந்த வழி !

முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யார்

வைகுண்டத்தில் எம் பெருமானுக்கு நித்ய ஸேவை பண்ணுகிற கருடனைப் போலவே இன்னொரு நித்யசூரி ஆதி சேஷன்.

அனந்தனாகிற இந்த ஆதிசேஷனின் ஆயிரம் தலைகளுக்கும் ஆயிரம் திருநாமங்கள் உண்டு!

அந்த மட்டபல்லியிலே எம்பெருமான் லக்ஷ்மி நரசிம்ஹனாக உட்கார்ந்திருக்கிறான் அல்லவா... அவனுக்கு அந்த ஆதிசேஷனே மலை ரூபத்தில் வந்து குடை பிடிக்கிறான், அந்த ஊரிலே! மலை வடிவத்திலே வரிசையாக அவன் சிரஸைப் பார்க்கலாம் அங்கே. அப்படி நீள - நெடுக இருக்கும் அந்த மலை.

ஆயிரம் தலைகள் ஆதிசேஷனுக்கு என்றோம்... ஒவ்வொரு தலையிலேயும் இரண்டு நாக்குகள் - அந்த மாதிரி இரண்டாயிரம் நாக்குகளுடன் பூமியைத் தாங்குகிறான்.

"அனந்தன்,
சென்றால் குடையாம்
இருந்தால் சிம்மாசனமாம்.
நின்றால் மரவடியாம்"

என்று பகவான் எப்படியெப்படியெல்லாம் தன்னுடைய கோலத்தை மாற்றிக் கொண்டு போகிறானோ, அதற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு, நித்ய கைங்கர்யம் பண்ணிக் கொண்டிருக்கிறான்.

இந்த ஆதிசேஷன் லக்ஷ்மண ரூபம். அவனுடைய முதல் ரூபம் அனந்தன்; அடுத்தது லக்ஷ்மணன், அதற்கடுத்தது பலராமன், அதற்கடுத்தது கலியுகத்திலே ஆதிசேஷனுடைய அம்சபூதராய் ஒருவர் பிறக்கப் போகிறார் என்றபோது, ஸ்ரீ பெரும்புதூரில் அவதரித்தார் ராமானுஜர்.

வாயுவினுடைய அவதாரமாக மத்வாச்சார்யர். ஆதிசேஷனது அவதாரமாக ராமானுஜர்.

எப்படி பரமேசுவரனுடைய அவதாரமாக ஆதிசங்கரர் அவதரித்தாரோ, அதே மாதிரி, வாயுவினுடைய அவதாரமாக மத்வாச்சார்யர் தோன்றினார்; நித்யம் பகவானுக்குக் கைங்கர்யம் பண்ணக் கூடிய அம்சாவதாரமாக ராமானுஜர் அவதரித்தார்.

பகவானோடு ரொம்ப நெருங்கிப் பழகுகிறவர்கள் தானே அவனைக் குறித்து நன்றாகப் பேச முடியும்! இதராளுக்குத் தெரியாது அவனைப் பற்றி. தெரியாத ஒருவரைப் பற்றி நாம் கேட்டோமானால், 'எனக்குத் தெரியாதே, யாரிடமாவது கேட்டுச் சொல்கிறேன்' என்று சொல்வார்கள். ஆகவே, நெருக்கமாக இருந்து பார்க்கக் கூடியவர்களுக்குத்தான் அந்த மகிமையைச் சொல்ல முடியும்.

அந்த ஆதிசேஷனே அவதாரம் பண்ணி (ராமானுஜராக) எம்பெருமானைப் பற்றி எடுத்துச் சொன்னால், அதிலே அசத்யம் இருக்குமோ!

அஹோபில மடத்து முதல் அழகிய சிங்கர், பிரும்மசர்யத்திலிருந்தே சன்னியாஸம் கொண்டவர் - பகவானே அவருக்கு ஆசிரமத்தைக் கொடுத்தான். அவர் உயர்ந்த ரீதியிலே பிரும்ம சூத்ர பாஷ்யத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறபோது, ஐந்து தலையையுடைய சர்ப்பம் கேட்டுக் கொண்டிருந்தது. அப்படியானால் ஆதிசேஷன் வந்து கேட்டான் என்றுதானே பொருள்! அப்படியானால் அவர் வாக்கு எத்தனை மதுரமானதாக இருந்திருக்க வேண்டும்!

ஆகவே, ஆதிசேஷன் பகவானுக்குக் கைங்கர்யம் பண்ணுவதற்காகவே கூட இருக்கிறான். லக்ஷ்மணனாக ஸ்ரீ ராமாவதார காலத்திலே அவன் பண்ணின கைங்கர்யத்தை இன்னொருவர் பண்ண முடியுமா! அஹோராத்ரம் தூக்கம் இல்லாமல் பகவானுக்குக் கைங்கர்யம் பண்ணினானே! ஆதிசேஷனாக இருந்ததாலன்றோ அவனால் அது முடிந்தது. லக்ஷ்மணன், கோபம் வந்தால்


22

அடக்க முடியாமல் சீறி எழுவார். இதுவும் ஆதிசேஷனது குணம்தான்! கிழவனாகிற தந்தையை, கைகேயினிடத்திலே மனத்தை வைத்த அவரை, ஒரே அடி அடிக்கிறேன் என்கிறான் லக்ஷ்மணன்! கோபம் வந்துவிட்டதானால் அப்பாவையே அடிக்கக் கிளம்பிவிடுகிறார். அவ்வளவு வேகம்!

ராமாவதார காலத்தில் தனக்குத் தம்பியாக இருந்து கைங்கர்யம் பண்ணியதாலே அடுத்த அவதாரத்தில் மூத்தவனாக மாற்றி, அவனை பலராமனாக அவதரிக்கச் செய்தார் எம் பெருமான். பலராமனுக்கு அடி பணிந்து கிருஷ்ணன் அங்கே பிரதியுபகாரம் பண்ணுகிறான்.

'செம்பொற்கழலடி செல்வா! பலதேவா! உம்பியும் நீயும் உறங்கேலோர்' என்கிறாள் ஆண்டாள்.

மற்றொரு நித்ய சூரியாய் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் பண்ணிக் கொண்டிருப்பவர் விஷ்வக்ஸேனர். அவர்தான் ஸேனை நாயகர், எம் பெருமானின் அத்தனை சேனைகளுக்கும் அதிபர். பகவான் அவரிடத்தில் எல்லாவற்றையும் ஒப்படைத்து விட்டு, நிர்ப்பரனாய் உள்ளே உட்கார்ந்திருக்கிறான் - வைகுண்டத்திலே.

சமஸ்த ஐச்வர்யமும் அந்த விஷ்வக்ஸேனரிடத்திலே தரப்பட்டுவிட்டது. வைகுண்ட ஐச்வர்யம் மொத்தத்தையும் கொடுத்துவிட்டான். அவர் பரிபாலனம் பண்ணுகிறார். அவரிடத்தில் உதவி செய்யப் பல பேர் இருக்கிறார்கள். கஜமுகர், கஜஸேனர் என்று எத்தனையோ பேர். துவார பாலகர்கள்கூட விஷ்வக்ஸேனருக்குக் கட்டுப்பட்டவர்கள்தாம்.

இப்படிப்பட்ட உயர்ந்த விஷ்வக்ஸேனருக்குத்தான், உயர்ந்த த்வய மந்திரத்தை மஹாலக்ஷ்மி உபதேசம் பண்ணினாள்.

இந்த விஷ்வக்ஸேனர்தான் உலகத்திலே நம்மாழ்வாராக அவதாரம் பண்ணி, அந்த த்வய மந்திரத்தைத் திருவாய்மொழி மூலமாக வெளிக்காட்டினார்.

நாராயண மந்திரம் இந்த பாரத தேசத்திலே, பதரிகாசிரமத்திலே தோன்றியது. த்வய மந்திரம் வைகுண்டத்திலேயே உபதேசிக்கப் பட்டது. அதனால்தான் மந்திர ரத்தினம் என்று பெயர் அதற்கு.

இந்த த்வய மந்திரத்தை எப்போது வேண்டுமானாலும் சொல்லலாம். வருகிற போதும் போகிறபோதும் சொல்லிக் கொண்டே இருக்கலாம். ராத்திரி தூக்கம் வருகிற வரையிலே சொல்லலாம். காலையில் எழுந்திருக்கிறபோதே சொல்லலாம். மதுசூதனனைக் காட்டிலும் உயர்ந்த தத்துவம் இல்லை. த்வய மந்திரத்தைக் காட்டிலும் உயர்ந்த மந்திரம் இல்லை.

இப்படிப்பட்ட மந்திரத்தை உலகுக்குக் காட்டியவர் விஷ்வக்ஸேனர்- ஸேனை நாயகர். இதை நாம் தியானம் பண்ணினால் எந்தக் கர்மாவும் நம்மீது திரும்பிக் கொள்ள முடியாது.

இந்த விஷ்வக்ஸேனருடைய தர்மபத்னியின் பெயர் சூத்ரவதி. இவர்கள் இரண்டு பேரையும் ஆவாஹனம் பண்ணி கர்மாவை ஆரம்பித்தால், அந்தக் கர்மா நிர்விக்னமாய் நடக்கும்; நல்ல முறையிலே முடியும்.

எந்தப் பூஜைக்கு முன்பும் விஷ்வக்ஸேனாராதனம் பண்ணியாக வேண்டும். ஆனால், விஷ்வக்ஸேனாராதனத்துக்கு முன்பு, அது நன்றாக நடக்க வேண்டும் என்று ஒரு பூஜை உண்டோ! உலகிலே அப்படி ஒரு பூஜை கிடையாது. எல்லாப் பூஜைக்கும் முதற்பூஜை விஷ்வக்ஸேனர் பூஜைதான்.

இப்படி அனந்த, கருட, விஷ்வக்ஸேனர்கள் மூன்று பேரும் நித்ய சூரிகள். ஸம்ஸாரத்தை விட்டகன்று, இனிமேல் திரும்பி வருதல் இல்லாத ஆனந்தத்தை அடைகிறார்களே, அவர்கள் நித்ய சூரிகள். எம் பெருமானிடத்தில் கைங்கர்யம் என்கிற பாக்யத்தை இவர்கள் அடைகிறார்கள். மறுபடியும் பிறத்தல் என்பது இல்லாத இவர்களுக்கு, முக்தாத்மாக்கள் என்று பெயர். இவர்களை வைகுண்டத்திலே பரிபாலனம் பண்ணிக் கொண்டிருப்பவன் பரமாத்மா.

"எம்.பி.யான நீங்க பார்லிமெண்ட்லே ஒருமுறை கூட வாய் திறக்கலேன்னு தொகுதி மக்கள் புகார் சொல்றாங்களே."

"சுத்தப் பொய். பலமுறை கொட்டாவி விட்டிருக்கிறேனே..."

- அஸ்வினி



இதனால்தான் 'பூதாத்மா பரமாத்மாச முக்தானாம் பரமாகதி': என்கிறது சஹஸ்ரநாமம்.

இதேதான் கீதையிலும் வருகிறது. பீஷ்மருடைய வாக்கு, பகவானுடைய வாக்கு இரண்டும் ஒன்றுதான்.

ஒரு முக்தனுக்குத்தான் அந்தப் பரமாத்மா கதி என்று இல்லை... முக்தானாம் - பல பேர் முக்தி அடைந்து வைகுண்டம் சென்று அவனுக்குக் கைங்கர்யம் பண்ணுகிறார்கள்.

ஜீவகோடிகள் எத்தனை இருக்கின்றன உலகத்திலே... கணக்கு பண்ண முடியுமா அவற்றை! கணக்கே பண்ண முடியாது!

ஒரு குழந்தை, பாட்டியிடம் நித்யம் கதை சொல்லச் சொல்லி ஹிம்ஸை பண்ணும். கதை சொன்னால்தான் அது தூங்கும். பாட்டி கஜேந்திர மோக்ஷ கதையைச் சொன்னாள். அது கேட்டுக் கொண்டே இருந்தது. அது முடிந்தபோது 'இன்னொரு கதை சொல்லு' என்றது. ஹிரண்ய கசிபு கதையைச் சொன்னாள் பாட்டி - பிரஹலாதன் கதை. அப்புறம் வாமன சரித்திரம் சொன்னாள், த்ருவ சரித்திரமும் சொன்னாள். கேட்டுக் கொண்டே இருக்கிற குழந்தை, தூங்கவே மாட்டேன் என்கிறது. இரவு பன்னிரண்டு மணி ஆகிவிட்டது. எத்தனைநாழி கதை சொல்வாள் அந்தப் பாட்டி! பார்த்தாள்! 'ஒரு ஊரில் நிறைய, அம்பாரமாக நெல் குவித்திருந்தது...' என்று ஆரம்பித்துச் சொல்லலானாள். 'ஒரு குருவி வந்தது; ஒரு நெல்லைக் கொத்திக் கொண்டு போயிற்று... இன்னொரு குருவி வந்தது. இன்னொரு நெல்லைக் குத்திப் போயிற்று! இப்படியே சொல்லிக் கொண்டேயிருக்கிறாள் பாட்டி.

"எத்தனை நாழி இப்படியே சொல்லுவே?" என்றது குழந்தை.

"அம்பாரமாய்க் குவித்துள்ள நெல்லு தீருகிற வரைக்கும்" என்றாளாம் பாட்டி!

"போ, பாட்டி!" என்று குழந்தை அலுத்துக் கொண்டு தூங்கிவிட்டது.

இந்த நெல்மணி மாதிரிதான் பூமியிலே உள்ள ஆத்மாக்களுக்கு எண்ணிக்கையே கிடையாது. உலகிலே இருக்கிற நட்சத்திரங்களை எண்ண முடியுமா? மணலை எண்ண முடியுமா?

அந்த மாதிரியே 'முக்தானாம்' என்று சொன்னால், முக்தாத்மாக்கள் - அந்த நித்யசூரிகள் கோஷ்டியிலே போய் நின்று ஸேவிக்கிறார்கள் இவர்கள்.

(வளரும்)

கல்வியறிவு (88.11 சதவிகிதம்) மிகுந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் ஈவ் டீஸிங், வரதட்சிணை ஆகிய இரண்டு பிரச்னைகள் மட்டும் தீவிரமாகத் தொடர்கின்றன. கல்வியறிவு இருந்தும், விழிப்புணர்வு இல்லாததுதான் இதற்குக் காரணமா? நாகர்கோவில் இந்துக் கல்லூரியில் முதுகலை 'சமூகப் பணி' பயின்று வரும் ரமாதேவி, ஜிஸா, விஜயலட்சுமி, பொன்னுலட்சுமி ஆகிய நான்கு மாணவிகள் துல்லியமாய் அலசுகிறார்கள்.

ரமாதேவி : கன்னியாகுமரி பெண்கள் அப்படி என்னதான் பாவம் பண்ணினாங்களோ. காலம் காலமா, இங்கே ரொம்ப கஷ்டப்பட்டிருக்காங்க. அறுபது எழுபது வருஷத்துக்கு முன்னாடி இங்கே ஜாக்கெட் போடக் கூட உரிமையில்லை. அதையே போராடித்தான் வாங்கியிருக்காங்க. நம்ம காலத்துலே ஈவ் டீசிங், வரதட்சிணை இரண்டும் பெண்களுக்குப் பெரிய தலைவலியா இருக்கு.

ஜிஸா : முதல்லே ஈவ் டீசிங்கை எடுத்துக்குவோம். இங்கே இருபாலர் கல்லூரிகளுக்குக் குறைவு இல்லை. அப்படி இருந்தும் பெண்களைப் புதுசா பார்க்கிற மாதிரி பார்க்கறாங்க. இத்தனைக்கும் நம்ம மாவட்டத்திலே கவர்ச்சிகரமான ஆடைகளையும் பெண்கள் அணியறது இல்லே. அதிகபட்சம் சுடிதார்தான்.

விஜயலட்சுமி : எனக்கென்னவோ மகளிர் கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு, மாணவர்களோடு பழகும் வாய்ப்பு குறைவா இருக்கு. புதுசா ஒரு பையன் வந்து பேசும் போது, கிராமத்திலிருந்து வந்து படிக்கும் பெண்கள் ரொம்ப எக்ஸைட் ஆறாங்க. பொதுவா மாணவிகள் அவ்வளவு சீக்கிரம் எதிர்ப்பைக் காட்டமாட்டாங்க. இதைத் தவறா நினைச்சுகிட்டு, மறுபடி மறுபடி பின் தொடரும்போதுதான் ஈவ் டீஸிங் சூடு பிடிக்குது.

பொன்னுலட்சுமி : பொண்ணுங்க ஆரம்பத்திலேயே நெருப்பு மாதிரி பிஹேவ் பண்ணினா, பசங்க திரும்பிப் பார்ப்பாங்களா?

ரமாதேவி : ஒரு விஷயத்தை எல்லோரும் மறந்துட்டீங்க. நம்ம மாவட்டத்துல பெண்கள் ரொம்ப துணிச்சலானவங்க. ஆண்களுக்குக் கொஞ்சமும் சளைக்காமல் படிப்பு, வேலை, எல்லாத்துலயும் ஜமாய்க்கிறாங்க. இதை எல்லா ஆண்களும் ஆரோக்கியமா எடுத்துக்குவாங்கன்னு சொல்ல முடியாது. பெண்கள் மேலே வர்ற இது மாதிரி காழ்ப்புணர்வுதான், ஈவ் டீசிங் நடக்க அடிப்படையிலே காரணமாக இருக்கணும்.

ஜிஸா : இதை ஏத்துக்கறேன். பெண்கள் எல்லோரும் படிச்சிருக்கிறதுனாலே, தைரியமாக போலீஸ் ஸ்டேஷன் படியேறிப் போய் புகார் கொடுக்குறாங்க. அதனாலே கூட நம்ம மாவட்டத்திலே ஈவ்டீசிங் குற்றம் அதிகம் பதிவாகுற

> **ஒரு சாதாரண மாப்பிள்ளைக்கு ஐம்பது சவரன் நகை, ஒரு லட்சம் பணம் கொடுக்குறாங்க. இதுதான் இங்கே ரொம்பக் குறைஞ்ச வரதட்சிணை.**



• பொன்னுலட்சுமி



• விஜயலட்சுமி

மாணவிகள் அலசல்...

மாதிரி ஒரு தோற்றம் தெரியுது.

விஜயலட்சுமி : எப்படி இருந்தாலும் ஈவ் டீசிங் காரணமா, பெண்கள் தற்கொலை வரைக்கும் போறது முட்டாள்தனம். காவல் நிலையத்துக்குப் போக பயப்படும் பெண்கள், அவங்கவங்க கல்லூரியில் இருக்கும் ஈவ் டீசிங் கம்ப்ளைண்ட் பாக்ஸ்லியே புகார் எழுதிப் போடலாம். நம்ம கல்லூரியிலே கூட இதுமாதிரி விஷயங்களுக்கு கவுன்சலிங் செல் இருக்கே.

ரமா தேவி : இது மட்டும் போதாது. மாணவ, மாணவிகளுக்குக் கட்டாயமா 'மெடிட்டேஷன்' வகுப்புகள் நடத்தலாம். ரோட்டரி, குமரிக் கழகம் நடத்தும் யூத் ஃபெஸ்டிவல்ல மாணவ - மாணவிகள் கலந்து நட்பைப் பரிமாறிக்கலாம்.

பொன்னுலட்சுமி : ரமா சொல்றமாதிரி, இதையெல்லாம் செஞ்சா ஈவ் டீசிங் இல்லாமல் பண்ணிடலாம். ஆனால் வரதட்சிணையை எப்படி ஒழிக்கிறது? ஒரு சாதாரண மாப்பிள்ளைக்கு ஐம்பது சவரன் நகை, ஒரு லட்சம் பணம் கொடுக்கறாங்க. இதுதான் இங்கே ரொம்பக் குறைஞ்ச வரதட்சிணை. பட்டம் படிச்ச ஆண்கள் வரதட்சிணை வாங்கக் கூடாதுன்னு நினைக்கிறாங்களா? படிப்பு ஏற ஏற, வரதட்சிணையும் ஏறுது. பெண் எவ்வளவு படிச்சிருந்தாலும் அதைப்பத்தி கவலை இல்லை.

ரமாதேவி : வரதட்சிணை இங்கே அதிகமிருக்கிறதுக்குக் காரணம், நம்ம மாவட்டம் ரொம்பச் செழிப்பா இருக்கு. வருமானம் அதிகம். இதைவிட சில ஜாதிகள்ளே வரதட்சிணையை அள்ளி அள்ளிக் கொடுக்கறதைப் பெரிய கௌரவப் பிரச்னையா நினைக்கிறாங்க. பாதிக்கப்படுறது என்னவோ ஏழைப் பெண்கள்தான்.

ஜிஸா : இந்த நிலைமை எப்போதான் மாறும்? வரதட்சிணை கேட்கிற மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்க, பெண்கள் ஏன் மறுக்கறதில்லை?

விஜயலட்சுமி : அப்பா, அம்மா வலுக்கட்டாயமா நிர்பந்திக்கிறாங்க. அவங்களை எதிர்த்து நம்ம மாதிரி பொண்ணுங்க என்ன செய்ய முடியும்! அப்படியே எதிர்த்தாலும், காலா காலத்துலே கல்யாணம் ஆகாமல் வீட்டிலேயே இருக்க வேண்டியதுதான்.

ரமா : வரதட்சிணை ஒழிய ஒரே ஒரு தீர்வுதான் இருக்கு. முதல்லே பெற்றோர்கள் மாறணும். அதுக்கு தலைமுறைகள் மாறணும். இப்போ நம்ம மாவட்டத்திலே குரும்பனை கிராமத்தைப் பாருங்க! அங்கே வாங்கவும் கூடாது, கொடுக்கவும் கூடாதுன்னு முடிவு எடுத்து, செயல்படுத்துகிறாங்க. அதுமாதிரி ஊருக்கு ஊர் நடக்கணும்.



• ரமாதேவி

"குரும்பனை கிராமத்தைப் பாருங்க!"



• ஜிஸா



தஞ்சைப் பெரிய கோயில் கோபுரத்தில் தொப்பிஅணிந்த ஓர் அயல்நாட்டவரின் சிற்பம் உள்ளது. அது யார் என்பது பெரிய மர்மம்! பலவித கருத்துக்கள். (சீன வியாபாரி? மார்க்கோபோலோ) கல்கி, நவம்பர் 2ம் தேதி இதழில், க.மேனகா, அந்த தொப்பிக்காரர் 'ரோலண்ட் கிரேப்' என்பதாகக் கூறி, அவர் யார் என்பதற்கும் விளக்கம் தந்துள்ளார். இதைப் படித்துவிட்டு திருவான்மியூர் கல்கி அன்பர் ராமஸ்வாமி, எழுதுகிறார், "அந்தத் தொப்பிக்காரன் ஏன், சீன வர்த்தகனாக வேஷம் போட்ட வல்லவரையன் வந்தியத்தேவனாக இருக்கக் கூடாது?" என்று. தாராளமாக இருக்கலாம். மார்க்கோபோலோவாக இருக்கலாம் என்றால், வந்தியத்தேவனாகவும் இருக்கலாம் தானே!

• • •

அது சரி, இந்த மர்மத்தைப் பற்றி 'கல்கி' என்ன எழுதியுள்ளார்? "நம் தந்தையர் செய்த விந்தைகள்' நூலில் விடை இருக்கிறது: "இந்தத் தொப்பித் தலை பின்னால் நாயக்கர்களின் ஆட்சியில் அமைக்கப்பட்டது என்றும், அந்தக் காலத்தில் தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்கள் குடியேறியிருந்தபடியால் அது ஒரு டேனிஷ்காரரின் தலையாக இருக்கலாம் என்றும் சொல்கிறார்கள்!" ... ஆக மொத்தத்தில் மர்மம் நீடிக்கிறது!

• • •

கல்கியின் வாழ்க்கை வரலாறு (பொன்னியின் புதல்வர்) எழுதிய 'சுந்தா' தமது வரலாற்று நாயகனை, 'மர்மிஸ்ட்' என்றே அழைப்பார். மர்மத்தைப் புகுத்தாமல் 'கல்கி' கதை எழுதியதில்லை. அந்த மர்மங்களிலெல்லாம் பெரிய மர்மம், பொன்னியின் செல்வனில் ஆதித்த கரிகாலனைக் கொன்றது யார் என்ற மர்மம்தான்! 'கல்கி' இதற்குச் சரியான விளக்கம் தராமல், வாசகர்களின் ஊகத்துக்கே விட்டிருக்கிறார். ஏன்? சதாசிவ பண்டாரத்தார் எழுதிய 'பிற்காலச் சோழர் வரலாறு' என்ற நூலைக் கருத்தூன்றிப் படித்தால் புரியும்!

• • •

உலகிலே விடுவிக்கப்படாத மர்மங்கள் எவ்வளவோ உள்ளன. படத்தில் இடம் பெற்றுள்ள கோபுரங்கள் திபெத்தில் உள்ளன. இவை போன்ற ஏராளமான கோபுரங்கள், திபெத் - சீனா எல்லைப் பகுதியில் நட்சத்திர வடிவ முனைகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. அறுபது மீட்டர் உயரம், சில, கிராமங்களில் கட்டப்பட்டுள்ளன; சில, மூவாயிரம் மீட்டர் உயரத்தில். மலைப் பகுதிகளில் யார் கட்டினார்கள்? எதற்காக? பல தொல்பொருள் ஆய்வாளர்கள் திபெத்துக்குப் படையெடுத்தும் இதுவரை பதில் இல்லை! ஆச்சரியம்: இவற்றில் கற்களை ஒன்றோடொன்று இணைக்கும் கலவை மிக

விடை காணாத

மிகக் குறைவு. ஆயினும் பல நில நடுக்கங்களைச் சமாளித்து கம்பீரமாக நிற்கின்றன.

• • •

நான் கல்லூரியில் படித்த நாட்களில் உடற்கூறு கற்பிக்கும் புத்தகம் Best & Taylor எழுதியது. இன்றுகூட அது டாக்டர் படிப்புக்கு, தொடக்கப் பாடப் புத்தகமாகப் பயன் படும். அதில் உணவுக் குடல் பற்றி விவரிக்கும்போது, "இரைப்பை தன்னைத்தானே ஏன் ஜீரணிக்கவில்லை?" என்று ஒரு கேள்வியை எழுப்பி, "இன்றுவரை பதில் இல்லை" என்று நூலாசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சற்று நீங்களும் யோசியுங்கள். "வயிறு உயிரோடு இருக்கிறது, அதனால்" என்ற வாதம் செல்லாது. ஏனெனில் நீங்கள் உயிருடன் ஒரு ஜீவராசியை விழுங்கினால், அது உங்கள் இரைப்பையில் ஜீரணமாகிவிடும்! இரைப்பை தன்னைத்தானே ஏன் ஜீரணிக்கவில்லை? மர்மம் நீடிக்கிறது!

• • •

மர்மங்களை விடுவிக்க முயற்சி செய்வதில் எப்போதுமே ஒரு சுவை உண்டு. அதனால்தான் விடுகதைகளில் தொடங்கி, ஆறு வித்தியாசங்கள் வரை பத்திரிகைகளில் புதிர்கள் இடம் பெறுகின்றன.

• • •

இந்தப் பிரபஞ்சமே ஒரு மர்மம்தான். சூரிய மண்டலத்தை மட்டுமே எடுத்துக் கொண்டாலும், ஒரு நியதிக்கு உட்பட்டு சனி, வியாழன், செவ்வாய் முதலிய கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. ஆகர்ஷண சக்தி ஒன்றை ஒன்று ஈர்க்க, ஒரு குறிப்பிட்ட பாதையில் சூரியனை கிரகங்கள் வலம் வருகின்றன. இந்தச் சக்தியில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டாலும், காலப் பிரமாணம் தப்பி, விண்வெளியில் கிரகங்கள் பறந்து போய்விடும்; அல்லது சூரியன்பால் ஈர்க்கப்பட்டு எரிந்து சாம்பலாகி விடும்.

செம்பியன்

இவ்வாறு நேராமல் ஈர்ப்புச் சக்தியையும் காலப் பிரமாணத்தையும் ஒரே சீராக வைத்திருப்பது யார்? சூரியனுக்கும் கிரகங்களுக்கும் இடையே உள்ள தூரத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டு, ஆங்காங்கே கிரகங்களை நிலை நிறுத்தியது எது?

• • •

இந்த சூரிய மண்டலத்தைப் போலவே, பிரபஞ்சத்தில் கோடானு கோடி சூரிய மண்டலங்கள் உள்ளன. இந்தப் பிரபஞ்சம் எல்லை இல்லாதது என்று கூறி வந்தார்கள். இப்போது விஞ்ஞானிகள், "எல்லை இல்லாதது மட்டுமல்ல; மேலும் வளர்ந்து கொண்டே போகிறது" என்கிறார்கள்! அதாவது, எல்லையற்ற தன்மை மேலும் வளர்கிறது! இந்தப் பிரபஞ்சம் ஒரு மர்மமான கருமை. அந்த மர்மக் கருமை, இனம் புரியாத ஒரு சக்தியால் இழுக்கப்பட்டு மேன்மேலும் வளர்கிறது. இனம் புரியாத அந்தச் சக்தி எது? வளர்ந்து கொண்டே போகும் மர்மக் கருமையில் ஒளி சிந்தும் புதிய புதிய நட்சத்திர சூரியன்களும், அவற்றைச் சுற்றி வரும் புதிய புதிய கிரகங்களும் எவ்வாறு சிருஷ்டிக்கப்படுகின்றன? ஆராயப் புகும் விஞ்ஞானிகள் ஏதோ ஒரு "சூப்பர் ஸ்டாரை" நினைத்து அடக்கம் பெறுகின்றனர்.

• • •

"ராமசாமி சேர்வை கொலைக் கேஸிலே ஒரு பெரிய மர்மம் இருக்குன்னு தோணுது ஸார்!"

"யோவ்! முடிஞ்சு போன கேஸிலே என்னய்யா மர்மம் இருக்க முடியும்?"

"நான்தான் ராமசாமி சேர்வை. நான் கொலை செய்யப்பட்டதா நீங்க எப்படி முடிவு கட்டினீங்கன்னு கேட்டுக்கிட்டு, ஸ்டேஷன் வாசல்ல ஒருத்தர் நிக்கறாரு, ஸார்!" •

மர்மங்கள்!

நேற்று...இன்று...நாளை...

குமரிக்கும் கேரளத்திற்கும் ஒரே ஒரு மலைத் தொடர்தான் இடைவெளி. கிட்டத்தட்ட கேரளம் போன்ற நில அமைப்பு, நதிகள், அருவிகள், குளுகுளு பசுமை, அறுபத்து எட்டு கிலோ மீட்டர் நீளம் கொண்ட கடற்கரை, சைவ, வைணவ, கிறிஸ்தவ ஆலயங்கள் என்று சுற்றுலாத் தலங்களுக்குக் குறைவில்லாத மாவட்டம். கேரள அரசோ, சுற்றுலாத் துறையை ஒரு பெரிய தொழிலாக உருவாக்கி தூள் கிளப்புகிறது. ஆனால் குமரி, பக்கத்து வீட்டைப் பார்த்தும், திருந்தாமல் சோர்ந்து கிடக்கிறது. எப்படியிருப்பினும் சர்வதேச சுற்றுலாத் தலமாக விளங்கும் குமரியில் ஒரு ரவுண்ட் வரலாம் வாருங்கள்.

திருநெல்வேலி வழியாக ஆரல்வாய்மொழி தாண்டியதுமே, காற்றோடு கன்னியாகுமரி மாவட்ட எல்லையும் வர்வேற்கிறது. மாவட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு மலைகள் மற்றும் வனப்பகுதி என்பதால்தான், இத்தனை குளிர்ச்சி. மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோவில் வழியே முதலில் குமரிமுனையை அடைந்தால், கவின்மிகு கடற்கரையில் அன்னை பகவதியையும் சேர்த்து ஆறு துறவிகளின் நினைவாலயங்கள், நெஞ்சை நிறைக்கின்றன. (கன்னியாகுமரி அம்மனாக அன்னை ஆதிபராசக்தி, ஆதிசங்கரர், சுவாமி விவேகானந்தர், அய்யன் திருவள்ளுவர், காந்தியடிகள், காமராஜர்) மீனவ மக்களோடு ஜாதிமதபேதம் மறந்து, குமரி மக்கள் வழிபடும் உபகார மாதா தேவாலயம், குமரிக்குக் கூடுதல் பெருமை சேர்க்கிறது. அங்கிருந்து குமரியை ஒட்டிய அழகிய கடற்கரைகளில் நடந்தால் ‘சொத்தவிளை’ பீச். இன்னும் நாகர்கோவிலிலிருந்து ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில், சங்குத்துறை பீச், முட்டம் பீச் என்று மாசுபடாத கடற்கரைகள் நிறைய.

நாகர்கோவில் நகரில் நாகராஜா கோயில், கோட்டாறு சவேரியார் கோயில் என்று பல தொன்மையான


• பசுமை...
• சங்குத்துறை
• திற்பரப்பு அருவி



ஆன்மிகத் தலங்கள் ஒருபுறம் என்றால், நாகர்கோவிலை ஒட்டிய சுசீந்திரம் மும்மூர்த்தி கோயில், பெண்களின் சபரிமலை என்று அழைக்கப்படும் மண்டைக்காடு பகவதி கோயில் என்று சுற்றிச் சுற்றி கவின்மிகு கட்டிட, சிற்பக் கலைகளுக்குப் பெயர் பெற்ற கோயில்கள்.

இயற்கை அன்னை ஆட்சி செய்யும் குமரியில் வற்றாத பல அருவிகள் கண்கொள்ளாக் காட்சி. அவற்றில் திற்பரப்பு அருவியும், உலக்கை அருவியும் அவசியம் காண வேண்டிய தண்ணீர்க் கவிதைகள். மலையழகு காண குமரியை ஒட்டிய மருந்துவாழ் மலையும், நாகர்கோவிலை அடுத்த பூதபாண்டியில் தடாகை மலைத் தொடரும் பிரமிக்க வைக்கும். இந்த மலைகளைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் ஏரிகள், நெல்வயல்கள், வாழைத் தோட்டங்களின் பசுமையில் மனம் லயித்துப் போகும்.

குமரி மாவட்ட வரலாற்றுச் சின்னங்களில் முக்கியமானவை, குமரி கடற்கரையை ஒட்டிய வட்டக் கோட்டை, உதயகிரிக் கோட்டை, பத்மநாபபுரம், இரணியல் அரண்மனைகள். பாசன வசதி வேண்டி இரண்டு மலைகளுக்கு இடையே கட்டப்பட்ட மாத்தூர் தொட்டிப் பாலம் ஒரு பொறியியல் அதிசயம். நீலகிரிக்கு அடுத்தபடியாக அதிக மழைப் பொழிவு பெறும் பசுமைப் பிரதேசமான குமரிக்கு வருடம் முழுவதுமே சுற்றுலா சீசன்தான்!



* பத்மநாபபுரம் அரண்மனை





சுற்றுலா சொர்க்கம்!

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்: புத்தாண்டும் அதுவுமா நல்ல உற்சாகமான சூழ்நிலை உண்டாகும். பூர்வீக சொத்து விவகாரம் அனுகூலம் தரும். குருபலம் நிறைஞ்சு இருக்கிறதனாலே சுப காரியங்கள் நிறைவேறும்.

ரிஷபம்: பெண்களுக்கு எல்லா வகையிலும் திருப்தியான வகையில் காரியங்கள் நடக்கும். ஆரோக்கிய மேன்மை, தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்பெகுலேஷன் வகையில் நிதானம் தேவை. விஷயம் சின்னதோ, பெரிசோ, பெரியவங்க ஆலோசனையைக் கேட்டு, மதிச்சு நடங்க.

மிதுனம்: சுயதொழில், வியாபார வகையில் அனுகூலமான திருப்பம் உண்டாகும். வரவேண்டிய பாக்கித் தொகை வந்து சேரும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் அடக்கி வாசிப்பது நல்லது. கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பட பட வார்த்தைகள் கூடாது. குறிப்பாக மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகாத வண்ணம் செயலாற்றுங்கள்.



ஹேமா ஸ்ரீபாலுக்கு (கடகம்) தொட்டதெல்லாம் பொன்னாகுமாம்!

கடகம்: புத்தாண்டும் அதுவுமா, தொட்டதெல்லாம் பொன்னாகும் வாய்ப்பு அதிகமிருக்கு... குறிப்பா கல்வி சம்பந்தமான விஷயங்களில் ஏறுமுகம்தான்! உத்தியோகம் சம்பந்தமாக வெளியூர்/ வெளிநாடு செல்லும் பயணம் படு திருப்தியாக அமையும். குரு பகவான் 2ல் பலம் நிறைந்து இருப்பதால், சுபமங்கள காரிய முயற்சி கைகூடும்.

சிம்மம்: ஆழம் தெரியாமல் காலை விட்டால் அவஸ்தையாகிவிடும். புதிய முயற்சிகள் இப்போது வேண்டாம். காரியங்களைத் தொடங்கும் முன், லாப நஷ்டம் யோசிக்காமல் இறங்கவே கூடாது. உணவு சம்பந்தப்பட்ட தொழிலில் லாபம் எதிர்பார்க்கலாம்.

கன்னி: கணவன் - மனைவி உறவில் இலேசான சலசலப்பு ஏற்பட வாய்ப்பிருக்கு. பேச்சில் கவனம் தேவை. கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் எதிர்பாராத அனுகூலம் அடைவார்கள். பயணங்களில் எச்சரிக்கை இருக்கட்டும். பண வசதிக்குப் பஞ்சமில்லை.

துலாம்: சுயதொழில், வியாபாரத்தில் இதுவரை இருந்து வந்த சிக்கல்கள் யாவும் தீர்ந்து தாராளமான பணவசதி ஏற்படும். பண நடமாட்டம் அதிகமானதுமே, சுபச் செலவுகள் காத்திருக்கின்றன. மகிழ்ச்சியோடு கொண்டாடுங்க! உத்தியோகஸ்தர்களுக்கு மறைமுக, நேர்முக எதிர்ப்புகள் யாவும் விலகும்.

விருச்சிகம்: குடும்ப தனஸ்தானத்தை குரு பார்ப்பதால் குடும்பத்தில் சுப காரியங்கள் நிறைவேறும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். கோர்ட், வழக்குகளில் ஜெயம் ஜெயமே. வெளிநாடு சென்றிருந்த மக்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

தனுசு: தெளிவான மனநிலையோட காரியம் செய்து பாராட்டுப் பெறுவீர்கள். பிரபு தனவான்களின் ஆதரவு தன்னாலேயே அமையும் என்பதால் அந்த விஷயத்திலும் நீங்க லக்கிதான்! கூட்டுத் தொழில்களில் வளர்ச்சி உண்டாகும்.

மகரம்: உத்தியோகத்தில் சகல விதத்திலும் அனுகூலமான திருப்பம் ஏற்படும் கால கட்டம் இது. சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் வெற்றி நிச்சயம். புத்தகம், எழுத்து, பத்திரிகை ஆகியவை ஆதாயம் கொண்டு வரும். புதிய வீடு கட்டவோ, அல்லது வாங்கவோ தோதான சூழ்நிலை அமையும்.

கும்பம்: புனிதக் காரியங்களில் ஈடுபட்டு புத்துணர்ச்சி அடைவீர்கள். நிர்வாகத் துறையில் இருப்பவர்கள் சுதந்திரமாகவும், திறமையாகவும் செயல்பட்டு, பாராட்டுப் பெறும் சூழ்நிலை உருவாகும். கணவன் - மனைவி உறவு நிலை இனிமையாக இருக்கும்.

மீனம்: பெண்களுக்கு உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உஷ்ண சம்பந்தமான நோய்கள் தாக்கக் கூடும். வார முற்பகுதியில் எடுத்த காரியங்களில் தாமதம், சிறு தடைகள் நேர்ந்து பிற்பகுதியில் தாமாகவே விலகும். இருந்தும் புதியவர்களிடம் கவனமாகப் பழகவும். 10ல் சூரியன் குரு பார்வை என்பதால், அரசாங்க விவகாரம் அனுகூலமாகும்.

அஞ்சலி

எம்.ஜே.கோபாலன்





மைலாப்பூரில் ஒரு ஹாக்கி மேட்ச் நடந்து கொண்டிருந்தது. தலையில் கட்டுக் குடுமி, வேஷ்டி சகிதம் சென்டர் ஃபார்வர்டு பொசிஷனில் அபாரமாக ஆடிக் கொண்டிருந்தார் அநத இளைஞர். திடீரென்று புகுந்து அவர் பந்தை அடித்த வேகத்தில், கோல் போஸ்ட்டே இரண்டாகப் பிளந்து கொண்டது. அதைப் பார்த்து பிரமித்துப் போனார் முருகேச முதலியார். அன்றைக்கே அந்த இளைஞரை கடைக்கு அழைத்துக் கொண்டு போய், ஹாக்கி ஆட்டக்காரருக்குரிய ஒரு செட் உடை மற்றும் ஷூ ஆகியவற்றை வாங்கிக் கொடுத்து, வாழ்த்தினார். பாராட்டிய முதலியார், ஹிந்து பத்திரிகையின் விளையாட்டுத் துறையின் அன்றைய மூத்த பத்திரிகையாளர். அவரால் பாராட்டப்பட்ட இளைஞர் எம்.ஜே. கோபாலன்.

இந்தியாவில் உயிரோடு இருக்கும் மிக மூத்த கிரிக்கெட் ஆட்டக்காரர் என்ற பெருமையுடன் வாழ்ந்த எம்.ஜே. கோபாலன், அண்மையில் சென்னையில் காலமானார். ஹாக்கி, கிரிக்கெட் என்று இரண்டு விளையாட்டுத் துறைகளிலும் இந்திய அணிகளில் இடம் பெற்றவர் எம்.ஜே. கோபாலன்.

இவரது முழு பெயர் மொரப்பாக்கம் ஜோஸியம் கோபாலன். பரம்பரையாக ஜோதிடத்தில் ஈடுபட்டு வந்த குடும்பத்திலிருந்து வந்தவர் அவர். திருவல்லிக்கேணியில் செட்டிலான குடும்பம். அங்கே இருக்கும் கெல்லட் ஹைஸ்கூலில்தான் படித்தார்.

குடும்பச் சூழ்நிலை காரணமாக, மேற்கொண்டு கல்லூரிக்குப் போக முடியவில்லை. ஹாக்கியில் மட்டுமில்லாமல், கிரிக்கெட்டிலும் ஆர்வத்துடன் விளையாடினார் கோபாலன்.


திருவல்லிக்கேணி கிரிக்கெட் கிளப்பின் அணியில் முப்பது ஆண்டுகள் ஆடினார். மைலாப்பூர் கிரிக்கெட் கிளப்புக்கு எதிரான லீக் மேட்ச்களில் இவர் ஆடின அபாரமான ஆட்டம், இவரை திருவல்லிக்கேணி, மைலாப்பூர்வாசிகள் மத்தியில் ஹீரோவாக்கியது. அதே நேரத்தில் ஒய்.எம்.ஐ.ஏ, எம்.யூ.சி கிளப்களின் ஹாக்கி அணிகளிலும் இடம் பெற்று, ஆடி அசத்தியிருக்கிறார்.

கிரிக்கெட்டில் இவர் பேட்ஸ்மென் மட்டுமில்லை, பௌலரும்கூட. 1934ல் மைசூர் அணிக்கு எதிராக ரஞ்சிகோப்பை போட்டியில் முதல் பந்தை வீசியவர் இவர் தான்...!

சேப்பாக்கத்தில் ஒரு கிரிக்கெட் மாட்சில் ஆடி முடித்த கையோடு, சைக்கிளில் விரைந்து எம்.யூ.சி கிரவுண்டுக்கு ஹாக்கி மேட்ச் ஆட, சைக்கிளை மிதித்துக் கொண்டு புறப்பட்டு விடுவார். இவரது திறமையையும் விளையாட்டு ஆர்வத்தையும் பார்த்த பர்மா - ஷெல் நிறுவனத்தின் ஜான்ஸ்டோன், தன் நிறுவனத்திலேயே கோபாலனுக்கு வேலை கொடுத்தார்.

கிரிக்கெட்டை ஒரு ஜென்டில்மேன்களின் ஆட்டம் என்று சொல்லுவார்கள். சூதாட்டம் அது, இது என்று உள்ளே புகுந்து, அந்தப் பெயருக்கு களங்கம் ஏற்பட்டு விட்டது என்றாலும், 'ஜென்டில்மேன்' என்று அனைத்துத் தரப்பாலும் ஒருமுகமாய் பாராட்டப்பட்டவர் இவர்.

\- மௌலி


ஜல்லு மல்லு
—கதிர்
டாக்டர், என்னால ஒரு வாரமா சரியா சாப்பிட முடியல, தூங்க முடியல.
பயப்படறதுக்கு ஒன்றுமில்ல... எக்ஸ்கியூஸ் மீ...
என்ன... வீடு கட்ட இன்னும் ஒரு லோடு செங்கல் தேவையா?.. சரி... சரி...
பாருங்க... தூக்கம் வரமாட்டேங்குதுங்கறீங்க. ஹார்ட் பிராப்ளமாகூட இருக்கலாம். ஹார்ட் சர்ஜரி பண்ணிப் பார்க்கணும்.
பாத்ரூமுக்கெல்லாம் மார்பிள் போடணுமா..? பாக்கறேன்...
பசிக்க மாட்டேங்குதுன்னு வேற சொல்றீங்க... கிட்னிய அறுத்துப் பாத்துடறது நல்லதுன்னு படுது...
ப்ளீஸ்... டாக்டர். கொஞ்சம் சின்ன வீடா கட்டுங்க.
முதல்ல அப்படித்தான் நெனச்சிருப்பாரு. உன்னைப் பார்த்தப்புறம்.. பெரிய வீடா கட்டறதா முடிவு பண்ணிட்டாரு.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCH)
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka

